## கிழக்கில் சுமார் 25,000 ஏக்கர்களுக்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் காணிகள் தமிழர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன

ஷிப்லி பாருக்
கிழக்கு மாகாண சபை உறுப்பினர்





## வரலாற்று முக்கியத்துவம் மிக்க தருணத்தில் துரோகமிழைக்கத் துடிக்கும் அரசியல்வாதிகள்




# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 379 • 13 ஒக்டோபர் 2017 வெள்ளிக்கிழமை • முஹர்ரம் 1439 • விலை 40.00







# எல்லை நிர்ணயப் பணிகள் ஆரம்பம்

## மக்கள் விழிப்பாக இருக்குமாறு வேண்டுகோள்



மாகாண சபை தேர்தலுக்கான எல்லை நிர்ணயப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளது. இலங்கையில் முதன் முறையாக மாகாண சபைக்குரிய தேர்தல் தொகுதிகள் நிர்ணயம் செய்யப்படவுள்ள நிலையில் முஸ்லிமல்லாத சமூகங்களை சேர்ந்த மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் தொகுதி நிர்ணயம் குறித்த சிபாரிசுகளை முன்மொழிந்து வருகின்றனர்.

முஸ்லிம் சமூகத்தில் ஒரு முறைப் படுத்தப்பட்ட அமைப்பில் சிவில் சமூக அமைப்புக்களுக்கூடாகவும் அரசியல் கட்சி சார்ந்த அடிப்படையிலும் எல்லை நிர்ணயம் தொடர்பான சிபாரிசுகளை வழங்க முடிகிறது.

எவ்வித பாரபட்சங்களுமின்றி எல்லோருக்கும் முன்மொழிவுகளை வழங்க முடிகின்றது. இந்நடவடிக்கைகள் ஏனைய சமூகத்தில் மிகப் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் முஸ்லிம் சமூகத்தில் (பக்.12)

## படையினருக்கு பயங்கரவாதத்துக்கு எதிரான பாதுகாப்புப் பயிற்சி



பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடுவதற்கான பயிற்சிகள் உட்பட்ட இராணுவப் பயிற்சியொன்றை அமெரிக்க இராணுவம் அண்மையில் திருகோணமலையில் நடத்தியது. CARAT (Cooperation Afloat Readiness and Training) எனும் இந்தப் பயிற்சி இலங்கைப் படைவீரர்களுக்கு நடத்தப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

கடல் பாதுகாப்புத் திறனை வளர்ப்பதற்கும் பங்காளிப் படைகளுக்கிடையே இணக்கமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமென வடிவமைக்கப்பட்ட இந்த ஐந்து நாள் பயிற்சியில் அமெரிக்க கப்பல்களும் பயங்கரவாதத்துக்கு எதிரான கடல் பாதுகாப்பு துணை அணியும் பங்கேற்றதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

(பக்.12)

## 4.7 வீத வளர்ச்சியை காட்டுங்கள்



உலக பொருளாதார வளர்ச்சியுடன் ஈடு கொடுக்கும் வகையில் இலங்கை யின் பொருளாதார வளர்ச்சி 2017 இல் 4.7 வீதமாகவும் 2018 இல் 4.8 வீதமாகவும் இருக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் விதித்துள்ளது.

இயற்கை அனர்த்தங்கள், சீர்திருத்தங்கள் என்பவற்றினால் இவ்வருடத்துக்கான பொருளா தார வளர்ச்சி 4.5 வீதம் என இலங்கை மத்திய வங்கி மதிப்பிட்டிருந்த போதும், இவ்வாண்டுக்கான உலக பொருளாதார வளர்ச்சி 3.6 வீதமாக பேணப்பட வேண்டும் என்ற சர்வதேச நாணய நிதியத்தின் தேவைப்பாட்டின் படியே இந்த வீதம் விதிக்கப்பட்டுள்ளது.

ஆசியாவின் பொருளாதார வளர்ச்சி வேகத்தில் பங்களாதேஷ் 7.1 வீத வளர்ச்சியுடன் முன்னணியில் நிற்கின்ற அதேவேளை இந்தியா 6.7 வீத வளர்ச்சியையும் பாகிஸ்தான் 5.3 வீத வளர்ச்சியையும் காட்டுவதாகவும், (பக்.12)

## ஐ.நா. அறிக்கையாளரின் முன்மொழிவுகளில் இலங்கைக்கு எந்தக் கடப்பாடுமில்லை



உண்மையைக் கண்டறிதல், நீதி, நஷ்டஈடு, மீள நிகழாமைக்கான உத்தரவாதம் என்பவற்றிலான ஐ.நா. அறிக்கையாளர் பப்லோ டி க்ரீப் உடைய அறிக்கையில் இலங்கைக்கு எந்தவிதக் கடப்பாடுகளும் இல்லை என வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் செப்டம்பர் மாதம் க்ரீப் முன்வைத்த அறிக்கையிலுள்ள முன்மொழிவுகளில் இலங்கை மக்களுக்குப் பயனுள்ள விடயங்கள் என கருதுபவற்றையே அரசாங்கம் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கும் என அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை குறிப்பிடுகிறது.

இம்மாத இறுதியில் இலங்கை வரவுள்ள ஐ.நா. அறிக்கையாளர் க்ரீப் தொடர்பில் ஊடகங்களில் வெளியான செய்திகளைத் தொடர்ந்து அமைச்சு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. (பக்.02)

## இலங்கை வரலாற்றில் அரச செலவினத்துக்கு அதிகூடிய ஒதுக்கீடு

இலங்கை வரலாற்றில் அதிகூடிய அரச செலவினங்களைக் கொண்ட நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலமாக 2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் அமைந்திருப்பதாக ஜே.வி.பி விமர்சித்துள்ளது.

கட்சித் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர் அநுர குமார இவ்வாறு குறிப்பிட்டார்.

2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தில் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கான ஒதுக்கீடுகள் அதிகரிக்கப் பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டு ஜனாதிபதிக்கான செலவீனமாக 6459 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. 2018 ஆம்



ஆண்டில் ஜனாதிபதிக்கு 9983 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விடவும் 3527 மில்லியன் ரூபா அதிகமாகும்.

அதேபோல பிரதமரின் செலவினமாக 2017 ஆம் ஆண்டில் 1254 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டில் இந்த ஒதுக்கீடுகள் 1772 மில்லியன் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரதமருக்கான ஒதுக்கீடுகள் 518 மில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.


ஆட்சியாளர்களுக்கான ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட்டு பொது மக்களுக்கான ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன. போக்குவரத்து அமைச்சுக்கான ஒதுக்கீடு கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 9 பில்லியனால் குறைக்கப்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றில் அதிகூடிய அரசாங்க செலவினங்களைக் கொண்ட நிதி ஒதுக்கீட்டுச் (பக்.02)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## இது எனது தீர்வு முன்மொழிவு

- அஷ்ரப் ஷிஹாப்தீன்

இங்கு தமிழீழம் என்பதோ கிழக்கிஸ்தான் என்பதோ கிடையாது. இப்போது உள்ள 9 மாகாணங்களுக்கும், உள்ள முதல்வர்கள், ஆளணிகள் செலவுகள் 40 வீதம் குறைந்து விடும்.




# அரசியலமைப்பு மாற்றம்: மூன்று இனங்களின் வெவ்வேறு அபிலாஷைகள்

- டில்ஷான்

Unitary State என்பதை சிங்களத்தில் ඒකීය රාජ්‍ය (ஏக்கிய ராஜ்ய) அன்று அழைக்கப்பட்டாலும் அதன் சரியான தமிழ் மொழிபெயர்ப்பு 'ஒற்றையாட்சி' என்பதே ஆகும். ஆனால் அரசியலமைப்பு சபையின் இடைக்கால அறிக்கையில் ஏக்கிய ராஜ்ய என்பதற்கு 'ஒருமித்த நாடு' என்ற தமிழ்ப் பதம் பயன் படுத்தப்பட்டுள்ளது.

ஒற்றையாட்சி என்பது ஒரு பலமான மத்திய அரசாங் கத்தை உடைய நாடு என்று வரைவிலக்கப்படுத்தும் அதே வேளை 'ஒருமித்த நாடு' என்பதற்கு பல மாகாண அரசுகள் இணைந்து உருவாக்கிய சமஷ்டி அமைப்பை உடைய நாடு என்ற வரைவிலக்கணம் கொடுக்கப்படவும் முடியும்.

'பிரிக்கப்படாத அல்லது பிரிக்கப்பட முடியாத ஒரே நாடு' என்று இந்த இரண்டு சொற்களுக்கும் பொதுவான வரைவிலக் கணம் கொடுக்கப்பட்டிருந்தாலும் ஒரே நேரத்தில் சிங்கள மக்களையும் தமிழ் மக்களையும் திருப்திப்படுத்தும் விதமாக சொற்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை இதைப் பற்றி பெரியள வில் கலந்துரையாடல் இல்லை. ஆனால் 'ஒருமித்த நாடு' என்ற பதம் இருக்கும் வரைக்கும் சிங்கள மக்கள் அரசிலமைப்பு மாற்றத்திற்கு அனுமதி கொடுக்கப் போவதில்லை. அதேநேரம் 'ஒற்றை ஆட்சி' என்று மாற்றப்பட்டால் தமிழ் மக்கள் அநேக மாக அதை ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை.

இதைப் போலவே மாகாண சபை இணைப்பு தொடர்பான விடயங்களிலும் அபிலாஷைகள் ஒன்றுக்கொன்று முரணாகவே இருக்கிறது....

(உரையாடல் தொடரும்)

# அன்புள்ள ஆசான் மா. கணபதிப் பிள்ளை அவர்களுக்கு

நலம். நலமறிய ஆவல். உங்களுக்கு என்னை நினைவிருக்காது. ஆனால் உங்களை என் போன்ற பல மாணவர் களுக்கு வருடம் தாண்டியும் நினைவிருக் கும். ஆசிரியர் தொழில் உன்னதமானது என்பதையும், அதன் தெய்வீகத் தன்மை யையும் நான் அறிவேன். அதற்கான மார்தட்டல் உங்களிடம் இருக்கிறதா என்பதை நீங்கள் நிச்சயம் சுயபரிசீலனை செய்து பார்த்தல் வேண்டும்.

ஐயா, நீங்கள் அடித்த அடியும் அதன் வீரியமும் எனக்கும் உங்கள் கைகளுக்கும் தான் நன்கு தெரியும். நான் வாங்கியது மட்டுமல்ல, நீங்கள் மற்றவர்களுக்கு கொடுக்கும்போதும் கூட இருந்திருக்கி றேன். ஒரு மனிதன், தன்னிலும் இளைய சக மனிதனை தாக்குவது போல உங்கள் தாக்குதல்கள் இருக்காது. பெரும்பாலான வேளைகளில் உங்கள் வீரத்தைக் காட்டுவ தாக எண்ணிக் கொண்ட உங்கள் சிறு பிள்ளைத்தனம் மீது எனக்கு எப்போதும் ஒருவித அனுதாபம் உண்டு.

உங்களை கட்டுக்கோப்பில் வைத்துக் கொள்வதற்காகவே நான் கண்டிப்பாக இருந்தேன் என்கிற வாதம் உங்கள் பக்கம் இருக்கலாம். ஆனால் அன்பை மட்டும் செலுத்தி கட்டுப்பாடாக வைத்திருக்க என்னிடம் யோசனைகள் இருந்தது. அதைச் சொல்ல எனக்கு வயதோ, உங்களுக்கு செவிமடுக்கும் ஆற்றலோ அன்று இருக்க வில்லை.

ஒருநாள் வகுப்பிற்குள் நுழைந்தீர்கள். யானை புகுந்த கரும்புத் தோட்டம் போல இருந்தது அன்றைய வகுப்பு. ஒவ்வொரு பர்ஸாக எடுத்தீர்கள். என் பர்ஸில் ஒரு மஹேல ஜயவர்தன புகைப்படமும், ஒரு கவிதைத் தாளும் இருந்தது. மஹேல இரண்டு துண்டானார். கவிதையை படித்து விட்டு 'ஊத்தவாளி நாயே காதல் கவித கேக்குதா உனக்கு?' என்று கையை பொத்தி அறைந்தீர்கள்.

சரி, நான் பரிசில்கள் பெற்றபோது அப்படியே பாராட்டியிருந்தீர்கள் என்றால் பரவாயில்லை. பாராட்டும் போதுகளில் பாராட்டுகள் இல்லையே ஐயா. கண்டிப்பு மட்டும்தான் நன்நெறியா.

உங்களுக்கு தெரியாத ஒன்றை நான் சொல்கிறேன். அதாவது படிப்பு முடிந்ததும் உங்களை அடிக்க வேண்டும் என்பதே ஒவ்வொரு சீனியருடையதும் கனவாக இருந்தது. ஆனால் காலப்போக்கில் மாண வர் மனம் மன்னிக்கக் கூடியதாகையால் அப்படிப்பட்ட அசம்பாவிதங்கள் எதுவும் உங்களுக்கு தெய்வாதீனமாக நடக்க வில்லை. சின்னச் சின்ன விடயங்களுக்கு பெற்றாரை அலைக்கழிப்பது, மூர்க்கத் தனமாகத் தாக்குவது, நாயே பேயே என்று விளிப்பது எல்லாம் உங்கள் சாதனைகளில் சில. நீங்கள் புன்னகைத்து நான் பார்த்தது கூட இல்லை ஐயா.

உங்கள் அனுபவத்தில், உங்கள் துறை யில் தோற்றுவிட்டீர்கள் ஐயா. இன்று வரை உங்கள் மாணவன் ஒருவனுக்குக் காரணமே இல்லாமல் உயர் அதிகாரிகளைப் பார்த்தால் ஒருவித குற்ற உணர்வும் பயமும் வருகிறது. ஆபீஸில், வீட்டில் என்று அந்த குற்ற உணர்வு சின்ன வயதில் விதைக்கப்பட்ட ஒன்றாகச் சொல்கிறார்கள். விதைத்தது நீங் கள், விதைக்கப்பட்டது என்னில்.

**இப்படிக்கு,**
**நீங்கள் மறந்த, உங்களை மறவாத,**
**ரிமாஸ் அகமட்.**

## வேற வழி????

- முஜீப் இப்ராஹீம்

உள்ளூராட்சி சபை தேர்தல் திருத்தச் சட்டம் தொடங்கி புதிய யாப்பு மாற்றம் வரை நமக்கான அத்தனை ஆப்புகளும் கச்சிதமாக சொருகி முடித்தாயிற்று.

கடந்த காலங்களில் இவை பற்றி அவ்வப்போது பல குறிப்புகளையும் எழுதியுள்ளேன்.

பெட்டா தொடக்கம் சைனா வரை பிஸியாக இருக்கிற சோனக முதலாளிமாருக்கோ, பேப்பரோ டீவியோ பார்த்து நாட்டு நடப்புகளை அறியாத பெரும்பாலான மக்கள் கூட்டத்திற்கோ, சமூக வலைத்தளங்களின் வாடையைக் கூட நுகராமல் இருட்டில் ஒரு தனிமை வாழ்வு காணும் மக்கள் பிரிவினருக்கோ இவை பற்றி ஒன்றும் தெரியாது!

சிலவேளை தெரிந்தாலும் அவ்வளவாக அலட்டிக் கொள்வதில்லை. அலட்டித்தான் என்ன செய்ய? நமக்கு யாரோ அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்து விட்டு காசு வாங்கியல்லவா போய்விட்டார்கள்!

இலங்கை முஸ்லிம் சமூகத்தின் அடிப்படை உரிமைகளையும் அபிலாஷைகளையும் ஐஸ் க்ரீம் வியாபாரியும், சொப்பின் பேக்கோடு அகதியாய் வந்து பின் பெரும் பண முதலையாக ஆனவரும் எப்போதோ அற்ப அமைச்சுப் பதவிகளுக்காகவும், பெருந்தொகை பணத்திற்காகவும் பேரம் பேசி விற்று விட்டார்கள்.

நாம் இப்போது கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் செய்து கொண்டிருக்கிறோம்.

இனி நமது ஆற்றாமைகளை மட்டும்தான் இணையவெளிகளில் கொட்டித் திரிய முடியும்.

வேற வழி?

# வடமாகாண மீள் குடியேற்றம்:

## முஸ்லிம்களிடம் தேசிய ஷூரா சபை அவசர வேண்டுகோள்.

NSC

பூர்வீக இடங்களில் மீள் குடியேற காத்திருக்கும் வட மாகாண முஸ்லிம்களிடம் தேசிய ஷூரா சபை அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது. தேசிய சூறா சபையின் சார்பில் அதனு டைய பொதுச் செயலாளர் அஷ். மஸீஹுத்தீன் இனாமுல்லா ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள இந்த வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளதாவது,

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ் வளிப்பு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலு வல்கள் அமைச்சின் கீழ் அமைக்கப்பட்டுள்ள வடமாகாணத்தில் இருந்து நீண்ட காலமாக இடம் பெயர்ந்திருப்பவர்களை மீள்குடியேற்றுவதற்கான விஷேட செயலணி (TFR) மேற்கொள்ளும் - உள்ளக இடம்பெயர்வால் பாதிக்கப்பட்டவர்கள் தொடர் பான- மக்கள் தொகைமதிப்பு தொடர்பான பத்தி ரங்களை பூர்த்தி செய்து 16 /10 / 2017 ஆம் திகதி யிற்கு முன்னர் பிரதேச கிராம சேவை அலுவல ரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இது தொடர்பான அறிவித்தல் கடந்த 20/09/2017 பத்திரிகைகளில் வெளியிடப்பட்டதோடு, மாவட்ட செயலாளர்கள், பள்ளிவாயல்களூடாகவும், சமூக ஊடகங்களூடாகவும் பாதிப்புற்ற மக்களுக்கு விடுக் கப்பட்டுள்ளதாக விஷேட செயலணி (TFR) தேசிய ஷூரா சபைக்கு தெரிவித்துள்ளது.

மேற்படி உத்தியோகபூர்வமான தொகைக் கணிப் பீட்டின் மூலம் பெறப்படும் தரவுகள் புள்ளிவிப ரங்களின் அடிப்படையிலேயே எதிர்காலத்தில் மீள் குடியேற்ற நடவடிக்கைகளை துரிதப்படுத்த அர சாங்கம் உத்தேசித்துள்ளது, அந்த வகையில் இந்த சந்தர்ப்பத்தை இடம்பெயர்ந்து வாழும் வடபுல முஸ்லிம்கள் பயன்படுத்திக் கொள்ள தவறிவிடக் கூடாது.

இன்னும் இரண்டொரு தினங்களே எஞ்சியுள்ள நிலையில் வடமாகாண முஸ்லிம் சிவில் அமைப் புக்கள் மஸ்ஜித் நிர்வாகங்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் நாளை ஜும்மாஹ் தினத்திலும் வார இறுதி நாட்களிலும் மேற்படி பதிவினை மக்கள் உரிய முறையில் நிறைவு செய்வதனை உறுதி செய்து கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல் கட்டாயமாகும்.

எதிர்வரும் 2017 நவம்பர் மாதத்தில் நடைபெற வுள்ள இத்தொகைக் கணிப்பிற்காக உங்கள் பிர தேசத்திற்கு வருகை தரும் தொகைக் கணிப்பீட்டா ளர்களுக்கு உங்கள் ஒத்துழைப்பை வழங்குதல் வேண்டும்.

மேலதிக விபரங்களை கிராம சேவை அலுவலர், பிரதேச செயலாளர், மாவட்ட செயலாளருடன் தொடர்பு கொள்வதன் மூலமோ அல்லது www. taskforcepidp.lk https://l.facebook.com www. taskforcepidp.lk என்ற இணையத்தளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்வதன் மூலமோ பெற்றுக் கொள்ள முடியும்.

கொழும்பு காலி வீதி இல 356 ஆ என்ற முகவரி யிலுள்ள சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர் வாழ்வளிப்பு மீள்குடியேற்றம், மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு கட்டிடத்தில் நிறுவப்பட் டுள்ள வடமாகாணத்தில் மீள்குடியேற்றுவதற்கான செயலணியின் கருத்திட்ட முகாமைத்துவ அலகின் கருத்திட்ட முகாமையாளரிடமும் அது குறித்து விசாரிக்க முடியும்.

## இலங்கை...

(01 ஆம் பக்கத் தொடர்)

சட்டமூலமாக 2018 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் அமைந்துள் ளது. இதனால் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையும் அதிகரிக்கவுள்ளது. கடன் பெறும் தொகை 1800 பில்லியன்களாக அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதிகரித்துள்ள கடன் சுமையிலிருந்து மீள்வதற்கு மக்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனக் கோரும் ஆட்சி யாளர்கள், தாம் மாத்திரம் எந்தவித அர்ப் பணிப்பும் இன்றி தமக்கான ஒதுக்கீடுகளை அதிகரிப்பதாக அவர் இதன்போது குற்றஞ் சாட்டினார்.

இதேவேளை, யுத்த காலத்தில் பாது காப்பு செலவினத்திற்கு ஒதுக்கிய 250 பில்லியன் ரூபா நிதியை, 2018 பட்ஜட்டி லும் ஒதுக்கியமைக்கு, தமிழ்தேசிய கூட்ட மைப்பு ஆட்சேபனை தெரிவிப்பதாக கூட் டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா தெரிவித்தார்.

## ஐ.நா. அறிக்கை...

(01 ஆம் பக்கத் தொடர்)

ஐ.நா. விஷேட அறிக்கையாளரான டி க்ரீப் அவர்கள் குறித்த துறையொன்றி லான சுதந்திர நிபுணர். மனித உரிமை கள் சம்பந்தமாக கருத்தியல் ரீதியாக வோ குறித்த நாட்டுக்கான அணுகு முறையாகவோ அரசாங்கங்களுக்கு அறி க்கையிடுவது விஷேட அறிக்கையாளர் களின் பணியாகும். க்ரீப் உடைய பணி கருத்து ரீதியாக அறிக்கையிடலாகும்.

நிலைமாறு கால நீதிக்கான முழுமை யான அணுகுமுறையில் உள்ளடங்க வேண்டிய உண்மையைக் கண்டறிதல், நீதி, நஷ்டஈடு, மீள நிகழாமைக்கான உத்தரவாதம் ஆகிய நான்கு பகுதிகளி லும் மீள்நல்லிணக்கம், பாதுகாப்புப் பொறிமுறையில் சுதந்திரமான மேற்பார் வையைக் கட்டியெழுப்பல், அரச நிறு வனங்களில் நம்பிக்கையை வளர்த்தல், சட்ட ஒழுங்கினை மேம்படுத்தல் என்ப வற்றில் கவனத்தைக் குவிப்பது இவரது பணியாகும்.

இந்த வகையில் சர்வதேச மனிதாபி மானச் சட்டங்களைக் கடுமையாக மீறல்,




மனித உரிமை மீறல் போன்றவற்றை குறிப்பிடும் போதும், மூலோபாயங் களையும் நடைமுறைப்படுத்தல்களை யும் வரையும் போதும் மேற்கொள்ளப் பட வேண்டிய சட்டம், சட்டமல்லாத அளவீடுகள் தொடர்பில் இவர் முன் மொழிவுகளை முன்வைக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்தி யும், பால் ரீதியான முன்னோக்கலிலும் இவரது பணி அமைய வேண்டும். பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத் தல் என்ற வகையில் அவரது அறிக்கை யிடல் குறித்ததொரு சமூகத்துக்கான தாக இருக்க முடியாது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# புகையிரத வேலை நிறுத்தத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை

நள்ளிரவு 12 மணிக்கு ஆரம்பிப்பதாகக் கூறப்பட்ட புகை யிரத வேலை நிறுத்தம் மாலை 05 மணிக்கே ஆரம்பிக்கப்பட்டமை சட்ட விரோத மானது என்பதால் அது தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்று குறித்த தொழிற்சங்கங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு புகையிரத பொது முகாமையாளருக்கு ஆலோசனை வழங்கியதாக போக்கு வரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கூறியுள்ளார்.

லோகோமோடிவ் பொறியியலாளர் தொழிற்சங்கம் மற்றும் புகையிரத காப்பாளர்கள் தொழிற்சங்கத்தினால் [illegible]



களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங் களை மட்டுப்படுத்துவதற்கான விஷேட வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்தும் நோக்கில் 12ஆம் திகதி அந்த அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாட லின் போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார்.

தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் உரிமையை ஏற்றுக் கொள்ளும் அதேவேளை டிக்கட்டுக்கள் வழங்கப் பட்ட பயணிகளுக்கு கூட சேவையை வழங்காது திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டமை ஏற்றுக் கொள்ள முடியாது என்று கூறிய அமைச்சர், பொது மக்க ளுக்கு பாரிய பாதிப்பை எற்படுத்திய இந்த வேலை நிறுத்தம் குறித்து பொலிஸார் மூலம் விசாரணைகளை ஆரம்பிக்குமாறும் புகையிரத பொது முகாமையாளருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# றோஹிங்யா இனச் சுத்திகரிப்பு: உலகம் நாடுகள் கண்டனம் இலங்கை பராமுகம்

• லத்தீப் பாரூக்



ஆசியாவின் மிகவும் பயங்கரமான அபாயம் என வர்ணிக்கப்படும் மியன்மாரின் றோஹிங்யா முஸ்லிம்கள் மீதான அந்த நாட்டு அரசின் அனுசரணையோடு மேற்கொள்ளப்படும் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கை இன்று உலகில் மனிதாபிமானத்துக்கு எதிரான மாபெரும் இனவாத நடவடிக்கையாக நோக்கப்படுகின்றது. இஸ்ரேல், இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளைத் தவிர பெரும்பாலும் ஏனைய எல்லா நாடுகளும் இதை வன்மையாகக் கண்டித்துள்ளன.

அண்மைக் காலங்களில் இலங்கையில் இருந்து மிகவும் தூரத்தில் உள்ள மேலைத்தேச நாடுகளில் குண்டு வெடிப்புக்களும் ஏனைய தாக்குதல் சம்பவங்களும் இடம்பெற்றபோது இலங்கை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் உட்பட வெளிவிவகார அமைச்சும் முண்டியடித்துக் கொண்டு அந்த சம்பவங்களின் பின்னணி என்ன, யார் காரணம் என்பன பற்றிய முழு விவரங்கள் வெளியாவதற்கு முன்பே அவற்றைக் கண்டித்து அறிக்கைகளை வெளியிட்டுள்ளன.

ஆனால் நமக்கு மிகவும் அருகில் இருக்கும் ஒரு நாட்டில் ஆண், பெண், சிறுவர் என வயது வித்தியாசமோ அல்லது பால் வித்தியாசமோ இன்றி மக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். சொந்த இடங்களில் இருந்து கதறக் கதற விரட்டி அடிக்கப்பட்டுள்ளனர். ஐந்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் தமது வாழ்க்கையும் எதிர்காலமும் கேள்விக் குறியாக்கப்பட்ட நிலையில் இன்னொரு அண்டை நாட்டில் தஞ்சம் புகுந்துள்ளனர். ஆனால் நல்லாட்சியின் காதுகளுக்கு இன்னும் இந்த மக்களின் அவலக் குரல்கள் எட்டவில்லை.

உலகையே கண் கலங்கச் செய்யும் காட்சிகள் இந்த நல்லாட்சிக்கு மட்டும் இன்னும் தெரியவில்லை. நல்லாட்சி ஒரு புறம் இருக்கட்டும், இந்த நாட்டின் தொழில்வான்மையாளர்கள், புத்தி ஜீவிகள், கலைஞர்கள், சிவில் சமூகத்தினர், மகளிர் அமைப்புக்கள் என இவர்களுக்கும் இந்த மனித ஓலங்கள் இன்னும் கேட்கவில்லையா? இந்த மனித அவலங்கள் இன்னும் தெரியவில்லையா?

உயிரைக் காப்பாற்றவும் மானத்தைக் காப்பாற்றவும் அழிவுகளிலிருந்து தப்பவும் பங்களாதேஷ் நோக்கி வரும் மக்கள் தனது நாட்டுக்கு ஒரு மேலதிக சுமையாக மாறிவிடுவார்கள் என்று பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹஸீனா ஆரம்பத்தில் தெரிவித்திருந்தார். அப்போது பங்களாதேஷில் வாழும் பௌத்தர்கள் பௌத்த போதனைகளுக்கும் பாஸிஸ வாதத்துக்கும் இடையிலான வேறுபாட்டை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டனர்.

பங்களாதேஷில் உள்ள பௌத்த அமைப்பான சம்மிலித்தோ பௌத்த சமாஜ் என்ற அமைப்பின் அழைப்பாளர் சுத்தானந்த மகா தேரோ றோஹிங்யா முஸ்லிம்கள் மீதான இன ஒழிப்பு நடவடிக்கைகளை நிறுத்தி விடுங்கள் என மியன்மார் அரசிடம் உறுக்கமானதோர் வேண்டுகோளை விடுத்துள்ளார். பங்களாதேஷில் வாழும் பௌத்தர்களின் உணர்வுகளை இது பிரதிபலிப்பதாக அமைந்திருந்தது. பௌத்தர்கள் பெரும்பான்மையாக வாழும் மியன்மாரில் முஸ்லிம்கள் மீது இழைக்கப்படும் கொடூரங்கள் புத்த பிரானின் போதனைகளுக்கு முற்றிலும் மாறுபட்டவை என்பதை நாம் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும் என அவர் கூறினார்.

றோஹிங்யா முஸ்லிம்கள் மீதான கொடுமைகளுக்கு தங்களது எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில் பங்களாதேஷில் வாழும் பௌத்தர்கள் ஒரு முடிவை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பங்களாதேஷ் பௌத்தர்களால் வருடந் தோறும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும் ஒரு முக்கிய பௌத்த திருவிழா 'புரோபோறோன பூர்ணிமா' விழாவாகும். பௌத்தர்களால் கொண்டாடப்படும் இரண்டாவது பெரிய திருவிழாவாக இது கருதப்படுகின்றது. இம்மாதம் 5 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள இந்த விழாவின் போது வர்ண விளக்குகளை ஏற்றப் போவதில்லை என அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதற்காகவும் விழாவின் ஏனைய அம்சங்களுக்காகவும் செலவிடவுள்ள தொகையை இவ்வருடம் பங்களாதேஷின் கொக்ஸ் பஸார் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ள ரோஹிங்யா முஸ்லிம்களின் நலன்களுக்காக செலவிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் முழுவதும் ரோஹிங்யா முஸ்லிம்கள் மீதான இனச் சுத்திகரிப்பு நடவடிக்கை உலகம் முழுவதும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளது. உலகப் புகழ்பெற்ற டைம் சஞ்சிகையால் 'பௌத்த பயங்கரவாதத்தின் முகம்' என வர்ணிக்கப்பட்டுள்ள பௌத்த தீவிரவாதியான அசின் விராத்து தேரரின் வெறுப்பூட்டும் பேச்சுக்களால் சுயமதி இழந்து தூண்டப்பட்டுள்ள மியன்மார் இராணுவமும் அவர்களின் துணைப் படையான காடையர் கும்பல்களும் தான் இந்த தாக்குதல்களுக்குக் காரணமாக அமைந்துள்ளன.

இதை இலங்கையிலும் உறுதி செய்யும் வகையில் இங்குள்ள பௌத்த பிக்கு ஒருவர் தலைமையில் திரண்ட பௌத்த தீவிரவாதிகள் கல்கிஸ்ஸை பிரதேசத்தில் ரோஹிங்யா அகதிகள் தங்க வைக்கப்பட்டிருந்த ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஸ்தானிகராலய பாதுகாப்பு இல்லத்தைச் சுற்றி வளைத்து தமது வெறித்தனத்தை வெளிப்படுத்தியுள்ளனர். செப்டம்பர் 26 ஆம் திகதி இடம்பெற்ற இந்தச் சம்பவத்தின்போது இந்த ஐ.நா. பாதுகாப்பு இல்லத்துக்கு பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த அப்பாவி மக்கள் உடனடியாக இலங்கையிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும் என அவர்கள் கூச்சலிடுகின்றனர்.

அச்சத்துக்குள்ளான ரோஹிங்யா மக்கள் தற்போது தென் பகுதியில் உள்ள பூஸா தடுப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்தத் தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்ட முக்கிய புள்ளிகளை விட்டு விட்டு சில சில்லறை நபர்களை பொலிஸார் பெயரளவில் கைதுசெய்துள்ளனர். இது ஐ.நா. அலுவலகத்தை ஏமாற்றும் ஒரு முயற்சியாகும்.

பூஸா முகாம் பாதுகாப்பான ஒரு பிரதேசமாக இருக்கலாம். ஆனால் அதனைச் சூழவுள்ள பகுதிகள் இந்த மக்களுக்கு எந்தளவு பாதுகாப்பானவை என்பது கேள்விக்குறியதாகும். (பண்டாரவளை பிந்துனுவெவ முகாம் சம்பவத்தை இங்கு நினைவூட்டுவது பொருத்தமானதாகும். இந்தச் சம்பவம் இடம்பெற்றது 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் என்பதும் இங்கு நினைவூட்டத்தக்கது.)

உள்நாட்டுச் சட்டங்களை மட்டுமன்றி சர்வதேச சட்டங்களைக் கூட பட்டப் பகலில் பகிரங்கமாக மீறும் அளவுக்கு இந்தக் காடையர் கூட்டம் நடந்து கொண்டும் கூட இன்னமும் அவர்களுக்கு எதிராக உருப்படியாக எந்தச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்த சம்பத்தை காரணமாக வைத்துக் கொண்டே இவர்களுக்கு இங்கே பாதுகாப்பு இல்லை. எனவே அவர்களை அவர்களது சொந்த இடங்களுக்கே திருப்பி அனுப்ப அரசு முடிவெடுத்துள்ளது என்ற அறிவிப்பு வந்தாலும் ஆச்சரிப்படுவதற்கில்லை. மரணத்தின் பிடியில் அவர்களை இலங்கை அரசே ஒப்படைக்கலாம் என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.

இலங்கை முஸ்லிம்கள் மீதும் ரோஹிங்யாக்கள் மீதும் குறை கூறுவதற்கான காரணங்களை வெளிநாட்டு ஆலோசனைகளுடன் தேடுவதற்குப் பதிலாக இலங்கையில் அதிகரித்து வரும் தீவிரவாத வன்முறை அச்சுறுத்தல்கள் பற்றி பாதுகாப்பு அமைச்சின் கருத்தரங்குகளில் கலந்துரையாட வெட்கப்படத் தேவையில்லை.

செப்டம்பர் 11 தாக்குதல் இடம்பெற்ற அந்த நாள் தொடக்கம் அமெரிக்கா தலைமையிலான மேலைத்தேய யுத்த இயந்திரத்தின் ஒரு பகுதியான மேலைத்தேய ஊடகங்கள் இஸ்லாத்துக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக விரிவாக பல விடயங்களைத் தொடராக

(பக்.11)

# முஸ்லிம்கள் தொடர்பான மௌன நிலைப்பாடு என்ன சொல்ல வருகிறது?

• நேஷன்

**"பூகம்பம் அழிவைத் தவிர வேறு எதனையும் கொண்டு வருவதில்லை. மக்கள்தான் அதனை எதிர்கொள்ள முடியுமான வகையில் நெகிழ்வாகவும் உறுதியாகவும் கட்டடங்களை நிர்மாணிக்க வேண்டும். எதேச்சாதிகாரமும் பூகம்பம் போலத்தான். இதற்கு எதிராக எழுந்து நிற்க வேண்டுமென்றால் மக்களின் எண்ணங்கள் அறிவினாலும் தத்துவங்களாலும் நிரப்பப்பட வேண்டும்."**

***துருக்கிய எழுத்தாளர் முஹம்மத் முராத் அல்தான்***



நம்மைச் சூழ மௌனமாகப் பின்னப்பட்டு வருகின்ற வலைகளை மக்கள் அப்போது தான் புரிந்து கொள்வார்கள். இதிலிருந்து மக்களைத் திசை திருப்புவதற்கான நாடகங்களைத் தான் ஆளும் வர்க்கம் அவ்வப்போது மேடையேற்றிக் கொண்டிருக்கும்.

இலங்கை முஸ்லிம் சமூகத்தினை உலமாக்கள் சன்மார்க்கப் போதனைகளால் நிரப்புகிறார்கள். அரசியல்வாதிகள் இந்தச் சமூகத்தை விற்றுக் காசாக்கி வயிற்றுப் பிழைப்பு நடத்துகிறார்கள். இதற்கு மேல் எதுவுமே செய்ய முடியாத அப்பாவிச் சமூகத்திடம் புவியரசியல் பற்றியெல்லாம் பேசுவதை விட அதனைத் தன்னாலே சாகவிடுவதே சாலச் சிறந்தது எனக் கருதி எரிகிற வீட்டில் பிடுங்கின மட்டும் லாபம் என விஷயம் தெரிந்தவர்கள் நடந்துகொள்கிறார்கள்.

இலங்கையில் இரண்டு இனங்களும் இதுவரை ஒவ்வொரு கலவரத்தை எதிர்கொண்டிருக்கிறது. 1915 சிங்கள-முஸ்லிம் கலவரம், 1983 சிங்கள-தமிழ் கலவரம் இரண்டுமே இலங்கையின் சரித்திரப் பக்கங்களில் கறைபடிந்த அத்தியாயங்கள்.

1915 இல் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் சுதந்திரத்தின் பின்னரான காலப் பகுதிகளின் பின்னர் தெளிவான அடையாள மொன்றைப் பெறவில்லை. ஆனாலும் நீறுபூத்த நெருப்பாக அது கனன்று கொண்டு இருந்திருக்கிறது என்பதனைப் புரிந்துகொள்ள முயல்வோருக்கு அண்மைக் கால அசம்பாவிதங்கள் போதுமானவையாகும்.

சுதந்திரத்துக்குப் பின்னரான தலைவர்களில் ஜயவர்தன அரசாங்கத்தின் நழுவல் போக்கு தவிர்த்து ஏனைய எந்தத் தலைவர்களும் தெளிவான முஸ்லிம் விரோதப் போக்கொன்றை முன்னெடுக்கவில்லை. இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை இலங்கையில் நிறுவுவதற்காக வேண்டி தனது பாராளுமன்றத்தில் இருந்த அனைத்து முஸ்லிம் உறுப்பினர்களையும் துரத்தி அடிப்பதற்கு ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன தயாராக இருந்தார். அவருக்கு முன்னர் தலைவராக இருந்த ஸ்ரீமாவோ அம்மையார் பலஸ்தீன விவகாரத்தில் நீதியின் பக்கம் நின்று உலக முஸ்லிம்களின் நன்மதிப்பைப் பெற்றார்.

ஜயவர்தனாவுக்குப் பின்னர் தலைவராகிய ஜனாதிபதி ஆர். பிரேமதாச ஜயவர்தனா இறக்குமதி செய்த இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை மூடவைத்து முஸ்லிம்களுடன் தோழமையை வளர்த்தார். அன்றிலிருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரை, உலக முஸ்லிம்களுடனான நல்லுறவுக்கு அடையாளமாக அனைத்துத் தலைவர்களும் பலஸ்தீன விவகாரத்தில் நீதியான நிலைப்பாட்டையே எடுத்தனர்.

இறுதியில் முஸ்லிம் களின் எதிரியாக ராஜபக்ஷ அரசு மாறியபோதும் கூட, முஸ்லிம்களுக்கு எதிராகதான் எதையும் செய்ய வில்லை என்று வாய் கூசாமல் சொல்லுமளவுக்கு அவர் முஸ்லிம்களுக்கெதிராக தெளிவான நிலைப்பாடுகள் எதனையும் வெளிப்படுத்தவில்லை.

நல்லாட்சி அரசாங்கம்தான் தெட்டத் தெளிவாக முஸ்லிம்களுக்கு எதிரான தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகிறது. பலஸ்தீன பூமியை இஸ்ரேல் ஆக்கிரமித்திருப்பதையும், பலஸ்தீனில் இஸ்ரேல் புரிகின்ற அட்டகாசங்களையும் கண்டித்து யுனெஸ்கோ தீர்மானம் நிறைவேற்றிய வேளைகளில், உலகின் பல நாடுகள் இதற்கு ஆதரவாக வாக்களித்த போதும், இலங்கை ஆதரவாக வாக்களிக்காமை முஸ்லிம்கள் தொடர்பான தனது நிலைப்பாட்டை இலங்கை அரசாங்கம் தெளிவாக வெளிப்படுத்திய சந்தர்ப்பமாகவே அமைந்திருந்ததாக பலரும் கருத்து வெளியிட்டிருந்தனர்.

நல்லாட்சியில் தொடர்கின்ற, மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் தொடங்கப்பட்ட முஸ்லிம் விரோத செயற்பாடுகள் தொடர்பில் அரசாங்கத்தின் ஆழமான மௌனமும் இந்த நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவது போல அமைந்திருக்கிறது. குறிப்பாக மியன்மாரில் ரோஹிங்கிய முஸ்லிம்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எவ்விதக் கண்டனங்களையும் வெளியிடாமல் இருப்பது அது முஸ்லிம்கள் தொடர்பில் எடுத்துள்ள நிலைப்பாட்டின் வெளிப்பாடா என்ற கேள்வி தற்போது பரவலாக எழுப்பப்பட்டு வருகிறது.

மியன்மார் படுகொலைகள் தொடர்பில் எதுவும் தெரிவிக்காமல், லாஸ்வேகாஸ் துப்பாக்கிச் சூட்டுக்குக் கண்டனம் தெரிவித்து பிரதமர் வெளியிட்ட டுவிட்டர் செய்தி, அவர் தேசியக் கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் பல சந்தேகங்களைக் கிளப்பியுள்ளது.

ரோஹிங்கிய அகதிகள் தொடர்பில், அவர்களுக்கு எதிரான தாக்குதல்கள் தொடர்பில் அரசாங்கம் கைக்கொண்ட மெத்தனப் போக்கும் இந்த வகையில் அடங்குகிறது. பிறந்து சில மாதங்களே ஆன ஒரு குழந்தையுட்பட கல்கிஸ்ஸையில் UNHCR இனால் தங்க வைக்கப்பட்டிருந்த 31 'பயங்கரவாதிகள்' மீதும் தாக்குதல் நடத்தியவர்கள் யார் என்பதனை சமூக ஊடகங்கள் மூலமாக உலகமே அறிந்திருந்தும் அவர்களை உடனடியாகக் கைதுசெய்யாமல் அரசாங்கம் அவர்களுக்கு அவகாசம் வழங்கியது.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDITORIAL

49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## எதேச்சாதிகாரப் போக்கை அனுமதிக்க முடியாது

மாகாண சபைகளுக்கான எல்லை மீள்நிர்ணயம், கலப்பு முறைத் தேர்தல், புதிய அரசியலமைப்பு என நாடு களேபரப்பட்டுக் கொண்டிருக்கிறது. தீர்க்கமான ஒரு சந்தியில் நாட்டின் முக்கிய விவகாரங்கள் சந்தித்திருக்கின்றன. இந்த வேளையில் சரியான தீர்மானத்தை எடுக்கத் தவறுவது நாட்டினதும், ஒவ்வொரு சமூகத்தினதும் வரலாற்றுத் தவறாக அமையப் போகிறது.

முன்வைக்கப்பட்டுள்ள இடைக்கால அரசியலமைப்புத் திருத்தத்தில் நாட்டுக்கு நலன் தரக் கூடிய பல விடயங்கள் இன்னும் கலந்துரையாடப்பட வேண்டியுள்ளன. சகல சமூகங்களையும் திருப்திப்படுத்தக் கூடிய ஒரு வரைவு இம்முறைய அரசியல் யாப்பில் வராதவிடத்து, அது புதிய யாப்புக்கான தேவையையே இல்லாமல் செய்கிறது. அதனால் இந்த விடயத்தில் ஒவ்வொரு சமூகமும் விழிப்புடன் செயலாற்ற வேண்டியிருக்கிறது.

இலங்கை முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை, தமது பிரச்சினைகளுக்கான அரசியல் தீர்வு எது என்பது தொடர்பிலான பொது உடன்பாடெதுவும் இதுவரை எட்டப்படவில்லை. இது தொடர்பாக சமூகத்தின் அரசியல், சிவில், மார்க்கத் தலைமைகள் ஒன்று கூடி ஒரு தீர்மானத்துக்கு வருவது அவசியம். ஆனால் அது வரையில் முஸ்லிம் சமூகம் தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரத்தை எந்த அமைப்புக்கும் கட்சிக்கும் முஸ்லிம் சமூகம் வழங்கவில்லை என்பதை அனைவரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கை முஸ்லிம்களுக்கென ஒரே கட்சி மாத்திரம் இருந்த பொழுது பெரும்பாலான முஸ்லிம்கள் அந்தக் கட்சியின் பின்னால் திரண்டதொரு காலம் இருந்தது. தற்போது அந்தக் கட்சிக்குள்ளேயே உடன்பாடில்லாமல் அந்த ஒரு கட்சியும் பல துண்டுகளாகச் சிதைந்திருக்கிறது. இந்நிலையில் எந்த ஒரு கட்சியும் முஸ்லிம் சமூகத்தின் விவகாரங்களில் தனித்து முடிவெடுக்க முடியாத நிலையே தோன்றியிருக்கிறது. இந்த வகையில் புதிய அரசியலமைப்பில் முஸ்லிம் சமூகத்துக்கான தீர்வினை முன்வைக்கும் அதிகாரத்தை எந்தவொரு தனிக் கட்சியும் அமைப்பும் தன் கையில் எடுக்க முடியாது; எடுக்க விடவும் கூடாது.

இலங்கையில் வடக்கு கிழக்கில் வாழ்வதை விட அதிகமான முஸ்லிம்கள் வடக்கு கிழக்குக்கு வெளியில் சிதறி வாழ்கிறார்கள். இலங்கையில் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் அனைவரும் இலங்கை முஸ்லிம்கள் என்றே கருதப்படுகிறார்கள். அதனால் வடக்கு கிழக்கோ அல்லது வேறேதும் பிரதேசங்கள் தொடர்பிலோ எடுக்கப்படும் முடிவுகள் நாட்டின் ஏனைய பிரதேசங்களில் உள்ள முஸ்லிம்களைப் பாதிக்காத வண்ணம் அமையப் பெறுவது முக்கியமானது. அதற்கு தான்தோன்றித்தனமாக முடிவெடுப்பதை விட சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரதும் ஒருமித்த தீர்மானத்தைப் பெற்றெடுப்பது தான் சாணக்கியமானது.

முஸ்லிம் சமூகத்துக்கு தீர்க்கமானதொரு தலைமைத்துவம் இல்லை என்ற வெற்றிடம் தற்போதைய சூழலில் வெகுவாக உணரப்படுகிறது. இது போன்ற தீர்மானம் எடுக்கும் நிலைமைகளில் முஸ்லிம் சமூகம் சார்பில் தீர்மானங்களை முன்வைப்பது யார் என்ற நியாயமான கேள்வி விடையின்றித் தொடர்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம் சமூகத் தலைமைகள் உடனடியாகச் செயலில் இறங்கி தமது சமூகத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற விடயங்களில் காத்திரமாக கலந்தாலோசனைகளை முன்னெடுத்து தீர்வுகளை வரைய வேண்டும்.

இந்த ஒக்டோபர் மாதத்துடன் வடக்கிலிருந்து முஸ்லிம்கள் துரத்தியடிக்கப்பட்டு 27 வருடங்களாகின்றன. இவர்களுடைய மீள்குடியேற்றப் பிரச்சினையும் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினையாகவன்றி முஸ்லிம் அரசியலின் பிரச்சினையாகவே பார்க்கப்படுகின்றது. 27 வருடங்களில் நான்கு தடவைகள் மீள்குடியேற்ற அமைச்சர் பதவிகள் கிடைத்த போதும் முஸ்லிம் சமூகத்தில் புரையோடிப் போயுள்ள மீள்குடியேற்றப் பிரச்சினையைத் தீர்த்து வைக்காத அரசியல் தலைமைகளிடம் மாத்திரம், முஸ்லிம் சமூகத்தின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் விடயங்களைக் கையளிப்பதாக இருந்தால் அதற்கு இப்போதுள்ள சமூகத் தலைமைகளும் சேர்ந்து தான் எதிர்கால முஸ்லிம் சமூகத்துக்குப் பதில் சொல்லியாக வேண்டும்.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

அதன் மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யலாம்

மேலதிக விபரங்களுக்கு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி 011 5353635
பெக்ஸ் 011 5335500
ஈமெயில் pccsl.lk
இணையத்தளம் www.pccsl.lk

# குடும்ப ஆதிக்கம், நிலப் பிரபுத்துவ முறை மற்றும் நிறைவேற்று ஜனாதிபதி முறை

• காமினி வியங்கொட

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 70 வருடங்கள் நிறைவடைவதையொட்டி கடந்த தினம் நடைபெற்ற விஷேட பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி சிறிசேன, பாராளுமன்றத்தை பலம் பொருந்திய சபையாக மாற்றுவதற்கு தான் முன்னின்று உழைப்பதாகத் தெரிவித்தார். அவரது உரையில் ஓரிடத்திலாவது நிறைவேற்று அதிகார முறையை ரத்துச் செய்வது தொடர்பில் குறிப்பிடப்படவில்லை.

அதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர், அமெரிக்காவில் இடம்பெற்ற ஐ.நா. சபை கூட்டத் தொடரில் உரையாற்றிய அவர், சர்வதேச மக்களுக்கு மற்றுமொரு முக்கிய விடயத்தை நினைவூட்டினார். தனது அதிகாரத்தை தானே குறைத்துக் கொண்ட ஒரேயொரு அரச தலைவர் தான் எனக் குறிப்பிட்டார். அங்கும் அவர் நிறைவேற்று அதிகார முறை ஒழிப்பு குறித்து கருத்துத் தெரிவித்திருக்கவில்லை.

இது தொடர்பில் நாம் இரண்டு பக்கத்திலிருந்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஒன்று, நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி முறையை ரத்துச் செய்வது தொடர்பில் ஜனாதிபதி ஏன் இன்னும் மெத்தனப் போக்கை கடைப்பிடித்து வருகிறார்? இது தொடர்பில் அவரது சுதந்திரக் கட்சி சிரேஷ்ட அமைச்சர்கள் தெரிவித்து வரும் கருத்துக்கள் இங்கு நோக்கத்தக்கது.

ஜனாதிபதி முறையை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்வதற்கு கட்சியென்ற வகையில் தாம் தீர்மானித்திருப்பதாக நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்டோர் தெரிவிக்கின்றனர். இவர்கள் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டார நாயக்கவினது அல்லது சிறிமாவோ பண்டாரநாயக்க்வினது ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு உரித்தானவர்கள் அல்ல, மஹிந்த ராஜபக்ஷவினது சுதந்திரக் கட்சிக்கு உரித்தானவர்கள் என்பதையே அடையாளப்படுத்துகின்றனர்.

இலங்கைக்கு பெடரல் முறையை சிபாரிசு செய்த தென்னிலங்கையின் முதன்மையானவர் எஸ்.டபிள்யூ. பண்டாரநாயக்க ஆவார். 1920 களிலேயே அவர் பெடரல் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதன் பின்னர் இனங்களுக்கிடையில் பிரச்சினைகள் புரையோட ஆரம்பித்த நிலையில், பெடரல் முறை பற்றிய கருத்து தெற்கின் சிந்தனைக்குள் அழிவுக்கு உட்பட்டமையை இயல்பானதொரு விடயமாக ஒருவருக்கு எடுத்துக் காட்டலாம்.

அதன் அடிப்படையில், தெற்கின் கட்சி என்ற வகையில் பண்டாரநாயக்கவினது பெடரல் சிந்தனையை முன்கொண்டு செல்லும் இயலுமைகள் இல்லையென அவர்கள் தர்க்கித்தால், அக்கருத்தில் ஒருவர் உடன்பட்டாலோ அல்லது உடன்படாவிட்டாலோ, வெளிப்படையாகப் பார்க்கும்போது அக்கருத்தில் ஓர் உண்மைத் தன்மை உள்ளது என ஒருவருக்கு விளங்கலாம்.

எவ்வாறிருப்பினும், அதிகாரத்தைப் பகிரும் பெடரல் முறையை நிராகரிப்பதுடன் மாத்திரம் நின்றுகொள்ளாமல், அதிகாரத்தை ஓரிடத்தில் குவியப்படுத்தும் ஜனநாயக கட்டமைப்புக்கு அப்பாற்பட்ட நிறைவேற்றதிகார முறையில் ஒருவரை சர்வாதிகாரியாக்கும் முறை 1978 இல் ஜே.ஆர். இனால் ஏற்படுத்தப்பட்டபோது சிறீமா பண்டாரநாயக்க தலைமையிலான சுதந்திரக் கட்சி அதற்கெதிராகக் கிளர்ந்தெழுந்ததை நாம் அறிவோம். அவர்கள் அன்று புறக்கோட்டை அரச மரத்தடியில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டார்கள். அங்கு அவர்கள் பெடரல் முறை தேவையெனக் கூறவில்லை. ஜனாதிபதி முறை தேவையற்றது என்பதாகவே கூறினார்கள்.

இவ்வொட்டு மொத்த வரலாற்றையும் சுருக்கிப் பார்த்தால், பெடரல் முறை கைவிடப்பட்ட, நிறைவேற்றதிகார முறையை நிபந்தனையின்றி நிராகரிக்கின்ற கொள்கையே ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தத்துவமாக உள்ளது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பதிவுசெய்யப்பட்ட பிறப்புச் சான்றிதழின் படி, தற்பொழுது அதற்கு 65 வயதாகிறது. இந்நீண்ட வரலாற்றில் மேற்குறிப்பிட்ட தத்துவத்தின் இரண்டாவது விடயம் கடந்த 5 வருட காலப்பகுதியிலேயே தலைகீழாய் மாறியது. அதாவது, மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் 2010 முதல் 2015 வரையிலான ஆட்சிக் காலமாகும்.

18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை 'வலுக் கட்டாயமாக' நிறைவேற்றிய சந்தர்ப்பம் முதல், மஹிந்த ராஜபக்ஷவின் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இவ்விடயத்தில் 1978 இல் நிலவிய ஜே.ஆரின் ஐக்கிய தேசியக் கட்சியையும் முந்திச் சென்றது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவும் சிறிமா அம்மையாரும் தலைமை தாங்கிய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை தலைகீழாய் மாற்றிய நிகழ்வாகவே இது நோக்கப்படுகிறது.

இதனால் இன்று நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்டவர்கள் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தொடர்பில் கதைக்கின்றபோது மேற்குறிப்பிட்ட இறுதி 5 வருடத்தில் நிலவிய மஹிந்த ராஜபக்ஷவினது சுதந்திரக் கட்சி தொடர்பிலேயே அவர்கள் பேசுகிறார்கள் என்பதை நினைவில் இறுத்திக் கொள்ள வேண்டும். கட்சி வரலாறு ரீதியாக எடுத்தாலும், கட்சியின் கொள்கை தொடர்பாக எடுத்துக் கொண்டாலும் உண்மையில் இவர்கள் இன்னும் கால் பதித்துக் கொண்டுள்ள மஹிந்த அணிக்குரிய விசுவாசம் என்ற ரீதியில் எடுத்துக் கொண்டாலும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துவது பண்டாரநாயக்கவினது சுதந்திரக் கட்சியை அல்ல. ராஜபக்ஷாக்களின் சுதந்திரக் கட்சியையாகும் என்பது நிரூபணமாகிறது.



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி எந்தக் குடும்பத்திற்கு உரித்தாக வேண்டும் என்பது எமக்கு பிரச்சினையல்ல. அது பண்டாரநாயக்க குடும்பத்துக்கு உரித்தானாலும், ராஜபக்ஷாக்களுக்கு உரித்தானாலும், மைத்திரிபாலவுக்கு உரித்தானாலும் எமக்கு பரவாயில்லை. என்றாலும் இங்கு குறிப்பிடப்படுகின்ற குடும்பப் பெயர்களுக்குப் பின்னால் தனித்துவமான அரசியல் கொள்கைகள் பின்பற்றப்படுவதாக இருந்தாலோ அல்லது ஒன்றுக்கொன்று முரணான அரசியல் கொள்கைகள் அப்பெயர்களோடு அடிபடுவதாக இருந்தால் அப்பெயர்கள் தொடர்பில் எம்மிடம் ஒரு கருத்து இருக்கும். அது தொடர்பாகவே நாம் இங்கு பேசுகிறோம்.

இலங்கை போன்ற நாடுகளில் நிலப் பிரபுத்துவ ஆதிக்கத்தை ஒட்டியதாகவே கட்சி உரிமை உள்ளது. இலங்கையின் பிரதான முதலாளித்துவ கட்சிகள் இரண்டும் அதனை உறுதிப்படுத்துகிறது. எனினும், பல்வேறு வரலாற்று, புவியியல் காரணிகளை முன்னிலைப்படுத்தி ஐக்கிய தேசிய கட்சி அந் நிலப்பிரபுத்துவ கட்டமைப்பிலிருந்து விலகிச் சென்றது. சேனாநாயக்க குடும்பத்தின் பின்னர் குடும்ப உரிமைக்கு அக்கட்சி உட்படவில்லை. ஐ.தே.கா.வின் மொத்த ஆட்சிக் காலப்பகுதியில் கொதலாவல, ஜயவர்தன, பிரேமதாச, விக்ரமசிங்க என்ற வகையில் அதன் உரிமை அடிக்கடி மாறிப்போயுள்ளது. விக்ரமசிங்கவினைத் தொடர்ந்து நிச்சயமாக அக்கட்சியின் உரிமை மீண்டும் ஒருமுறை மாற்றமடையும் என்பதில் சந்தேகமில்லை.

எனினும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி 65 வருட காலத்தில் 2 குடும்பங்களாலேயே உரிமை கொண்டாடப்பட்டுள்ளது. (அதிலும் 55 வருடங்களாக ஒரு குடும்பம் உரிமை கொண்டாடியது) இதில் 25 வருடங்கள் (1978 வரை) பிரதமர் முறையின் கீழும் 40 வருடங்கள் ஜனாதிபதி முறையின் கீழும் இருந்துள்ளது.

கட்சி உரிமை குடும்ப ஆதிக்கத்திற்கு உட்படுவது நிலப்பிரபுத்துவ முறையின் விளைவாக உள்ளது. நிலப்பிரபுத்துவ முறை இன்னும் முழுமையான நீங்கியிருக்காத சமுதாயத்தில் ஜனாதிபதி முறையாக இருந்தாலும் பாராளுமன்ற முறையாக இருந்தாலும் கட்சி உரிமை குடும்ப ஆதிக்கத்திற்கு உட்படுவதற்கான கூடுதல் வாய்ப்புள்ளது. எனினும் அத்தகைய நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் ஜனாதிபதி முறையும் இருந்தால் கட்சி உரிமை மாத்திரமல்லாமல் நாட்டின் உரிமையும் குடும்ப ஆதிக்கத்திற்கு உட்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகம்.

ஜே.ஆர். இற்குப் பின்னரும், பிரேமதாசவுக்குப் பின்னரும், ரணில் விக்ரமசிங்கவுக்குப் பின்னரும் அக்குடும்ப உரிமை ஐ.தே.க. தொடர்பில் காணப்படுவதில்லை. விஷேட தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டிருப்பதே அதற்கான கரணமாகும். என்றாலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் அத்தகைய தடங்கல்கள் இன்றி குடும்ப மரம் வளமான முறையில் நடப்பட்டது.

எவ்வாறிருப்பினும் இந்நிலப் பிரபுத்துவ பரம்பரைக்கும் நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறைக்கும் உள்ள உறவுகள் நாட்டின் எதிர்கால அரசியல் கலாசாரத்திற்கு எவ்வகையில் தாக்கம் விளைவிக்கும் என்கின்ற விடயம் எமக்கு முக்கியமாகின்றது.

ஆளும் (நபரும்) குடும்பமும் என்பது முதலாளித்துவ சமூக பொருளாதார கட்டமைப்பின் மையப்பிரிவாகும். புராதன மன்னர் ஆட்சி முறையில் அது பிறப்பாக்கம் பெற்றதுடன், முதலாளித்துவ முறைக்குள் அது இளமைப் பருவத்தை அடைந்தது. அது எவ்வாறெனில், முதலாளித்துவ முறைக்குள் சமூகம் அள்ளுண்டு செல்கையில் ஆள் (நபர்) மற்றும் குடும்பம் என்கின்ற குறுகிய பிரிவிலிருந்து அதிகாரம் விடுதலை செய்யப்பட வேண்டியிருந்தது. ஏனெனில், மூலதனத்தின் சுதந்திர நடமாட்டத்திற்கு பரந்ததொரு இடப்பரப்பு தேவை என்பதனாலாகும். நாம் இன்று காணும் முதலாளித்துவ ஜனநாயகமே அது.

இத்தகைய ஜனநாயகத்திற்குள், அதிகாரத்தை ஜனாதிபதி முறையின் கீழ் ஒன்று படுத்துகின்ற எல்லாச் சந்தர்ப்பத்திலும், அதற்கு சரிசம விகிதத்தில், அவ்வதிகாரத்தை கட்டுப்படுத்துகின்ற சமமான மாற்றீட்டு அதிகார மையங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். உதாரணமாக அமெரிக்காவில் பலம் மிக்க நிறைவேற்று ஜனாதிபதி முறை ஏற்படுத்தப்படுகின்ற வேளையில், அதற்கு சமமான முறையில் அதிகாரத்தை சமநிலைப் படுத்தக்கூடிய பாராளுமன்றமும், மாநில அரசு முறையும், நீதிமன்றமும், சுயாதீன சட்ட வரம்புகளும் அதிகார மையங்களாக கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

இலங்கையை ஒப்பிட்டுப் பார்த்தால் அதன் மறுபக்கமே அரங்கேரியது. நிறைவேற்று ஜனாதிபதி முறையை கட்டுப்படுத்துவதற்கோ அல்லது அதிகாரங்களை சமநிலைப்படுத்தவதற்கோ அல்லாமல் இம்முறையை இன்னும் ஊதிப் பெருக்கும் நோக்கில் பாராளுமன்றமும், மாகாண சபை முறையும், நீதிமன்றமும், பொலிஸும், சட்ட திட்டங்களும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

நாம் மீண்டும் மைத்திரிபால சிறிசேனவின் பாராளுமன்ற உரைக்குச் செல்வோம். பாராளுமன்ற முறையை பலப்படுத்த வேண்டும் என அவர் தெளிவுபடுத்தும்போது அதன் மூலம் ஒரு விடயம் எமக்கு நிரூபணமாக வேண்டும். ஒட்டுமொத்த அதிகாரத்திற்கும் முடிச்சுப் போடக்கூடிய பிரதான தடங்கல்களை நீக்கிவிட வேண்டும் என்பதாகும். அவை எவை?

இடம் போதாமையினால் அவற்றில் இரண்டை மாத்திரம் சுருக்கமாகச் சொல்கிறேன். ஒன்று நிலப்பிரபுத்துவ சிந்தனை. அதற்குள் எமது நாட்டிற்கு மன்னர் ஒருவர் தேவை என நினைக்கிறார்கள். ஒற்றையாட்சி முறை மற்றும் பௌத்த சமயத்திற்கு முதலிடம் கொடுத்தல் போன்ற விடயங்களை அரசனொருவரின் கீழ் மாத்திரமே அடைந்து கொள்ளலாம் என நினைக்கின்றார்கள்.

இரண்டாவது விடயமாக, நிறைவேற்று ஜனாதிபதி முறையின் கீழேயே இவ் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக யாப்பு ரீதியான சூழலைக் கட்டியெழுப்பலாம் என நினைக்கிறார்கள்.

இன்று வரையில் இந்நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதிபதி முறையை ரத்துச் செய்வதாக (அடிக்கடி சொல்லாமல்) மிகச் சிக்கனமான முறையில் கூறி வருவது மேற்குறிப்பிட்ட நிலப்பிரபுத்துவ முறையினால் ஏற்படுத்தப்பட்டுள்ள யாந்திரீகத்திற்குள் அவரும் (விரும்பியோ விரும்பாமலோ) கைதியாக்கப்பட்டுள்ளார் என்பதனாலாகும்.

(பக்.12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



றவூப் ஸெய்ன்

நல்லாட்சி அரசியல்

-அதாவது ஒலுவில் கரையோர மாவட்டக் கோரிக்கை முட்டாள் தனமானது என்றும் இது ஒட்டுமொத்த இலங்கை முஸ்லிம்களையும் குர்பான் கொடுக்கும் முட்டாள் தனமான செயல் என்றும் வர்ணித்துள்ளார்.

வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட்டால் கரையோர மாவட்டம் கோரும் மு.கா. இணைக்கப்படாவிட்டால் எதனைக் கோருகின்றது என்பது தெளிவில்லை. இதேவேளை, இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் முறை குறித்தும் முஸ்லிம் கட்சிகளுக்கிடையே ஒன்றுக்கொன்று நேரெதிரானதும் முரண்பாடானதுமான நிலைப்பாடுகளே நிலவுகின்றன.

''தேர்தல் முறைமையானது நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் தொகுதி ஆசனங்களைக் கொண் புரிந்துகொள்ளாத அரசியல் நிலைப்பாடுகளையே முஸ்லிம்கள் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றன.

நாட்டைத் துண்டாடும் அரசியல் தீர்வை இடைக்கால அறிக்கை நிராகரித்துள்ள அதேவேளை, உச்ச கட்ட அதிகாரப் பகிர்வை அது ஏற்றுக்கொண்டுள்ளது. அந்த அதிகாரப் பகிர்வில் முதல் நிலை அலகாக மாகாணங்களையே இவ்வறிக்கை பரிந்துரை செய்கின்றது. அதிகாரப் பகிர்வுக் கோட்பாடுகள் என்ற பிரிவின் இரண்டாம் உப பிரிவில் மாகாணங்களின் இணைப்பு பற்றி குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகள் முஸ்லிம்கள் மத்தியில் பாரிய சந்தேகத்தையும் அச்சத்தையும் உருவாக்கியுள்ளது.

அதில் பின்வரும் தெரிவுகள் யோசனைக்கு தெரியாத முஸ்லிம் கட்சிகள் இன்று கிழக்கை வடக்குடன் இணைத்து விட்டு ஒலுவில் கரையோர மாவட்டத்தைக் கோருவது எம்.எம். ஸுஹைர் சொல்வது போன்று கடைந்தெடுத்த முட்டாள்தனமாகும்.

1980களில் வடக்கு கிழக்கில் காணப்பட்ட அரசியல் சூழலைக் கருத்திற் கொண்டு வடக்கு கிழக்கில் ஒரு நிலத் தொடர்பற்ற முஸ்லிம் அதிகார அலகை அஷ்ரப் முன்வைத்திருந்தார். அன்றைய அரசியல் சூழல் அதற்குச் சாதகமாய் இருந்தது. எனினும், இறுதிவரை அவரது கோரிக்கை கவனத்திற் எடுக்கப்படவில்லை.

இன்று தென்னிலங்கையில் முஸ்லிம் விரோத மதத் தேசியவாதம் திட்டமிட்டு வளர்க்கப்படுகின்றது. 1915 கலவரத்திற்குத் தூபமிட்ட இனப்

# வரலாற்று முக்கியத்துவம் மிக்க தருணத்தில் துரோகமிழைக்கத் துடிக்கும் அரசியல்வாதிகள்

2016 மார்ச் 09 இல் ஸ்தாபிக்கப்பட்ட அரசியலமைப்பு வழிநடாத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை ஒகஸ்ட் 21 ஆம் திகதி பிரதமரால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் 10 அடிப்படை அம்சங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. மக்களும் அரசும் இறைமையும், பௌத்த மதம், மாகாண அதிகாரப் பகிர்வு, இரண்டாம் சபை, தேர்தல் முறைமை, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை, பிரதமர் நியமனம், ஜனாதிபதிக்கு விஷேட அதிகாரம் அறிக்கையின் இணைப்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய நான்கு சிறுபான்மைக் கட்சிகளின் கூட்டு முன்மொழிவு உள்ளடக்கப்பட்டுள்ளது.

இடைக்கால அறிக்கையில் உள்ளடங்கியிருக்கின்ற தேர்தல் முறைமை மற்றும் மாகாண அதிகாரப் பகிர்வு என்பன குறித்த முஸ்லிம் அரசியல் கட்சிகளின் நிலைப்பாடு தெளிவற்றதாகவே உள்ளது. பின்னிணைப்பாக சேர்க்கப்பட்டுள்ள நான்கு கட்சிகளின் கூட்டு முன்மொழிவில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களை ஒரு மாகாண சபையாக இணைப்பதற்கான எந்தவொரு அரசியல் ஏற்பாட்டையும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் எதிர்க்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கை 26 நிருவாக மாவட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் தென்கிழக்கு கரையோரத்தை அடிப்படையாகக் கொண்ட ஒலுவில் மாவட்டம் 26 ஆவது நிருவாக மாவட்டமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் விரும்புகின்றது என முன்மொழியப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு இணைவதா பிரிவதா என்பது குறித்து முஸ்லிம் காங்கிரஸ் எந்தத் தெளிவான நிலைப்பாட்டையும் இதுவரை வெளிப்படுத்தாத போதும், இரண்டு விடயங்கள் முஸ்லிம் காங்கிரஸ் வடக்குக் கிழக்கு இணைப்பை ஆதரிக்கின்றது என்பதைத் தெளிவாக்குகின்றது. கடந்த காலங்களில் தமிழ்த் தேசிய கூட்டமைப்புடன் முஸ்லிம் காங்கிரஸ் நடத்திய பேச்சுவார்த்தைகளில் இவ்விடயம் குறித்து கலந்துரையாடியுள்ளனர். அதன்படி, மு.கா., த.தே.கூ. இன் இணைப்புக் கோரிக்கைக்கு ஆதரவளிப்பதாக உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து கட்சித் தலைவர் ஹக்கீம் வெளிப்படையாக எதனையும் தெரிவிக்காத போதும், இதுவே கள உண்மையாக இருக்கின்றது. இரண்டாவது ஆதாரம்: வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டால் முஸ்லிம் கரையோர மாவட்டமொன்று வழங்கப்பட வேண்டும் என ஹக்கீம் வலியுறுத்தி வருகின்றார்.

இடைக்கால அறிக்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் குறித்து கூறப்பட்டுள்ள விடயங்கள் த.தே.கூ.இற்கு சார்பானதாகவே உள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தனியொரு மாகாணமாக புதிய அரசியலமைப்பில் அங்கீகரிப்பது குறித்த தெரிவுகள் யோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கில் சமஷ்டித் தீர்வை முன்வைத்து வரும் த.தே.கூ. ''உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. அவற்றை நடைமுறைப்படுத்தும் துணிச்சல் அரசுக்கு வேண்டும்'' என்று கூறி வருகின்றது. இதேவேளை, கரையோரை மாவட்டக் கோரிக்கை இடைக்கால அறிக்கையில் இல்லை. அது குறித்து நாம் விளக்கம் கோருகின்றோம் என ஹக்கீம் தெரிவிக்கின்றார்.

இதற்கிடையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.எம். ஸுஹைர், தனியலகுக் கோரிக்கை



டுள்ள அதேவேளை, இறுதி முடிவில் விகிதாசாரத்தை உறுதிப்படுத்துவதை எதிர்பார்க்கும் ஆசன ஒதுக்கீடு ஒரு கலப்பு உறுப்பினர் விகிதாசார முறைமையாக இருத்தல் வேண்டும். பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கையானது தொகுதி வாரி அடிப்படையில் 140 (60%) அத்துடன் இறுதி முடிவு விதாசாரத்தில் பிரதிபலிப்பதற்குத் தேவைப்படும் இழப்பீடு ஆசனங்களாக 93 (40%) என பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை 233 ஆகப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது உள்ளூராட்சி, மாகாண சபை மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் அனைத்தும் விகிதாசார மற்றும் தொகுதி வாரி முறையை உள்ளடக்கிய ஒரு கலப்புத் தேர்தல் முறையை இடைக்கால அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

இத்தேர்தல் முறை குறித்தும் ஒன்றுக்கொன்று நேரெதிரான கருத்துக்களை முஸ்லிம் கட்சிகள் தெரிவித்து வருகின்றன. கலப்புத் தேர்தல் முறையானது சிறுபான்மையினரின் -குறிப்பாக முஸ்லிம்களின்- பிரதிநிதித்துவங்களைக் குறைக்கும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன் கூறுகிறார்.

இதேவேளை, கலப்பு முறையில் தேர்தலை நடத்துவதற்கு அரசினால் தீர்மானிக்கப்பட்டுள்ளமையானது எமது நீண்டகால போராட்டத்திற்குக் கிடைத்த பாரிய வெற்றியாகவே கருதப்படுகின்றது என மு.கா. தலைவர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கலப்புத் தேர்தல் முறை முஸ்லிம் சமூகத்திற்கு சாதகமானதா பாதகமானதா என்பது குறித்து எந்த விஞ்ஞானபூர்வமான கள ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை.

தேர்தல் பிரதி ஆணையாளர் உள்ளிட்டு சில முஸ்லிம் கட்சிகளும் கலப்புத் தேர்தல் முறை முஸ்லிம்களுக்குச் சாதகமானது என்று கருத்து வெளியிட்டு வருகின்றனர். வேறு சில கட்சிகளோ அது முஸ்லிம் பிரதிநிதித்துவங்களைக் குறைக்கும் என்று வாதிடுகின்றனர்.

தனிப்பட்ட அரசியல் ஆய்வாளர்களோ கட்சிகளோ இது குறித்துத் தெளிவான ஆய்வு முடிவுகளை எட்டவில்லை என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. முஸ்லிம் அரசியல் கட்சிகள் எதுவுமே வடக்குக் கிழக்கு இணைப்பு, முஸ்லிம்களுக்கான அதிகாரப் பகிர்வு, தேர்தல் முறைமை குறித்த தெளிவான நிலைப்பாட்டில் இல்லை. அவை இவ்விவகாரங்களில் செய்வதறியாது தடுமாறி நிற்கின்றன. தமிழர்களுக்கு 'அது' வழங்கப்பட்டால் 'இது' எங்களுக்கு என்பது போன்ற ஒப்பேற்று அரசியலை நடாத்தி வருகின்றது.

வடக்கு கிழக்கின் கடந்த கால அரசியல் சூழமைவுகள் மற்றும் தென்னிலங்கையின் சமீபத்திய மதத் தேசியவாத

எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

- இரண்டு அல்லது அதற்கு அதிகமான மாகாணங்களை தனியலகாக உருவாக்கும் சாத்தியப்பாடு தொடர்பில் அரசியலமைப்பின் தற்போதுள்ள ஏற்பாடுகள் புதிய மாகாண சபைகளில் மக்கள் தீர்ப்பொன்றும் தேவைப்படுத்தப்படும் என்ற மேலதிக தேவையுடன் வைத்திருக்கவும் யோசனை தெரிவிக்கப்பட்டது.
- இணைப்பிற்கு அரசியலமைப்பு ஏற்பாடு செய்யலாகாது.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தனியொரு மாகாணமாக புதிய அரசியலமைப்பு அங்கீகரிக்கும்.

சாதாரண மக்களுக்கு விளங்காத கறாரான மொழிநடையில் தெரிவிக்கப்பட்டுள்ள இக்கருத்துக்கள் மிகவும் ஆபத்தானவை. கிழக்கு மக்களின் அரசியல் பிரதிநிதியாகக் கருதப்படும் முஸ்லிம் காங்கிரஸ், வடக்கு கிழக்கு இணைப்பை நிபந்தனையுடன் ஆதரிப்பதாக ஏற்கனவே கூறியிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இணைப்புக் கோரிக்கையை ரணில்-மைத்திரி அரசாங்கம் கொள்கை அளவில் ஆதரிக்கின்றது. சர்வதேச சமூகமும் இணைப்புக்கு ஆதரவளிக்கும் என தமிழ்த் தரப்பு எதிர்பார்க்கின்றது.

இத்தருணத்திலேயே மாகாணங்களின் இணைப்புக்கு முஸ்லிம் மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று சம்பந்தரும் மாவை சேனாதிராஜாவும் தற்போது பகிரங்கமாக வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

வடக்கு கிழக்கு இணைப்பு குறித்து கிழக்கு முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாடு ஒன்றாய் இருக்க, அதற்கு மாற்றமான நிலைப்பாட்டை முஸ்லிம் காங்கிரஸ் எடுப்பது மிகப் பெரிய அரசியல் துரோகமாகும். தேர்தல் காலங்களில் தேர்தலொன்றை முதிர்ச்சியுடன் பக்குவத்துடனும் எதிர்கொள்ளத் தெரியாமல் தெருச் சண்டையில் ஈடுபடும் முஸ்லிம் அரசியல் கட்சிகள், குறிப்பாக முஸ்லிம் காங்கிரஸ், கிழக்கு மாகாண முஸ்லிம்களின் தலைவிதி தொடர்பாக தான்தோன்றித்தனமான முடிவுகளை எட்டுவது பெரும் வரலாற்றுத் துரோகமாகும்.

வடக்கும் கிழக்கும் இணைக்கப்படக் கூடாது என்பது குறித்தும் அதற்கான நியாயங்கள் குறித்தும் ஏற்கனவே நாம் விரிவாக எழுதியுள்ளோம். இந்தியாவின் அரசியல் தேவைகளுக்காக உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமை முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை. 1987 இல் வட கிழக்கு இணைக்கப்பட்ட போது அது தொடர்பில் முஸ்லிம் மக்களின் அபிலாசைகள் எதுவும் கருத்திற் கொள்ளப்படவில்லை. இணைப்பு தொடர்பான வாக்கெடுப்பு எதுவும் நடத்தப்படாமலேயே வடக்கோடு கிழக்கு இணைக்கப்பட்டது.

வரதராஜப் பெருமாள் முதலமைச்சராக்கப்பட்டார். தமிழ் ஆயுதக் குழுக்கள் முஸ்லிம்களை வேட்டையாடின. நிருவாக அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. கல்வியிலும் தொழில் வாய்ப்பிலும் முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது. இன்று கல்முனை முஸ்லிம் பிரிவில் தம்மால் வாழ முடியாது எனவும் தமிழர்களுக்கு தனியான பிரதேச செயலகப் பிரிவு வேண்டும் என்றும் கோரும் தமிழர்கள், 36 வீத கிழக்கு மாகாண முஸ்லிம்களை வடக்கிலுள்ள பெரும்பான்மைத் தமிழர்களோடு இணைத்து 18 வீதமாகக் குறைக்க வேண்டும் என எதிர்பார்ப்பது எந்த வகையில் நியாயம்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைமை கிழக்கு முஸ்லிம்களின் கடந்த கால அரசியல் ஒடுக்கு முறை ... புரிந்துகொள்ள வேண் ... பிரதேச சபையொன்றை முன்னெடுக்கத்

பிரச்சாரங்கள் 1800 களின் கடைசிக் கூறுகளில் எப்படி தலைவிரித்துத் தாண்டவமாடியதோ அதுபோன்றதொரு சூழலையே இன்று முஸ்லிம்கள் எதிர்கொள்கின்றனர்.

இந்நிலையில் கரையோர மாவட்டக் கோரிக்கையானது தென்னிலங்கை சிங்களவர்களிடையே உருவாக்கப் போகும் மனப் பதிவுகள் சிங்கள இனத் தேசியவாதத்திற்கே சாதகமாய் இருக்கும். அரசாங்கம் அத்தகையதொரு கோரிக்கையை ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை. இதனையே இடைக்கால அறிக்கை உணர்த்தி விட்டது.

நாங்கள் வைத்த கோரிக்கை உள்வாங்கப்படவில்லை. அதற்கு விளக்கம் கோருகின்றோம் என்கிறார் ஹக்கீம். ஆங்கிலத்தில், Much ado about nothing என்று ஒரு கூற்று உண்டு. நடந்தேறாத ஒன்றைப் பற்றி கொக்கரிக்கும் இந்த அரசியல் பம்மாத்து சிங்கள பௌத்த தேசியவாதிகளின் நச்சுப் பிரச்சாரத்திற்கு வெறும் அவலாக மாறுமே ஒழிய நடைமுறையில் எதனையும் சாதிக்கப் போவதில்லை.

பிராந்திய மற்றும் சர்வதேச புவி அரசியல் போக்குகள் பற்றிய குறைந்தபட்சப் புரிதலும் இல்லாத குழந்தைத் தனமான இந்தக் கோரிக்கை கிழக்கு முஸ்லிம்களுக்கு அனாவசியமானது. கல்முனையில் உட்கார்ந்து கொண்டு ஒலுவில் கரையோர மாவட்ட கோரிக்கை குறித்து எக்களிக்கும் ஹரிஸ் போன்றவர்கள் இதனைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழர்களுக்கு வடக்கு கிழக்கு இணைக்கப்பட்டால் முஸ்லிம்களுக்கு கரையோர மாவட்டம் கிடைக்க வேண்டும் எனும் இந்த If than Politics நமது அரசியல் கட்சிகளுக்கு பழகிப் போய்விட்டது. சுயாதீனமான, தற்துணிச்சல் மிகுந்த, நீண்டகாலத்தைக் கவனத்திற் கொண்ட தூர தரிசனம் மிக்க அரசியல் பார்வை எதுவும் நமது சிவில் சமூக நிறுவனங்களுக்கோ அரசியல் கட்சிகளுக்கோ இல்லை என்பதையே இன்றைய அரசியல் விவாதங்கள் வெளிப்படுத்துகின்றன.

தமிழ் அரசியல் மேலாதிக்கத்தின் கீழ் கிழக்கு முஸ்லிம்களால் இதற்கு மேல் வாழ முடியாது என்ற அரசியல் யதார்த்தத்திலிருந்தே வடக்குக் கிழக்கு இணைப்பை முஸ்லிம்கள் நோக்குகின்றனர். இணைப்பற்ற எந்தவொரு அரசியல் தீர்வையும் அரசாங்கம் தமிழ் தரப்பிற்கு வழங்கலாம். அதில் முஸ் லிம்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. ஆனால், இனப் பிரச்சினை என்பது தமிழ்-சிங்கள தரப்புகளுக்கு மட்டும் இடையிலானது என்ற அரசியல் நிலைப்பாட்டை முஸ்லிம்கள் ஏற்கத் தயாரில்லை.

தாம் விரும்பியோ விரும்பாமலோ இனப் பிரச்சினையின் மூன்றாம் பரிமாணம் முஸ்லிம்கள் என்ற உண்மையை தேசிய அரசாங்கமும் பிராந்திய சக்திகளும் தமிழர் தரப்பும் இதய சுத்தியோடு ஏற்றுக்கொள்ள வேண்டும். முஸ்லிம் சமூகத்தை தாஜா பண்ணும் வகையில் 'ஆற்றைக் கடக்கும் வரை அண்ணன் தம்பி. கடந்து விட்ட பின் நீ யாரோ நான் யாரோ' என்ற பழைய பல்லவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாட ஆரம்பித்துள்ளது.

கொழும்பிலுள்ள மனோ கணேசனும் ஏதோ முஸ்லிம் ஆதரவுக் குரல் போன்று ஒலிக்கத் தொடங்கியுள்ளார். வடக்கு கிழக்கு இணைந்தால் முஸ்லிம்களுக்கு என்று தனியான நிருவாக அலகின் தேவைப்பாடு அவசியம். அது முஸ்லிம்களின் நீண்டகாலக் கனவு என்கிறார். அது ஒருவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான பிரச்சாரக் குரலே.

மிக முக்கியமானதும் கொதிப்பானதும் வரலாற்று நிலைமாறும் கட்டமுமான இக்கால கட்டத்தில் கலாநிதி ஜயம்பதி விக்ரமரத்ன குறிப்பிடுவது போன்று, (பக்.12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுவது நலம்



இம்தியாஸ் பக்கீர் மாக்கார்

# மர்ஹூம் அஸ்வர் ஹாஜியார்



முன்னாள் அமைச்சர் அஸ்வர் குறித்த என் நினைவுகள் 60 ஆம் தசாப்தத்தின் துவக்க காலப் பகுதியை நோக்கி நகர்கின்றன. 1960 ஆம் ஆண்டிலேயே நான் அவரை முதலில் பார்த்தேன். அப்போது எனக்கு 6 வயதிருக்கும். அன்றைய அவதானம் பற்றிய சிறியதொரு நினைவே என்னிடம் உள்ளது. 1960 ஆம் ஆண்டு மார்ச் மாத தேர்தல் காலப்பகுதியில் பேருவளை, மாளிகாஹேன பிரதேசத்தில் எனது தந்தைக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக எனது தந்தையின் ஆசானாகிய டி.பி. ஜாயாவின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கலாநிதி ஜாயா ஆங்கிலத்தில் ஆற்றிய உரையை மர்ஹூம் அஸ்வர் அவர்கள் தமிழில் உரைபெயர்ப்புச் செய்ததை நான் அவதானித்தேன். அன்றைய அவரது மொழிபெயர்ப்பு தொடர்பில் எனக்கு எவ்வித புரிதல்களும் நினைவுகளும் இல்லை.

அன்று முதற்தடவையாக நான் மர்ஹூம் அஸ்வர் அவர்களை பார்த்ததன் பின்பு டொக்டர் எம்.சி.எம். கலீல், பேருவளை பிரதேசத்தில் ஆற்றிய பல்வேறு உரைகளை அவர் மொழிபெயர்ப்புச் செய்ததை அவதானித்துள்ளேன். டட்லி சேனாநாயக்க, ஜே.ஆர். ஜயவர்தன, ஆர். பிரேமதாச போன்றோர் அரசியல் மேடைகளில் ஆற்றிய உரைகளை அஸ்வர் ஹாஜியார் திறமையான முறையில் மொழிபெயர்ப்புச் செய்ததை நான் என் இளமைப் பருவத்தில் ஆர்வத்தோடு செவிமடுத்துள்ளேன்.

1960களில் பேருவளை லைட் ஹவுஸ் (கலங்கரை விளக்கு) தீவுக்கு அஸ்வர் ஹாஜியாருடன் படகில் சென்ற பயணம் ஒருபோதும் எனக்கு மறப்பதில்லை. அப்போது சவூதி அரேபியாவுக்கான தூதரகம் இலங்கையில் இருக்கவில்லை. இதனால் ஹஜ் யாத்திரைக்குச் செல்லும் இலங்கையர்களுக்கு வருடத்திற்கு ஒரு தடவை வீசா வழங்குவதற்காக வேண்டி சவூதி நாட்டு அதிகாரியொருவர் இலங்கை வருவது அப்போதைய வழக்கமாகக் காணப்பட்டது. அன்று வருகை தந்த சவூதி நாட்டு அதிகாரி அல் ஹம்தானுக்காக வேண்டி எனது தந்தை ஏற்பாடு செய்த படகுப் பயணத்தில் அஸ்வர் ஹாஜியாரும், முன்னாள் செனட் சபை உறுப்பினரான மசூர் மௌலானாவும் கலந்துகொண்டிருந்தனர். படகுப் பயணத்தின்போது கடலலையின் வேகம் உக்கிரமடைந்து காணப்பட்டமையினால் படகு அங்கும் இங்கும் அசைய ஆரம்பித்தது. கடலில் பயணித்து பழக்கமின்மையால் அஸ்வர் ஹாஜியாரும் மசூர் மௌலானவும் சிறிது பயத்துடன் இருந்தார்கள்.

அஸ்வர் ஹாஜியார் தனது பொக்கட்டிலிருந்த தஸ்பீஹை எடுத்து அல்லாஹ்வை நினைவுகூர ஆரம்பித்தார். மசூர் மௌலானவும் பொக்கட்டிலிருந்த சிறிய குர்ஆனை எடுத்து ஓத ஆரம்பித்தார். அஸ்வர் ஹாஜியாரை பற்றிய இக்குறிப்பை எழுதும்போது அன்று நான் கண்ட அந்தக் காட்சி இன்றும் என் மனக்கண் முன்னால் நிழலாடுகிறது.

இளம் வயதில் இடதுசாரி சிந்தனைகளைச் சுமந்து, ரொபட் குணவர்தன போன்ற இடதுசாரி தலைவர்களோடு போராட்ட கோஷங்களைக் கூறி, ஊர்வலங்கள் சென்று, அரசியலில் காலடியெடுத்து வைத்த இனிமையான கதைகளை நாம் அவரிடமிருந்து செவிமடுத்துள்ளோம். பிற்பட்ட காலத்தில் அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் இளைஞர் பிரிவில் தொடர்புகளைப் பேணிய அஸ்வர் ஹாஜியார் கலாநிதி டி.பி. ஜாயா, டொக்டர் எம்.சி.எம் கலீல், பளீல் கபூர் போன்ற ஐக்கிய தேசிய கட்சித் தலைவர்களின் நிழலில் ஐக்கிய தேசிய கட்சி அரசியலில் பிரவேசித்தார்.

அஸ்வர் ஹாஜியார் ஆரம்பத்தில் டொக்டர் எம்.சி.எம். கலீலுடன் மத்திய கொழும்பு அரசியல் செயற்பாடுகளிலும் பிற்பட்ட காலத்தில் எம்.எச். முஹம்மதுடன் பொரளை தொகுதி அரசியல் செயற்பாடுகளிலும் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்குகொண்டார். 1960களின் நடுப்பகுதியில் எம்.எச். முஹம்மதின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட "மார்க்சிஸத்திற்கு எதிரான முஸ்லிம் கூட்டமைப்பு"இன் செயலாளராகவும் இவர் இருந்துள்ளார்.

எனது தந்தை பாராளுமன்ற சபாநாயகராக இருந்த காலத்தில் அவரது தனிப்பட்ட செயலாளராக இருந்த அஸ்வர் ஹாஜியார் பாராளுமன்ற நூலகத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்தார். சுதந்திரப் போராட்டத்தின் இறுதிக் காலப்பகுதியில், கலாநிதி டி.பி. ஜாயா அவர்கள் தேசிய அரசுப் பேரவையில் ஆற்றிய உரை மிக முக்கியமானதொன்றாகக் காணப்பட்டது. இவ்வரலாற்று முக்கியத்துவம் மிக்க உரையை நான் அஸ்வர் ஹாஜியாரின் மேசையில் இருந்த ஹன்சார்ட் அறிக்கையொன்றிலிருந்து வாசித்தேன். உண்மையில் அவர் பாராளுமன்ற சட்டதிட்டங்களையும் இந்நாட்டின் அரசியல் வரலாற்றையும் நன்றாகத் தெரிந்து கொண்ட அமைச்சரொருவராகக் காணப்பட்டார்.

முஸ்லிம் விவகார அமைச்சராக இருந்த காலப் பகுதியில் அவ்வமைச்சினை மக்களுக்கு மிகவும் நெருக்கமானதாக அமைத்து, மக்களின் தேவைகளை விரைவில் நிறைவேற்றிக் கொடுக்கும் முன்மாதிரி மிக்க அமைச்சொன்றாக முன்னெடுப்பதற்கு அவர் வழங்கிய தலைமைத்துவத்தைப் பாராட்ட வேண்டும். எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த காலப்பகுதியில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் 'நம் நாடு' எனும் பெயரில் தமிழ் பத்திரிகையொன்றை ஆரம்பித்து அதை பிரச்சாரப்படுத்துவதற்கு அவர் நாடு முழுவதிலும் பயணித்துள்ளார். அப்பத்திரிகையின் வளர்ச்சிக்கு அவர் மிகவும் ஆர்வத்துடன் ஒத்துழைப்பு வழங்கினார்.

கொழும்பு ஸாஹிரா கல்லூரியின் அதிபராக இருந்த எஸ்.எல்.எம். ஷாபி மரிக்கார் அவர்களின் தலைமையில் உருவாக்கப்பட்ட அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டின் ஆரம்பகர்த்தாவான அஸ்வர் ஹாஜியார், துவக்க காலத்திலிருந்தே அதன் நடவடிக்கைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்குபற்றி வந்துள்ளார். தென் ஆபிரிக்க மக்களின் சுதந்திரத்திற்கான போராட்டம், பலஸ்தீன் மக்களின் விடுதலைப் போராட்டம், கியூபா நாட்டு மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட அநீதிகளுக்கு எதிராக அவர் குரல் கொடுத்துள்ளார்.

அஸ்வர் ஹாஜியார் தனது வாழ்நாளின் இறுதிக் கட்டத்தில் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வேளையிலும்கூட பலஸ்தீன் நட்புறவுச் சங்கம் நடத்திய கூட்டமொன்றில் மிகுந்த கஷ்டத்துடன் பங்குபற்றியிருந்தார்.

ஐக்கிய தேசிய கட்சி, அகில இலங்கை முஸ்லிம் லீக், அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு, முஸ்லிம் லீக் இளைஞர் முன்னணி, இலங்கை பலஸ்தீன் நட்புறவுச் சங்கம் போன்றவற்றில் அவர் கலந்துகொண்டு தனது உயர்ந்த பங்களிப்புக்களை நல்கியுள்ளார். அவரது வாழ்வின் இறுதிக்கட்டத்தில் அவர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி மஹிந்த அணியில் இணைந்துகொண்டார். அவர் ஐ.தே.க. கொள்கையிலிருந்து விலகி பிறிதொரு அணியில் இணைந்துகொண்டார் என்பதைச் சொல்வதற்குப் பதிலாக, அவ்வரசியல் முடிவுக்கு அவர் தள்ளப்பட்டார் என்பதை நான் இங்கு சொல்ல விரும்புகின்றேன். இம்முடிவைத் தவிர என்னிடம் மாற்றீடுகள் இல்லையென அவர் மிகுந்த மனவேதனையுடன் என்னிடம் கூறிய விதம் என் நினைவில் ஊசலாடுகிறது.

அவர் இணைந்துகொண்ட அணிக்காக வேண்டி விசுவாசமாக இருந்தார். அவருக்கு வழங்கப்பட்ட பொறுப்புக்களை நூறு வீதம் நிறைவேற்றி வந்தார். அக்காலப்பகுதியில் இந்நாட்டின் சிறுபான்மை மக்கள் முகம்கொடுத்து வந்த இனவாதப் பிரச்சினைகள் தொடர்பில் அவர் மனவேதனையுடன் இருந்ததை நான் அவரோடு உரையாடுகின்றபோது தெரிந்து கொண்டேன்.

நடந்து கொண்டிருக்கும் விடயங்கள் மற்றும் அதன் பின்னணி குறித்து அவர் நல்ல புரிதலுடன் இருந்தார். ஆனாலும் வேறு மாற்றீடுகள் தொடர்பில் சிந்திக்க முடியாத இக்கட்டில் இருந்த அஸ்வர் ஹாஜியார், தான் இருந்த வரையறைக்குள் நீதி, நியாயத்திற்காக வேண்டி உயர்ந்தபட்சம் தன்னால் செய்ய முடியுமானவற்றைச் செய்வதற்கான அவதானத்துடன் இருந்தும் அவரால் ஒன்றும் செய்ய முடியாமல் போனது.

அன்றைய காலப்பகுதியில் முஸ்லிம்கள் தமது சுயகௌரவத்தை இழந்து, உயிர் அச்சத்துடன் தமது வாழ்வை கழித்த இருள்மயமான காலப்பகுதி. முன்னாள் அமைச்சர் அஸ்வர் உள்ளக ரீதியில் எதிர்கொண்டு வந்த கவலையான நிலைமைகளை எனக்குப் புரிந்துகொள்ள முடிந்தது.

முன்னாள் அமைச்சர் அஸ்வரின் வாழ்விலிருந்து இன்றைய அரசியல்வாதிகளுக்கும் அரசியலில் பிரவேசிக்கக் காத்திருப்போருக்கும் நிறையவே பாடங்களைக் கற்றுக்கொள்ள முடிகிறது. அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட நாம் அல்லாஹ்விடமே திரும்பிச் செல்ல வேண்டும் என்ற இஸ்லாமிய நியதிக்கமைய இறையடி சேர்ந்த அஸ்வர் ஹாஜியாருக்கு ஜன்னதுல் பிர்தௌஸ் என்னும் சுவர்க்கம் கிடைக்க வேண்டும் எனப் பிராத்தனை செய்கிறேன்.

# மீண்டுமொரு 1915 ஐ நோக்கி நாடு பயணிக்கிறதா?

இலங்கை முஸ்லிம்களுக்கு எதிராக சிங்களவர் மனங்களில் துவேஷம், கோபம், வைராக்கியம், வெறுப்பு போன்றவற்றை விதைக்கும் தீய நோக்கில் நிறுவனமயப்பட்ட சில குழுக்கள் சமூக ஊடகங்கள் மற்றும் பல்வேறு வழிகள் ஊடாகவும் சில காலமாக பாரிய பிரச்சாரமொன்றைக் கொண்டு செல்வது நாடறிந்த ரகசியம். அது அரசாங்கமும் அறிந்த ரகசியம் என்றாலும் இதனைத் தடுப்பதற்கு அரசாங்கம் எந்த வித அக்கறையும் காட்டுவதாகத் தெரியவில்லை. நாட்டின் முன்னணியிலுள்ள புத்திஜீவிகளும் கூட இதையிட்டு பெரிதாக அலட்டிக் கொண்டதாக இல்லை.

இது தொடர்பில் கடந்த வாரம் என்னைச் சந்தித்த ஆசிரியரொருவர் கூறிய விடயம் எனது இதயத்தை உலுக்கியது. மதக் கட்டுப்பாடுகளின்றி சுமுகமாக இருந்த அவருடைய வீட்டில், கணிதப் பிரிவில் கற்ற அவரது மகனின் செயற்பாடுகளில் கடந்த நான்கைந்து நாட்களாக ஒரு வித்தியாசத்தை அந்தத் தந்தையால் அவதானிக்க முடிந்துள்ளது.

சிலவேளைகளில் இரவுணவை இவர்கள் கடையில் வாங்கிச் சாப்பிடுவது வழக்கம். வழமையாக இரவுணவை அவர்கள் காலி கலகெடிய பிரதேசத்திலுள்ள எம்.ஜே.எம். எனும் முஸ்லிம் கடையிலேயே வாங்குவார்கள். பல்வேறு வகை உணவுகளும் உள்ள இந்தக் கடையின் உணவு ருஷியானது, சுத்தமானது என்பதோடு ஒப்பீட்டளவில் விலையும் குறைவு. இதனால் முஸ்லிம்கள் மட்டுமன்றி சிங்களவர்களும் இந்தக் கடையை நாடி வருவார்கள்.

அந்த வகையில் இவரும் அவரது மகனுடன் அன்று அந்தக் கடையை நாடியபோது, தான் முஸ்லிம் கடைகளில் சாப்பிடுவதை நிறுத்திக் கொள்ளத் தீர்மானித்திருப்பதாக அவரது மகன் சொன்னது அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. காரணம் கேட்டபோது, முஸ்லிம் கடைகளில் உள்ள உணவுகளில் மலட்டுத் தன்மைக்கான மருந்து கலக்கப்பட்டிருப்பதாகப் பதிலளிக்கப்பட்டது. இதற்கு ஏதேனும் ஆதாரம் உண்டா என்று தந்தை கேட்டதற்கு மகனால் பதிலளிக்க முடியவில்லை.

இது தொடர்பில் தந்தை தெளிவுபடுத்தியதையும் அவன் ஏற்றுக் கொள்ளும் நிலையிலில்லை. பெரும் கவலையுடன் இதனை என்னிடம் தெரிவித்த அவர், இதற்கு எதிராக எதுவும் செய்யாவிட்டால் பாரியதொரு அழிவுக்கு இது இட்டுச் செல்லும் என்று கூறினார். அவரது மகன் கணிதத் துறை பயில்பவர். அவரது நிலையே இந்த விடயங்களை தர்க்க ரீதியாக ஆய்ந்தறிந்து விளங்கிக் கொள்ளாத நிலையிலேயே இருக்கிறது.

முஸ்லிம் கடைகளின் உணவு மட்டுமன்றி அங்கு விற்கப்படுகின்ற உடை தொடர்பிலும் நிறுவனமயப்பட்டுப் பரப்பப்படுகின்ற பல கட்டுக் கதைகள் நிலவுகின்றன. இங்கு விற்கப்படும் உடைகளில் சிங்களவரை மலடாக்கும் மருந்து வகைகள் உள்ளதனால் இங்கு வாங்க வேண்டாம் எனக் கதை பரப்பப்படுகின்றது. முஸ்லிம்களின் கையில் இருக்கின்ற வர்த்தகத்தை சிங்களவரின் கைக்கு மாற்றும் நோக்கிலேயே இந்தக் கதைகள் பரப்பப்படுகின்றன.




மறுமலர்ச்சி இயக்கம்

இந்த நன்மைகள் சிங்களக் கடைகளில் கிடைப்பதில்லை. தெரிவு செய்வதற்கு இவர்கள் போதிய அவகாசம் வழங்குவதில்லை என்பது மட்டுமன்றி, குறித்த பொருளை வாங்காவிட்டால் தமது அதிருப்தியை வெளியிடுகின்ற சந்தர்ப்பங்களும் இருக்கின்றன. புடவை மற்றும் தைத்த ஆடை வர்த்தகத்தில் முஸ்லிம்களுடன் ஒப்பிடும் போது சிங்களவர்கள் பின்னுக்குத் தான் நிற்கிறார்கள். முஸ்லிம் ஆடை வர்த்தகர்களின்



தெரிவு செய்வதற்கு பல வகைகள் கிடைப்பதும் அணிந்து பார்ப்பதற்கு போதிய வசதி இருப்பதும் மலிவு விலையில் கிடைப்பதும் காரணமாக பலரும் ஆடை வாங்குவதற்கு முஸ்லிம் கடைகளைத் தெரிவு செய்கிறார்கள். நானும் நோலிமிட், பஷன்பக்குகளில் தான் உடை வாங்குகிறேன். பொதி செய்யப்பட்ட ஆடையாக இருந்தாலும் கூட அதனை அணிந்து பார்ப்பதற்கு வாய்ப்பளிப்பவர்கள் முஸ்லிம் வர்த்தகர்கள் மட்டும்தான்.

இந்த வெற்றி சில சிங்கள வர்த்தகர்களின் பொறாமைக்கும் குரோதத்துக்கும் காரணமாக அமைந்திருக்க முடியும். இதனை வெல்வதற்கு சிங்கள வர்த்தகர்கள் செய்ய வேண்டியது வியாபாரத்தைக் கற்று, தமது வியாபாரத்தை நவீனமயப்படுத்துவதன்றி, முஸ்லிம் வர்த்தகர்களின் வியாபாரத்தை அழிக்கும் விதமாக பொய்க் கதைகள் பரப்புவதல்ல. [illegible] குலம், மதம் என்பன முக்கியமல்லவே.

ஆடை வர்த்தகத்தில் முன்னேறிய சிங்கள வர்த்தகர்கள் அருமையாக வேனும் இருக்கிறார்கள். ஹவுஸ் ஒப் பஷன் இதற்கு நல்ல உதாரணம். நீர்ப் பம்பிக்கு ஜினசேன நல்ல உதாரணம். நான் வாங்கிய ஜினசேன நீர்ப் பம்பி 25 வருடங்களுக்கு மேல் பழமையானது. எனக்குப் பின்னரும் அது வாழும் என்ற நம்பிக்கையுமிருக்கிறது. டீ.எஸ்.ஐ. பாதணிகள் ஏனையவரும் வாங்கும் அளவுக்குப் பிரபல்யமானவை. சரசவி புத்தகசாலை வெற்றிகரமான சிங்கள வர்த்தகத்துக்கு சிறந்ததொரு உதாரணம்.

நாட்டின் முன்னேற்றம் வெற்றிகரமான வர்த்தகத்திலேயே தங்கியிருக்கிறது. அதுவன்றி வர்த்தகர்களின் இனம், குலம், மதம் என்பவற்றில் அல்ல. ஆங்கிலேயருக்கு எதிராக நின்ற அநகாரிக தர்மபாலவின் தந்தை சிறந்ததொரு மரத்தளபாட வியாபாரி. ஆனாலும் ஆங்கிலேயர்கள் அவரிடம் தளபாடங்கள் வாங்கியிருக்கிறார்கள்.

முஸ்லிம் கடைகளில் மலட்டுத் தன்மைக்கான மருந்தூட்டி விற்கிறார்கள் என்ற கதை, சிங்களவர்கள் முஸ்லிம் கடைகளில் வாங்குவதைத் தடுப்பதற்கும், சிங்கள இனம் பெருக விடாமல் முஸ்லிம்கள் தடுப்பதாகக் கூறி சிங்கள மக்கள் மத்தியில் முஸ்லிம்களைப் பற்றிய வெறுப்பை விதைப்பதற்குமே பரப்பப்படுகிறது.

அறிவுபூர்வமாகச் சிந்தித்துப் பார்த்தால் இது நீண்டகாலமாக திட்டமிடப்பட்டு பரப்பப்படுகின்ற ஒன்று என்பது புலனாகும். அதனால் இந்தக் கதையில் ஏதும் உண்மை இருந்திருந்தால் அது தொடர்பான பல ஆதாரங்கள் இன்று வரை வெளிவந்திருக்க வேண்டும். மலட்டுத் தன்மையுள்ள சிங்களப் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்க வேண்டும். குறைந்தபட்சம் முஸ்லிம் உணவுக் கடைகளை அண்டி வாழும் தெரு நாய்களாவது மலடாகியிருக்க வேண்டும். இது எதுவுமே நடக்கவில்லை. தனிநபரொருவரையோ சமூகமொன்றையோ குற்றஞ் சாட்டும்போது அதற்குரிய ஆதாரங்களை முன்வைக்க வேண்டும். முஸ்லிம்களுக்கு எதிராக இந்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்துச் செல்லும் எவரும் இதுவரை எந்த ஆதாரங்களையும் முன்வைக்கவில்லை.

உலகில் சித்த சுவாதீனமுள்ள எந்த நாடும், தனது நாட்டில் வாழும் இன்னொரு சமூகத்துக்கு எதிராக வெறுப்பைத் தூண்டும் பிரச்சார நடவடிக்கைகளுக்கு அனுமதிப்பதில்லை, இலங்கையைத் தவிர. சமூக ஊடகங்களில் இந்தக் கருத்துக்களைப் பரப்புபவர்களை, ஆட்சியாளர்களுக்கு இலகுவாக அடையாளம் கண்டுபிடிக்க முடியும். போலிப் பெயர்களில் இவர்கள் சமூக ஊடகங்களில் உலவினாலும் இணையத்தின் வழி இவர்களைக் கண்டுபிடிப்பதற்கான இலகு வழிகள் பல ஏராளமாக உள்ளன. கணினிகளிடம் யாரும் பொய்யாக நடந்து கொள்ள முடியாது என்பதால், இவர்கள் பாவிக்கின்ற கணினியின் வழி இவர்களைக் கண்டுபிடிக்க முடியும். ஆனால் இவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை.

தன்னை விடச் சிறப்பாகச் செயற்படக் கூடியவரின் வியாபாரத்தை வீழ்த்தி விட்டு அதனைத் தான் கைப்பற்றிக் கொள்கின்ற செயற்பாடு இனங்களுக்கு இடையில் மட்டுமன்றி இனங்களுக்குள்ளாலும் நடைபெறுகின்றது. சர்வதேச தேயிலை வர்த்தகத்தில் சிறப்பாகச் செயற்படுகின்ற ஒருவர் என்னிடம் இதுபற்றி முறையிட்டார்.

அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் இவரது தேயிலை வியாபாரம் சிறப்பாக நடந்து வந்துள்ளது. ஐரோப்பிய நாடுகளில் தேயிலை விற்பனையில் சிறந்து விளங்கிய மற்றுமொரு இலங்கை வியாபாரி இவருடைய சந்தையைக் கைப்பற்ற முயற்சித்தார். சந்தையிலிருந்து பின்வாங்குமாறும் அல்லது அவரது தேயிலையில் விஷம் கலந்திருப்பதாக குறித்த நாடுகளில் பிரச்சாரம் செய்யப் போவதாகவும் அவரை எச்சரித்தார். போட்டியாளருடைய இந்த முயற்சி நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால், அடுத்தவருடைய தேயிலை வியாபாரம் மட்டுமன்றி இலங்கைத் தேயிலைக்கான சந்தையே

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் சுமார் 25,000 ஏக்கர்களுக்கும் மேற்பட்ட முஸ்லிம்களின் காணிகள் தமிழர்களால் அபகரிக்கப்பட்டுள்ளன



ஷிப்லி பாரூக்
கிழக்கு மாகாண சபை உறுப்பினர்

• நேர்காணல்:
ஹெட்டி ரம்ஸி

**"தமிழ் பிரதேசங்களில் மிக நீண்ட காலமாக இருந்த காணிகளுக்கான பதிவுகளும் திட்டமிட்ட அடிப்படையில் கச்சேரியில் அழிக்கப்பட்டுள்ளது. சுனாமிக்கு பிற்பட்ட காலத்தில் முஸ்லிம்களுக்குரிய தனியார் காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு அவற்றில் பெரிய வீட்டுத் திட்டங்கள் அமைக்கப்பட்டு தமிழர்கள் குடியேற்றப் பட்டார்கள். நிர்வாக ரீதியாக இப்படியான விடயங்களை செய்தவர்கள் அதற்கு மாற்றீடாக முஸ்லிம்களின் காணிப் பரம்பலுக்கு ஏற்ற அளவில் மாற்றுக் காணி களை அரச காணியிலிருந்து வழங்கியிருக்கலாம். அதை நிர்வாகம் செய்யவில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பும் நிர்வாகத்தில் உள்ளவர்களுக்கு இவ்விடயம் குறித்து அழுத்தம் கொடுக்கவில்லை."**

• **வடகிழக்கு இணைக்கப்பட வேண்டும் என ஒரு சாராரும். அது இணைக்கப்படக் கூடா தென மற்றொரு சாராரும் தெரிவிக்கின்ற னர். இது குறித்த உங்களது நிலைப்பாடு என்ன?**

வடகிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் எனக்கு 100 வீதம் உடன்பாடில்லை. யுத்தம் நிலவிய காலப்பகுதியிலும் செயற்பாட்டில் இருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் எந்தவொரு கட்சியோ இயக்கமோ முஸ்லிம்கள் சார்ந்த விடயங்களில் அக்கறை செலுத்தவில்லை. முஸ்லிம்களுக்கு அநீதி இழைக்கப்பட்டபோதும் கூட அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இந் நிலையில், வடகிழக்கு இணைப்புக்கு மக்கள் எந்தவொரு கட்டத்திலும் ஆதரவு தெரிவிக்க மாட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும்.

நிர்வாக ரீதியில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களே உயர் பதவிகளில் உள்ளார்கள். அங்கு முஸ்லிம்களுக்கு எதிராக நிறையவே அநீதிகள் இடம்பெறுகின்றன. யுத்த காலத்தில் அவர்களுக்கான நஷ்டஈடுகள் உரிய முறையில் வழங்கப் படவில்லை. முஸ்லிம்கள் மீள்குடியேறியபோது அவர்களுடைய சொந்த காணிகளுக்கான அடிப் படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வில்லை.

அன்று LDO, RENUAL FORMID என்பதாக காணி உரிமைகளை புதிதுபடுத்திக்கொள்ளும் முறை இருந்தது. ஒவ்வொரு வருடமும் இவற்றை புதிது படுத்திக் கொண்டு சொந்த இடங்களில் இருக்க வேண்டும். யுத்தம் உக்கிரமடைந்தபோது 1990 களில் மக்கள் அங்கிருந்து வெளியேறினார்கள்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களி லேயே பிரதேச செயலகங்கள் அமைந்திருந்தன. அந்த இடங்களுக்கு சென்று இப்போமிட்களை புதிதுபடுத்தி வருவது சாத்தியமில்லை என்பதால் மக்கள் அங்கு செல்லவில்லை. இதன் காரணமாக போருக்கு பிந்திய சூழலில் கிட்டத்தட்ட 3000 இற்கும் மேற்பட்ட முஸ்லிம் குடும்பங்களுக்கு பூர்வீக இடங்களுக்குச் செல்ல முடியாத தடை ஏற்பட்டது. போமிட்கள் புதிதுபடுத்தப்பட வில்லை, அதனால் உங்களுக்கான காணி இங்கு இல்லை எனக் கூறி அம்மக்களை வெளியேற்றி னார்கள். அசலான காணியுறுதிகள் கொண்டு செல்லப்பட்டும் அதற்கான ஆவணங்கள் குறிப் பிட்ட பிரதேச செயலகங்களில் அழிக்கப்பட்டி ருந்தன.

தமிழ் பிரதேசங்களில் மிக நீண்ட காலமாக இருந்த காணிகளுக்கான பதிவுகளும் திட்டமிட்ட அடிப்படையில் கச்சேரியில் அழிக்கப்பட்டுள் ளது. சுனாமிக்கு பிற்பட்ட காலத்தில் முஸ்லிம் களுக்குரிய தனியார் காணிகள் அடையாளப் படுத்தப்பட்டு அவற்றில் பெரிய வீட்டுத் திட்டங் கள் அமைக்கப்பட்டு தமிழர்கள் குடியேற்றப் பட்டார்கள். நிர்வாக ரீதியாக இப்படியான விட யங்களை செய்தவர்கள் அதற்கு மாற்றீடாக முஸ் லிம்களின் காணிப் பரம்பலுக்கு ஏற்ற அளவில் மாற்றுக் காணிகளை அரச காணியிலிருந்து வழங்கியிருக்கலாம். அதை நிர்வாகம் செய்ய வில்லை. தமிழ் தேசியக் கூட்டமைப்பும் நிர்வா கத்தில் உள்ளவர்களுக்கு இவ்விடயம் குறித்து அழுத்தம் கொடுக்கவில்லை.

மீள்குடியேற்றத்தின் போது ஒருவனது உரி மைகள் மறுக்கப்படுகையில் அந்த விடயங்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளது கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டபோது அதை அவர்கள் உதாசீனப்படுத்துவார்கள் அல் லது அவர்களுக்கு சார்பானவர்கள் நிர்வாகத்தில் இருந்தும் இவ்விடயத்தை அறியாமல் இருந்தால் 'இவர்கள் குடியேறுகிறார்கள். அவர்களை வெளி யேற்ற நடவடிக்கை எடுங்கள்' என்கின்ற விட யங்களையே செய்துள்ளார்கள்.

இப்படியான நீண்ட வரலாறு உள்ளது. முஸ் லிம்கள் கஷ்டப்பட்டபோது தமிழ் மக்கள் அதற்கு சரியான ஆதரவை வழங்கவில்லை என் கின்ற மனக்குறை முஸ்லிம்களிடம் உள்ளது. வடகிழக்கு இணைக்கப்பட்டு முஸ்லிம் முதல மைச்சர் நியமிக்கப்படுவார் என்பது ஒரு கேலிக் கூத்து. இது யானைப் பசிக்கு சோளப் பொறி இடுவதற்கு சமன். முஸ்லிம்களுக்கு முதலமைச் சர் கொடுத்தால் அவர்களது தீர்வு முடிந்துவிடுமா?

தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களை பற்றி எவ்வாறு பேசுகிறதோ அதற்கு சமாந்தரமாக முஸ்லிம்களுக்குரிய அடிப்படையான விடயங்கள் பற்றியும் பேசப்பட வேண்டும். அதன் பிறகே வடகிழக்கு இணைப்பு குறித்த முஸ்லிம்களின் அபிப்பிராயங்கள் பெறப்பட வேண்டுமே தவிர இணைந்த வடகிழக்கில் நாம் உங்களுக்கு முத லமைச்சு பதவி தருகிறோம் எனக் கூறுவது சிறு பிள்ளைத்தனமான விடயம்.

ஏனெனில், கிழக்கில் தற்பொழுது 38 வீதமான முஸ்லிம்கள் உள்ளார்கள். வடகிழக்கு இணைக் கப்படுமாக இருந்தால் ஒரு இரவில் முஸ்லிம்கள் 17 வீதமாக மாறுவார்கள். வடகிழக்கு இணைக் கப்பட்டு உருவாக்கப்படுகின்ற மாகாண சபை யில் முதற் தடவையாக முஸ்லிம்களுக்கு விட்டுக் கொடுக்கப்பட்டாலும் இரண்டாவது முறை அதிக மாக தமிழ் பிரதிநிதிகளே வருவார்கள். எனவே வடகிழக்கு இணைந்ததற்கு பின்னர் அங்கு முஸ் லிம்களுக்கான விடயங்கள் எந்தளவுக்கு கவ னத்திற் கொள்ளப்படும் என்பது கேள்விக் குறி. பாரபட்சமே காட்டப்படும் என்பதற்கு கடந்த கால அனுபவங் கள் எங்களுக்கு சான்று பகர்கின் றன. இதனா லேயே நாம் வட கிழக்கு இணைப் புக்கு ஆதரவு தெரி விப்பதில்லை.

• **வடகிழக்கு இணைப்பு என்கின்ற விடயம் எதிர்வரும் காலங்களில் சாத்தியப்படுவதற் கான வாய்ப்புகள் உள்ளதா?**

எதிர்காலத்தில் வடகிழக்கு இணைக்கப்படு வதாக இருந்தால் மூன்றில் இரண்டு பெரும் பான்மையுடன் பொதுஜன வாக்கெடுப்பு நடை பெற வேண்டும். 78 வீதமாக உள்ள சிங்கள மக் கள் அதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டார் கள். இதில் மிதவாதப்போக்குடையவர்கள் 15 வீதம் இருந்தாலும் 60 வீதத்திற்கும் அதிகமான சிங்கள மக்கள் அதற்கு எதிர்ப்பாகவே இருப் பார்கள். வடகிழக்கு இணைப்புக்கு எதிரான வேலைத் திட்டங்கள் சிங்கள தரப்புக்குள்ளால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வடகிழக்கை இணைத்து தமிழீழத்தை கொடுக்கப் போகிறார் கள் என்கின்ற பிரசாரங்களை கோத்தாபய ராஜ பக்ஷ முன்னெடுத்து வருகின்றார்.

அதே போன்று கிழக்கிலுள்ள முஸ்லிம்களுள் 90 வீதமானவர்கள் அதற்கு ஆதரவு தெரிவிக்க மாட்டார்கள். மறுபுறத்தில் தமிழர்களிலும் கிட் டத்தட்ட 50 வீதமானவர்கள் அதற்கு ஆதரவு வழங்க மாட்டார்கள். எனவே மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெறுவது என்பது சாத்திய மில்லை. அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இந்த விடயம் தெரியும். இப்பின்னணியில் இவர்கள் அரசியல் ரீதியான காய்நகர்த்தல்களையே செய்கின்றார்கள். இது வொரு அரசியல் கோஷமே தவிர மக்கள் சார்ந்த கோஷமல்ல.

• **தமிழ் பிரதேசங்களில் பரந்து வாழ்ந்த முஸ் லிம்கள் 1990களில் அப்பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். முஸ்லிம்களின் பெருமளவிலான காணிகள் இன்று தமிழர் களின் கையிருப்பில் இருப்பதாகச் சொல்லப் படுகின்றது. இது குறித்து..**

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் 39 கிராமங்களிலிருந்து முஸ்லிம்கள் வெளி யேற்றப்பட்டார்கள். அவர்கள் வாழ்ந்த பிரதேசங் களின் அடையாளங்கள் அத்தனையும் இன்று அழிக்கப்பட்டுள்ளன. எந்தவிதமான தடையங் களும் இல்லாத அளவுக்கு அந்நிலங்கள் பயன் படுத்தப்பட்டுள்ளன. போருக்கு பின்னர் முஸ் லிம்கள் அவர்களது பூர்வீகத்திற்கு திரும்பிய போது அங்குள்ள நிர்வாகம் அவர்களுக்கு மிகப் பெரும் தடங்கலாக இருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் அப்பகுதி நிர்வாகத்திற்கும் பலமானதொரு பிணைப்பிருந்தது.

எனவே மக்கள் அங்கு குடியேற முற்பட்ட போது 'இது அரச காணி, அத்துமீறிக் குடியேறு கிறீர்கள்' என அங்குள்ள நிர்வாகம் மக்களை விரட்டும் பணியைச் செய்தது. அப்பாவிச் சமூ கமே அங்கிருந்து துரத்தப்பட்டது. அம்மக்கள் ஓரிரு தடவைகள் சொந்த இடங்களுக்கு சென்று பார்ப்பார்கள். அடிக்கடி துரத்தப்படுகின்ற போது ஏதாவதொரு இடத்தில் வாழ்ந்து விட்டுச் செல் வோம் என பழைய இடத்திற்கே திரும்பி விடு வார்கள். தமிழ் மக்களிடம் உள்ள முஸ்லிம்களது காணிகளை மீட்டுத் தர வேண்டும் என போராடும் முஸ்லிம் தலைவர்களும் அங்கு இல்லை. சுயநல அரசியல் செய்பவர்களே இங்குள்ளனர்.

• **சுமார் எத்தனை ஏக்கர் காணிகள் இன்னும் தமிழ் மக்களிடம் இருந்து விடுவிக்கப்பட வேண்டியுள்ளது?**

முஸ்லிம்கள் பூர்வீகமாக இருந்த காணிகளும் அவர்கள் நெற்பயிர்ச் செய்து வந்த காணிகளும் உள்ளடங்கலாக மட்டக்களப்பு மாவட்டத்தில் மாத்திரம் இதுவரையில் 25,000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகள் திட்டமிடப்பட்ட அடிப் படையில் அபகரிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒரு பிரதேசத்தில் மாத்திரம் 4000 ஏக்கர் காணிகளை அபகரித்துள்ளனர். இக்காணி களை அபகரித்து தமிழ் மக்களுக்கு வழங்கி யுள்ளார்கள். அவை முஸ்லிம்களது காணிகள் என்பதற்கான உறுதிகளும், ஆவணங்களும் உள் ளன. 1990 - 2009 வரையிலான காலத்திலேயே இக்காணி அபகரிப்பு இடம்பெற்றுள்ளது.

இதே வேளையை அன்று புலிகள் செய்தார் கள். அதாவது, முஸ்லிம்களது தனியார் காணி களை மாவீரர்களுக்கு பிரித்துக் கொடுத்தார்கள். இவ்வகையில் அபகரிக்கப்பட்ட பெருமளவு காணிகளில் உயரிய பட்ச பிரயோசனம் பெறப் பட்டு பாவனைக்கு உகந்ததல்லாத முறையில் தரிசு நிலமாகவும் மாற்றப்பட்டுள்ளது.

• **கிழக்கில் தமிழ் முஸ்லிம் உறவு எவ்வாறான நிலையிலுள்ளது?**

தமிழ் மக்களுடன் சேர்ந்து வாழ வேண்டும் என்ற எண்ணம் முஸ்லிம்களிடம் அதிகமாக காணப்படுகின்றது. முஸ்லிம்களுக்குரிய அடிப் படையான விடயங்களை நிர்வாகிகளும் ஒரு சில அரசியல்வாதிகளும் தடுக்கின்றபோது அதனை முஸ்லிம்கள் இன ரீதியாகப் பார்க்கின்றார்கள். உதாரணமாக, ஒரு ஏக்கர் காணியில் அரை ஏக்க ரில் ஒரு தமிழருக்கு குடியிருப்பதற்குரிய சகல வசதிகளும் ஏற்படுத்திக் கொடுப்பட்டுள்ளது. எஞ்சிய அரை ஏக்கர் அரச காணியென்று பிரதேச செயலாளர் கூறும்போது, இவர் முஸ்லிம் என் கின்ற காரணத்திற்காகவா அது தடுக்கப்படுகின் றது என்ற சிந்தனை முஸ்லிம்களிடம் தோன்று கிறது. மட்டக்களப்பு மாவட்டத்தின் நிர்வாகத் தில் கூடுதலாக தமிழ் மக்களே உள்ளனர். அரச பணிகளில் முஸ்லிம்களுக்கு பாரபட்சம் காட்டப் படுகிறது.

• **கிழக்கு மாகாணம் தற்பொழுது ஆளுனரின் கட்டுப்பாட்டில் உள்ளது. தேர்தல் முறைப் படி புதிய முதலமைச்சர் ஒருவர் தெரிவாகும் வரையில் கிழக்கின் நிர்வாகம்**

(பக்.11)




அபூ ஷாமில்

## பிக்குவின் சீப்பு

புதிய அரசியலமைப்பு ஒன்றுக்காக நாடு தயாராகி வருகிறது. ஜனநாயக நாட்டில் மக்களே அதிகாரம் மிக்கவர்கள். அவர்கள் தங்களது பிரதிநிதிகளாக தேர்தல் மூலம் சிலரைத் தேர்ந்தெடுத்து பாராளுமன்றத்துக்கு அனுப்புகிறார்கள். இந்த மக்கள் பிரதிநிதிகள் நாட்டை எப்படி நிர்வகிக்க வேண்டும் என்பதனை மக்கள் அனைவரும் இணைந்து உருவாக்கிய யாப்பின் மூலம் எடுத்துரைக்கிறார்கள். இந்த யாப்பின்படி, தாங்கள் நியமித்த பிரதிநிதிகள் செயற்படுகின்றார்களா என்பதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு மக்களுக்குரியது.

வரையப்படவுள்ள இலங்கையின் அரசியல் யாப்பு தான் மக்களிடம் இருந்து கருத்துத் திரட்டப்பட்டு முன் வைக்கப்படுகின்ற முதலாவது யாப்பு என்று சொல்லப் படுகின்றது. இந்த யாப்பின் நகல் வரைவு தயாரிப்பதற்கு முன்னர் நாட்டு மக்களதும் சிவில் அமைப்புக்களதும் கருத்துக்கள் கோரப்பட்டிருந்தன. இவற்றை வைத்து வரையப்பட்ட இடைக்கால அறிக்கை, மீண்டும் மக்கள் கருத்தறிவதற்காக முன்வைக்கப்பட்டுள்ளது.

முன்னைய இரண்டு யாப்புக்களிலும் முஸ்லிம் களுக்குப் போதுமான காப்பீடுகள் இல்லை என்பதை நடைமுறையில் அனுபவித்துக் கொண்டிருக்கும் பொழுதுதான் புதிய யாப்பு வரையப்பட்டுக் கொண்டிருக்கிறது. முஸ்லிம் சமூகம் உன்னிப்பாகக் கவனிக்கின்ற விடயம் என்ற வகையில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா புதிய யாப்பு விடயத்தில் அக்கறை எடுத்துச் செயற்படத் தொடங்கியிருக்கிறது.

தலையை மழித்த பிக்குவுக்கும் தலைசீவும் சீப்புக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்பது போல ஜம்மியதுல் உலமாவுக்கும் நாட்டின் அரசியல் யாப்புக்கும் என்ன சம்பந்தம் என்று பலரும் கேட்கிறார்கள். ஜம்இய்யதுல் உலமாவுக்கு ஒரு யாப்பு இருக்கிறதா, அப்படியானால் அது எங்கே இருக்கிறது, யாரெல்லாம் இதைப் பார்த்திருக் கிறார்கள், இலங்கை முஸ்லிம் சனத்தொகையில் 0.25 வீதமேயுள்ள அதன் அங்கத்தவர்கள் அனைவருக்கு மாவது யாப்பில் அடங்கியுள்ள விடயங்கள் தெரியுமா என ஏகப்பட்ட கேள்விகள் யாப்பு என்று வரும்போது ஜம்இய்யதுல் உலமாவை நோக்கி எழுப்பப்படுகின்றன.

புத்திஜீவிகள், கல்விமான்கள், உலமாக்கள் என்று பல தரப்பினரையும் அழைத்து இலங்கையின் அரசியல் யாப்பை ஆராயப் போவதாக ஜம்இய்யதுல் உலமாவின் தலைவர் தெரிவித்திருக்கிறார். ஜம்இய்யதுல் உலமா இலங்கை முஸ்லிம் சமூகத்தின் தலைமை என்றால், அதன் யாப்பு உருவாக்கத்தில் எந்தெந்த முஸ்லிம் அமைப்புக்கள், ஜமாஅத்துக்கள் சம்பந்தப்பட்டிருக்கின் றன, எத்தனை அமைப்புக்கள், ஜமாஅத்துக்களுடன் இதற்கான கன்ஸல்டேஷன் நடந்திருக்கிறது என்று எழுகின்ற கேள்விகளிலும் நியாயம் இல்லாமலில்லை.

ஜனநாயக நாடொன்றின் யாப்பிலே தேர்தல் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும், ஒருவர் தலைவராக இருப்பதற்கான உச்ச காலம் வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும் எனப் பல விடயங்கள் வருகின்றன. இலங்கையின் அரசியல் யாப்பை திருத்துவதற்கு தற்பொழுது கிடைத்துள்ள இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நமது ஜனநாயக விழுமியங்களையும் நாங்கள் சீர்செய்து கொள்ள வேண்டும்.

அரசியல் அமைப்பினை தெரிந்து வைத்திருப்பது நாட்டு மக்கள் அனைவரதும் கடமை. அதற்கு ஏற்றாற் போல அரசியலமைப்பை மக்களுக்கு இலகுவாகக் கிடைக்கச் செய்கின்ற வழிகளை திறந்து வைப்பது அரசாங்கத்தின் கடமை. இதனை நாட்டு மக்களுக்கு ஒரு பாடமாகக் கற்பிப்பதற்கான ஏற்பாடுகள் கூட அரச ாங்கத்தினால் எடுக்கப்படுகிறது. இதனுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது முஸ்லிம் சமூகத்தின் தலைமை என்று சொல்லப்படுகின்ற ஜம்இய்யதுல் உலமாவின் யாப்பு முஸ்லிம் சமூகத்துக்கு கிடைப்பதற்கான வழி என்ன, குறைந்த பட்சம் உலமா சபைக்கான அங்கத்த வர்களை உற்பத்தி செய்கின்ற மத்ரஸாக்களிலாவது இது கற்றுக் கொடுக்கப்படுகின்றதா, இங்கிருந்து உலமாவாக தகுதி பெற்று உலமா சபையில் அங்கத்துவம் பெறுப வர்கள் அதன் யாப்பை அறிந்து தானா அங்கத்தவர்கள் ஆகிறார்கள், நாடு முழுவதிலுமுள்ள 145 கிளைகளில் எத்தனை கிளைகளில் ஜம்இய்யதுல் உலமாவின் யாப்பை பார்வையிட முடியும் என விரியும் கேள்வி களுக்கு பதிலளிப்பதற்கான சந்தர்ப்பமாக இலங்கையின் அரசியல் யாப்பு விடயத்தில் அக்கறை எடுத்துச் செயற்படும் இந்தத் தருணத்தை ஜம்இய்யதுல் உலமா பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இலங்கையின் அரசியல் யாப்பினை ஆராய்ந்து முடிந்த கையோடு, இஸ்லாமிய அமைப்புக்களை விட அரசாங்கத்தின் செயற்பாடு நன்றாக இருக்கிறது என்று யாரும் சொல்லிவிடக் கூடாது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அளவுக்கு மீறிய உடற் பருமன் ஆபத்தானது

## உலக சுகாதார அமையம்



தற்போதைய பூகோள நிலவரங்கள் நீடித்தால் 2022 இல் மிதமிஞ்சிய உடற் பருமன் கொண்ட பிள்ளைகளின் எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்கும் என உலக சுகாதார அமையம் எச்சரித்துள்ளது. லண்டனிலுள்ள இம்பீரியல் கல்லூரி மேற்கொண்ட ஆய்வறிக்கையை உலக சுகாதார அமையம் வெளியிட்டு வைத்தபோதே இவ்வெச்சரிக்கையை விடுத்துள்ளது.

உயரமும் நிறையும் கணிக்கப்பட்ட போது 130 மில்லியன் உலக மக்கள் தமது வயதை விட அதிக உடற் பருமன் கொண்டுள்ளனர் என்பது தெளிவானது. இதுபோன்றதோர் ஆய்வு இதுவே முதன் முறையாக இடம்பெற்றுள்ளது. உடற் பருமன் ஒரு பூகோள சுகாதார நெருக்கடியாக மாறி வருவதை இந்த ஆய்வு சுட்டிக் காட்டியுள்ளது.

இதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் கிட்டிய எதிர்காலத்தில் பாரிய சுகாதார நெருக்கடி ஏற்படும் என WHO எச்சரித்துள்ளது. இதேவேளை, 200 மில்லியன் குழந்தைகள் தமது வயதுக்கேற்ற உடற் பருமனோ இடையோ இல்லாதவர்கள் என்றும் இந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

கடந்த நான்கு தசாப்தங்களில் 5 முதல் 19 வயதுப் பிரிவினரில் உடற் பருமன் கொண்டோர் தொகை 10 மடங்காக அதிகரித்துள்ளது. 1975 இல் 11 மில்லியனாக இருந்த அவர்களின் தொகை, 2016 இல் 124 மில்லியனாக அதிகரித்துள்ளது.

# சர்வதேசப் பார்வை

## இஸ்ரேலிய தூதுக் குழு கெய்ரோவில்



இஸ்ரேலிய தூதுக் குழுவொன்று கெய்ரோவுக்கு விஜயம் செய்துள்ளதாக எகிப்தின் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கெய்ரோ சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய இத்தூதுக் குழு ஜனாதிபதி அப்துல் பத்தாஹ் ஸீஸியை சந்தித்து கலந்துரையாடியது.

ஹமாஸ்-பத்தாஹ் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து எகிப்துடன் கலந்துரையாடவே இத்தூதுக் குழு வருகை தந்துள்ளதாக அரசியல் அவதானிகள் நம்புகின்றனர்.

## சவூதி இளவரசர்கள் கடத்தப்பட்டதை உறுதி செய்கிறார் துருக்கி அல் பைஸல்



ஐரோப்பாவில் காணாமல் போன நான்கு சவூதி இளவரசர்கள் தற்போது ரியாதில் இருப்பதாக சவூதி அறேபியாவின் முன்னாள் உளவுத் துறைத் தலைவர், இளவரசர் துருக்கி அல் பைஸல் உறுதிப்படுத்தியுள்ளார். ரஷ்யப் பத்திரிகையொன்றுக்கு பைஸல் வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

காணாமல் போன நான்கு இளவரசர்கள் குறித்து அவரிடம் வினவப்பட்ட போது, ''அவர்களைக் கைதுசெய்வதற்கு இன்டர்போல் பிடியாணை விடுத்தது. இந்த விவகாரங்களை நாம் பகிரங்கப்படுத்த விரும்பவில்லை. இது எமது உள்நாட்டுப் பிரச்சினை. அவர்களை இங்கு சிலர் கொண்டு வந்தனர். தற்போது அவர்கள் அவர்களது குடும்பத்துடன் உள்ளனர்'' என்றார்.

கடந்த ஓகஸ்டில் பிபிசி அறபு சேவை வழங்கிய ஆவண நிகழ்ச்சியொன்றில் மூன்று சவூதி இளவரசர்கள், அதாவது தற்போதைய ஆட்சியாளர்களை கடுமையாக விமர்சித்தவர்கள் காணாமல் போயுள்ளனர் என்று அறிவித்தது. அவர்கள் சவூதி அறேபியாவையும் அதன் ஆட்சியாளர்களையும் எதிர்த்து நின்றவர்கள் எனவும் அறிவித்தது.

தற்போது வெளிவந்துள்ள அறிக்கையின்படி ஐரோப்பாவில் காணாமல் போன இளவரசர்கள் கடத்தி வைக்கப்பட்டு, பின்னர் ரியாதுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். ஆட்சியாளர்களுக்கு எதிரானவர்கள் அல்லது மாற்றுக் கருத்துள்ளவர்களை கடத்திப் பழிவாங்கும் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியே இது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(middleastmonitor)

## ஹமாஸ்-பதாஹ் பேச்சுவார்த்தை கெய்ரோவில்



பலஸ்தீன் காஸாவை பிரதிநிதித்துவம் செய்யும் ஹமாஸ் மற்றும் மேற்குக்கரையை பிரதிநிதித்துவம் செய்யும் பதாஹ் என்பவற்றுக் கிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் எகிப்திய தலைநகர் கெய்ரோவில் கடந்த வாரம் இடம்பெற்றது. பலஸ்தீன் அதிகார சபையின் பிரதமர் ராமி ஹம்தல்லாஹ் காஸாவுக்கு விஜயம் மேற்கொண்டு ஒரு வாரத்தின் பின்னர் இப்பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்துள்ளன.

காஸா, மேற்குக்கரை என்பவற்றை உள்ளடக்கிய ஒரு தேசிய நல்லிணக்க அரசாங்கத்தை உருவாக்குவது குறித்தே இப்பேச்சுவார்த்தை நடைபெற்றது. 2011 இல் இடம்பெற்ற கெய்ரோ ஒப்பந்தத்தை இரு அரசியல் கட்சிகளுக்கிடையிலும் அமுல்படுத்தி, பத்தாண்டுகளாக நீடிக்கும் அரசியல் முரண்பாட்டை முடிவுக்குக் கொண்டு வருவதே இதன் உடனடி நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஹமாஸ் அரசியல் பிரிவின் தூதுக் குழுவுக்கு ஸாலிஹ் அல் அரூனியும் பதாஹ் மத்திய குழுவின் உறுப்பினர் அஸாம் அல் அஹ்மதும் தலைமை வகித்தனர்.

ஜோர்தானினூடாக கெய்ரோ வரும் ஒரு பேச்சுவார்த்தைக் குழுவை இஸ்ரேல் இடைநிறுத்தி வைத்துள்ளதாக மேற்குக் கரையைச் சேர்ந்த ஹமாஸ் உறுப்பினர் ஹஸன் யூசுப் தெரிவித்தார். ஹமாஸ் தூதுக் குழுவின் கலீல் அல் ஹயா, ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனிலுள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய ஒரு தேசய நல்லிணக்க அரசாங்கத்தை உருவாக்கருவதோடு, பலஸ்தீனர்களுக்கிடையிலான பிளவை முடிவுக்குக் கொண்டு வர இக்கலந்துரையாடல் உதவியுள்ளது என்று தெரிவித்தார்.

## யெமனில் கிளர்ச்சிக் குழுக்களுக்கிடையில் பிளவு



யெமனில் அரசாங்கத்திற்கு எதிராகப் போராடி வரும் கிளர்ச்சியாளர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள பதட்டமும் கருத்து வேற்றுமையும் இரண்டரை ஆண்டு கால மோதலின் போக்கை மாற்றியமைக்கலாம் என சர்வதேச நெருக்கடிக் குழு தெரிவிக்கின்றது. ஈரான் ஆதரவு ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கும் யெமனின் முன்னாள் ஜனாதிபதி அலி அப்துல்லாஹ் ஸாலிஹின் விசுவாசப் படைக்கும் இடையில் ஏற்பட்டுள்ள பிளவு சவூதி அறேபியாவுக்குச் சாதகமான சூழலை உருவாக்கும் என்று நெருக்கடிக் குழு மேலும் தெரிவித்துள்ளது.

2015 மார்ச் மாதத்திலிருந்து இவ்விரு அணியினரும் ஒன்றிணைந்து சவூதி தலைமையிலான இராணுவத் தாக்குதல்களை எதிர்கொண்டது. தற்போதைய அரசியல் பதட்டம் ஓகஸ்ட் இறுதியிலிருந்து ஆரம்பித்தது. சன்ஆவில் நிலை கொண்டுள்ள அணிகளுக்கிடையில் ஏற்பட்ட கருத்து வேற்றுமை மோதலாக மாறக் கூடும் என்று பிரபல அரசியல் ஆய்வாளர் ஜமால் ஜாஸிம் தெரிவிக்கின்றார்.

வெளிநாட்டு உறவுகள் குறித்த ஐரோப்பிய சபையின் ஆய்வாளரான அவர், தற்போதைய நெருக்கடி சவூதி தலைமையிலான கூட்டணிக்கு சாதகமாக இருப்பினும் சமாதான செயற்பாட்டிற்கான நம்பிக்கை குறைவாகவே உள்ளதென்று அவர் தெரிவித்தார்.

யெமன் யுத்தத்தில் இதுவரை 10,000 மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 40,000 இற்கும் அதிகமானோர் காயப்பட்டுள்ளனர் என்று ஐ.நா. கூறுகின்றது. இதேவேளை, தாக்குதல் இடம்பெறும் பிராந்தியங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதோடு, பட்டினியால் இறக்கும் குழந்தைகளின் தொகையும் அதிகரித்துள்ளது.

## கடந்த மூன்று மாதங்களில் 8 இஸ்ரேலியப் படையினர் தற்கொலை



இஸ்ரேலின் ஹிப்ரோ செய்திப் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில் தற்கொலை செய்துகொள்ளும் இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. கடந்த மூன்று மாதங்களில் 8 இராணுவத்தினர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இறுதியாக ஹட்சூ இராணுவத் தளத்தில் பணியாற்றி வந்த பெண் ஒருவர் தனக்குத் தானே வேட்டுக்களைத் தீர்த்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இஸ்ரேலிய பாதுகாப்புப் பேச்சாளர் இது குறித்து கடந்த மூன்ற ஆண்டுகளாக இஸ்ரேலிய இராணுவத்தினர் தற்கொலை செய்துகொள்ளும் போக்கு அதிகரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். 2016 ஆம் ஆண்டில் 15 இஸ்ரேலிய இராணுவத்தினர் தற்கொலை செய்து கொண்டள்ளனர் என த டைம்ஸ் ஒப் இஸ்ரேல் தெரிவிக்கின்றது.

## ஸ்பெய்னின் கெட்டலோனியா மக்கள் பிரிவினைக்கு ஆதரவு



ஸ்பெய்னின் கெட்டலோனியா பகுதியில் இடம்பெற்ற தனிநாட்டுக் கோரிக்கை தொடர்பான மக்கள் வாக்கெடுப்பு பிரிவினைக்குச் சாதகமாக நிறைவடைந்துள்ளது. கெட்டலோனியா ஒரு சுதந்திர நாடாக மாற வேண்டும் என மக்கள் வாக்களித்துள்ளனர்.

கெட்டலோனியா தலைவர்கள் மெட்ரிட் அரசாங்கத்திடமிருந்து பிரிந்து போவதை தொடர்ந்தும் ஆதரித்து வருகின்றனர். கெட்டலோனியா தலைவர் எனக் கருதப்படும் பீக்ட மொன்ட் கெட்டலோனியாவை சுதந்திரக் குடியரசாக பிரகடனம் செய்யும் பொறுப்பை தான் ஏற்றுள்ளதாகவும் எனினும், அப்பிரகடனத்தைத் தாமதப்படுத்துவதாகவும் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் சுதந்திரப் பிரகடனத்தை வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிந்தன. எனினும், மெட்ரிட் அரசாங்கத்திற்கும் கெட்டலோனியாவுக்கும் இடையில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற மத்திய அரசாங்கத்தின் வற்புறுத்தலால் சுதந்திரப் பிரகடனம் பிற்போடப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்பெய்னின் பெட்டலோனியா மாநிலம் தனிநாடாகப் பிரிந்து போவதற்கு முனைகின்றது. மெட்ரிடை தலைநகராகக் கொண்ட மத்திய அரசாங்கம் அதனை எதிர்த்து நிற்கின்றது.

## பக்தாதுடன் நிபந்தனையுடனான பேச்சுவார்த்தையை குர்திஷ் தலைவர் நிராகரிக்கிறார்



பக்தாதிலுள்ள மத்திய அரசாங்கத்தோடு திறந்த பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு தான் தயார். ஆனால், முன்னிபந்தனைகள் எதனையும் விதிக்கக் கூடாது என குர்திஷ்தான் பிராந்திய அரசாங்கத் தலைவர் மசூத் பர்ஸானி தெரிவித்துள்ளார்.

ஈராக்கிற்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக் குழு பர்ஸானியை சந்தித்தபோதே அவர் இக்கருத்தை வெளியிட்டார். சமீபத்தில் குர்திஷ்தானில் தனிநாட்டு கோரிக்கை தொடர்பான மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு இடம்பெற்றது. ஈராக்கின் மத்திய அரசாங்கம் உள்ளிட்டு ஈரான், துருக்கி, சிரியா ஆகிய நாடுகள் இவ்வாக்கெடுப்பை சட்டவிரோதமானது என்றும் ஏற்க முடியாதது என்றும் ஆட்சேபித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்தக் கறை படிந்த இந்துத்துவா

• றஊப் ஸெய்ன்



கடந்த ஐ.நா.வின் பொதுச் சபைக் கூட்டத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், பாகிஸ்தானை Terroristan என வர்ணித்திருந்தார். இந்திய-பாகிஸ்தான் முறுகல் இந்தியா சுதந்திரமடைந்ததிலிருந்து நீடிக்கின்றது. காஷ்மீரே இதன் எரிதணலாக இருந்து வருகின்றது.

இந்தியா மிகப் பெரிய ஜனநாயகம் என்று கூறி வருகின்றபோதும், எதிர் நிலையிலுள்ள பாகிஸ்தானை பயங்கரவாத நாடு என்று குற்றம்சாட்டி வருகின்றபோதும், இந்தியாவின் இன்றைய நடப்பு விவகாரங்கள் நேர்மையான ஒவ்வொரு மனிதனையும் திகைக்க வைக்கின்றது. மதச்சார்பற்ற இந்தியாவுக்கே அச்சுறுத்தல் விடுக்கும் நடவடிக்கைகள் ஒவ்வொன்றிலும் பாரதீய ஜனதா கட்சி ஈடுபட்டு வருகின்றது.

காங்கிரஸ் கட்சி அதிகாரத்தில் இருந்த போதே 400 வருடம் பழமை வாய்ந்த பாபரி மஸ்ஜித் உடைக்கப்பட்டது. குறிப்பிட்ட சில மணித்தியாலங்களில் அதனைத் தரைமட்டமாக்குவதற்கான பயிற்சி கரசேவகர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. காங்கிரஸ் ஆட்சியின்போது சென்னையிலிருந்து டில்லி வரை முஸ்லிம் இளைஞர்கள் காவல் துறையினரால் திட்டமிட்டு இலக்கு வைக்கப்பட்டனர். என்கவுண்டர் என்ற பெயரில் பலர் கொல்லப்பட்டனர். அப்போது ஒரு சில மாநிலங்களைத் தவிர்த்து இந்தியாவின் அநேக மாநிலங்களில் பிஜேபி எதிர்க்கட்சியாகவே இருந்தது.

எதிர்க்கட்சியாக இருந்த போதே மதப் பிரச்சாரத்தை வலுப்படுத்தி சிறுபான்மை முஸ்லிம்களையும் கிறிஸ்தவர்களையும் பா.ஜ.க.வினால் அடக்கி ஒடுக்க முடியுமென்றால், ஆளுங் கட்சியாக இருக்கின்ற இன்றைய நாட்களில் அதன் கோரத் தாண்டவம் குறித்து சொல்ல வேண்டியதில்லை.

பா.ஜ.க. அதிகாரத்திலுள்ள பல்வேறு மாநிலங்களில் இந்திய நடுவன் அரசுக்குப் புறம்பாக RSS காரர்கள் ஆயுதத் தொழிற்சாலைகளை நடத்தி வருகின்றனர். இந்திய அரசியல் வட்டாரங்களில் இது ஒரு பகிரங்க ரகசியம்.

சிறுபான்மை மக்களுக்கு எதிராக இந்துத் தீவிரவாதிகளைக் களமிறக்கும் ஆயுத பயிற்சிகள் அங்கு தாராளமாக வழங்கப்படுகின்றன. இனக்கலவரங்களை மூட்டுவதும் சிறுபான்மை கிறிஸ்தவ முஸ்லிம் சமூகங்களை கொன்றொழிப்பதுமான தீவிரவாத நடவடிக்கைகள் அப்பட்டமாக முன்னெடுக்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

ஆனால், இது குறித்து இந்திய ஜனநாயக சக்திகள் எதுவும் எதையும் செய்ய முடியாதளவு மௌனமாக்கப்பட்டுள்ளன. கர்நாடகத்தில் கடந்த செப்டம்பரில் இடம்பெற்ற கௌரி லங்கேஷ் படுகொலை உள்ளிட்டு பல ஜனநாயகக் குரல்கள் ஆயுத முனையில் அமைதியாக்கப்படுகின்றன.

இன்று உத்தர பிரதேசத்தின் முதல்வராக நியமிக்கப்பட்டுள்ள யோகி ஆதித்யநாத், தனது இரத்தக் கறைபடிந்த கரங்களோடு முஸ்லிம் விரோதக் காழ்ப்புணர்வை அள்ளித் தெளிக்கின்றார். உத்தர் பிரதேசத்திலுள்ள தாஜ்மஹாலை இந்திய கலாச்சார சின்னம் அல்ல என அறிவித்துள்ள யோகி, உல்லாசப் பயணிகளின் தரிசனப் பட்டியலிலிருந்து தாஜ்மஹாலை நீக்கியுள்ளார். உலக அதிசயங்களுள் ஒன்றாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் தாஜ்மஹாலின் அற்புதமான உருவாக்கத்தையும் அதன் அழகியல் தாரதம்மியங்களையும் யோகியின் இந்துத்துவ குருடு மறைத்து விட்டது.

உத்தர் பிரதேசத்தில் இன்று இந்துத் தேசியவாத அரசியல்வாதி என்று கருதப்படும் யோகி, 2017 மார்ச் 26 இல் இருந்து அதன் முதல்வராக இருந்து வருகிறார். உத்தர் பிரதேசத்தின் ஞானசாரர் என்று இவரைக் கருதலாம்.

கடந்த 9 மாதங்களாக அவர் வெளியிட்டு வரும் தீப்பொறி பறக்கும் முஸ்லிம் விரோத கருத்துக்கள், உணர்ச்சியூட்டும் உரைகள் உத்தர் பிரதேச முஸ்லிம்களால் அச்சத்தோடு பார்க்கப்படுகின்றது.

ஆதித்யநாத் அடிப்படையில் ஒரு இந்து மதப் பிரச்சாரகர். ஆசிரமத்தில் வளர்ந்து கோவில்களில் பணியாற்றிய யோகி, 2017 இல் உத்தர் பிரதேச மாநில சட்ட சபைத் தேர்தலிலே ஈடுபட்டு அரசியல்வாதியானார். பாரதீய ஜனதா கட்சி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். ஏற்கனவே கொரக்கூர் தொகுதி பாராளுமன்ற உறுப்பினராகவும் அவர் இருந்திருக்கிறார்.

RSS எனப்படும் அதிதீவிர இந்துத்துவ அடிப்படைவாத கும்பலின் அரசியல் பரிமாணமே இன்றைய பா.ஜ.க. இந்துக்களின் வாக்கு வேட்டைக்காக மத அரசியல் பேசும் பா.ஜ.க.வுடன் தன்னை இறுகப் பிணைத்துக் கொண்ட ஆதித்யநாத், முஸ்லிம்களுக்கு எதிரான கடும்போக்கு வாதங்களை இனவாதத்தைப் பச்சையாக உமிழும் பிரச்சாரங்களையும் மேற்கொண்டு வந்தார்.

2005 இல் 1800 கிறிஸ்தவர்களை பலவந்தமாக இந்து மதத்திற்கு மாற்றிய ஆதித்யநாத், இந்த வேலையை தான் நிறுத்தப் போவதில்லை எனவும், உத்தர பிரதேசத்தையும் முழு இந்தியாவையும் ஒரு இந்து நாடாக மாற்றும் வரை தான் ஓயப் போவதில்லை எனவும் தெரிவித்திருந்தார்.

ஜனவரி 2007 இல் முஹர்ரம் மாதத்தில் முஸ்லிம் குழுவொன்றுக்கும் இந்துக் குழுவொன்றுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டது. கொரக்பூரில் நடந்த இச்சம்பவத்தின் விளைவாக சிலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அப்போது மாவட்ட நீதிமன்றம் ஆதித்யநாத் இந்தப் பகுதிக்கு வரக் கூடாது என்று ஆணை பிறப்பித்தது.

ஆனால், நீதிமன்ற ஆணையை மீறி அப்பகுதிக்கு விரைந்த அவர், அங்கிருந்த முஸ்லிம்களின் பள்ளிவாயலொன்றை தீயிட்டுக் கொழுத்தினார். ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. கலவரங்கள் மும்பாய் வரை பரவியது. யோகியை பொலிஸார் கைதுசெய்தனர். பி.ஜே.பி.யின் இளைஞர் படை இந்து யுவ வாஹினி செயற்பாட்டாளர்கள் களத்தில் இறங்கினர். வன்முறைகள் உத்தர் பிரதேசத்தின் பல பகுதிகளுக்கும் பரவியது. அப்போதைய முதல்வர் முலாயம் சிங் யாதோவ் வன்முறையாளர்களுக்கு ஆதரவளித்தார்.

கொரக்பூரிலிருந்த பள்ளிவாயல்கள், முஸ்லிம்களின் வீடுகள், வாகனங்கள் என்பன தீக்கிரையாக்கப்பட்டன. 2011 இல் வெளியான ஓர் ஆவணத் திரைப்படம் உத்தர் பிரதேசத்தில் ஆதித்யநாத் ஆற்றி வரும் வெறுப்புப் பேச்சுக்கள் சமூகங்களுக்கிடையிலான பதட்டத்தையும் அமைதியின்மையையும் உருவாக்குவதாக வெளிப்படுத்தியிருந்தது.

விஷ்வ இந்து பரிஷத் எனப்படும் பா.ஜ.க.வின் மற்றொரு இந்துத்துவ காவி அமைப்பை உத்தர் பிரதேசத்தில் வளர்த்து வருகின்ற ஆதித்யநாத், 2014 ஒகஸ்டில் ஆற்றிய உரையொன்று You Tube இல் பதிவாகியிருக்கின்றது. அவர்கள் ஒரு இந்துப் பெண்ணை திருமணம் செய்தால் எங்கள் இளைஞர்கள் 100 முஸ்லிம் பெண்களைத் திருமணம் செய்வார்கள். அவர்கள் ஒரு இந்துவை கொலை செய்தால் நாம் 100 முஸ்லிம்களைக் கொலை செய்வோம் என்று மேடைப் பேச்சின்போது கர்ச்சித்தார் யோகி.

வல்லரசுக் கனவில் மிதக்கும் இந்தியாவில் இதுபோன்ற எத்தனையோ யோகிகள் சமூக அமைதியைக் குலைக்கும் ஜனநாயக விரோத செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் அத்தனை பேரையும் உள்ளடக்கியது தான் இந்திய ஜனநாயகம். நம்ப முடியாத இந்தியா. நம்ப முடியாத ஜனநாயகம்.

# ஐரோப்பாவின் நோயாளியும் மத்திய கிழக்கின் நோயாளியும்



கலீல் அல் அனானி
(middleast monitor பத்தியாளர்)

1839 இல் முதலாம் சுல்தான் அப்துல் மஜீத் உஸ்மானிப் பேரரசில் சட்ட, நிர்வாக, சமூக சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். அவரது சீர்திருத்தங்கள் 'தன்ஸீமாத்' எனப்பட்டன. பேரரசை நவீனமயமாக்குவதும் ஐரோப்பிய நாடுகளோடு அமைதி வழியைக் கடைப்பிடிப்பதுமே அவரது சீர்திருத்தங்களின் நோக்கமாக இருந்தது.

அவரது தந்தை 2 ஆம் மஹ்மூத் அறிமுகப்படுத்திய சீர்திருத்தங்களின் தொடர்ச்சியே அப்துல் மஜீதின் சீர்திருத்தமாக இருந்தது. அப்துல் மஜீத் தொடர்ந்த சீர்திருத்தங்கள் உஸ்மானிய பேரரசின் கடைசி ஆட்சியாளர் 2ஆம் அப்துல் ஹமீத் வரை நீடித்தது. இறுதியில் 1909 இல் 2 ஆம் அப்துல் ஹமீத் பதவி கவிழ்க்கப்பட்டார்.

உஸ்மானியப் பேரரசின் சுல்தான்களது சீர்திருத்தங்கள் இறுதியில் 600 ஆண்டு கால உஸ்மானியர் ஆட்சிக்கே முடிவு கட்டியது. உஸ்மானியப் பேரரசின் வீழ்ச்சிக்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றபோதும், மிகப் பிரதானமான காரணங்களாக அரசியல் ஆதிக் கத்தையும் சர்வதிகாரத்தையும் நாம் அடையாளப்படுத்தலாம். இராணுவ நிருவாக சட்ட சீர்திருத்தங்கள் கடைசியில் பேரரசின் சரிவுக்கே வித்திட்டது.

இன்றைய நாட்களில் இதே போன்ற ஒரு சூழ்நிலையையே நாம் சவூதி அரேபியாவில் காண்கிறோம். அங்கு பட்டத்துக்குரிய இளவரசர் முஹம்மத் பின் ஸல்மான் தலைமை வகிக் கும் நவீனமயமாக்கல் திட்டம் அப்துல் மஜீதையே நினைவுகூர்கின்றது. சமூக ரீதியான, நிருவாக ரீதியான மற்றும் பொருளாதார ரீதி யான நவீனமயமாக்கத்தில் அங்கு பழைமை வாதங்களும் அதற்கான நிறுவனங்களும் அழிக்கப்படுகின்றன.

பொதுமக்கள் சுதந்திரமாக தங்களது கருத்துக்களை வெளியிடா வண்ணம் அரசியல் அடக்கு முறை அவர்கள் மீது திணிக்கப்படுகின்றது. விஷன் 2030 என்பதோடு, 2016 ஏப்ரலில் இந்த நவீனமயமாக்கம் தொடங்கியது. ஆட்சியிலுள்ளவர்களை நீடிக்கச் செய்வதற்கான முன் முயற்சியே இது.

அதேபோன்று சல்மான் அவரது மகனை பட்டத்துக்குரிய இளவரசராக பிரகடனம் செய்வதற்கான நியாயமாகவம் உள்ளது விஷன் 2030. முன்னாள் பட்டத்துக்குரிய இளவரசர் முஹம்மத் பின் நாயிபை ஓரங்கட்டிவிட்டு மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் மகனைக் கொண்டு வந்ததற்கு முன்வைக்கப்படும் ஒரு நியாயம் அது.

சமய நிறுவனங்களோடு வரலாற்று ரீதியாக உள்ள உறவை உடைத்துக் கொள்ளும் அனைத்து முயற்சிகளையும் இன்று இளவரசர் முஹம்மத் பின் சல்மான் மிக வேகமாக முன்னெடுத்து வருகிறார்.



சவூதி அரசாங்கத்தைக் கட்டியெழுப்புவதில் இந்த சமய நிறுவனங்களுக்கு முக்கிய பங்குண்டு. 18 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் திரஇய்யா அமீரகம் உருவாக்கப்பட்டிதிலிலிருந்து சவூதியின் உருவாக்கம் மற்றும் அதன் சட்டத் தன்மையைப் பாதுகாப்பதில் சமய நிறுவனம் முக்கிய பகுதி யாக இருந்து வருகின்றது.

பெண்கள் வாகனமோட்டுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது. முன்பு சவூதி உலமாக்கள் [illegible] மோட்டுவதை [illegible]

அதேபோன்று அரசியலில் பெண்கள் ஈடுபடுவது சமீபகாலம்வரை தடைசெய்யப்பட்டிருந்தது. மறைந்த மன்னர் அப்துல்லாஹ் உள்ளூராட்சித் தேர்தல்களின் பெண்கள் ஈடுபடலாம் என அறிவித்ததை அடுத்து பெண்கள் அரசியலில் களமிறங்கினர்.

கடந்த காலங்களில் தடைசெய்யப்பட்டிருந்த சில [illegible] மாக்குவதற்கு சட்ட ரீதி [illegible] ரீதியில் சில நியாயங்கள் இருப்பதாக முஹம்மத் பின் சல்மான் அறிவிக்கின்றார். அவற்றுள் சினிமாக் கொட்டகைகளைத் திறத்தல், உல்லாசப் பயணிகளுக்கான பிரதேசங்களை விருத்தி செய்தல், அவற்றில் மதுபானத்தை அனுமதித்தல் என்பன அதில் உள்ளடங்குகின்றன.

உஸ்மானிய சுல்தான்களான 2 ஆம் மஹ்மூத் மற்றும் அல்துல் மஜீத் ஆகியோர் மேற்கத்தேய உலகின் வளமான வாழ்வை தமது சீர்திருத்தங்களினூடாக இலக்கு வைத்தனர். இராணுவத்திலும் பொருளாதாரத்திலும் மேல் நிலையிலுயுள்ள மேற்குலகின் மீது மாத்திரம் இளவரசரின் கவனம் குவியவில்லை. சவூதிக்கு மிக சமீபமாக இருக்கின்ற ஐக்கிய அறபு அமீரகம், அதன் கலாச்சார சமூக ரீதியான மேற்கு மயமாதல் என்பவற்றையும் இளவரசர் பின்பற்ற முயல்கிறார். ஆனால், ஐக்கிய அறபு அமீரகமோ நவீன மயமாக்கத்தின் உதிரியாகவே மாறிவிட்டது. முஹம்மத் பின் சல்மானின் ஆலோசகர்கள் அமெரிக்கர்களும் பிரிட்டிஷ்காரர்களுமே. அவர்களைப் பரிந்துரை செய்வது ஐக்கிய அறபு அமீரகமே.

உஸ்மானியப் பேரரசில் சீர்திருத்தத்திற்கு ஆலோசனை வழங்கிய அதே ஐரோப்பியர்கள்தான் பின்னர் உஸ்மானியப் பேரரசை தமக்குள் பங்குபோட்டுக் கொண்டனர். 1924 இல் அதனை வீழ்த்திய பின் ஐரோப்பிய நோயாளி என்று பெயர் சூட்டினர்.

இதுபோன்றதோர் நிலை மத்திய கிழக்கில் சவூதி அரேபியாவுக்கும் ஏற்படலாம். வற்புறுத்தலின் பெயரில் மேலிருந்து கீழாக மக்கள் மீது சீர்திருத்தங்களை திணிக்கின்ற போது எதிர்பார்ப்பதற்கு நேர்மாற்றமான விளைவுகள் ஏற்படுகின்றன.

(ஒக்டோபர் 03 2017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை குறித்து...

தொகுப்பு: ஹெட்டி ரம்ஸி

## சிறுபான்மை மக்களுடைய அனைத்து அபிலாஷைகளும் உள்வாங்கப்பட வேண்டும்



**நஜா முஹம்மத்,**

பொதுச் செயலாளர் - நல்லாட்சிக்கான தேசிய முன்னணி

2015 ஆம் ஆண்டு மாற்றத்தின் பின்னணியில் அரசியலமைப்பு மாற்றம் என்கின்ற விடயம் முக்கியமானதாகக் காணப்பட்டது. ஆட்சி மாற்றம் மாத்திரமல்லாமல் ஆட்சி முறையிலும் மாற்றங்கள் வர வேண்டும் என்றே கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. புதிய தொரு அரசியலமைப்பின் தேவையை வலியுறுத்தியே நல்லாட்சிக்கான தேசிய முன்னணி பிரச்சாரங்களையும் மேற்கொண்டது.

தற்பொழுது கொண்டுவரப்பட்டுள்ள யாப்பு சுதந்திரத்திற்கு பின்னரான 3 ஆவது குடியரசு யாப்பாகவும், 4 ஆவது அரசியல் யாப்பாகவும் பேசப்படுகிறது. கடந்த 3 யாப்புகளும் மக்கள் பங்குபற்றலுடன் உருவாக்கப்படவில்லை. அதுவே தற்போதைய அரசியலமைப்பின் தோல்வியாக உள்ளது.

தற்போதைய அரசியலமைப்புச் செயன்முறை வரவேற்கத்தக்கதாக உள்ளது. முதலாவது மக்கள் அறியும் குழு நியமிக்கப்பட்டது. இரண்டாவது, பாராளுமன்றத்தில் 6 அம்சங்களுக்கு உப குழுக்கள் அமைக்கப்பட்டன. இதில் சகல கட்சிகளின் பிரதிநிதிகளும் பங்கேற்று, அதனூடாக 6 அறிக்கைகள் சமர்பிக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய அனைத்து கட்சிகளினதும் பிரதிநிதிகளை கொண்ட வழிநடாத்தல் குழு ஒரு இடைக்கால அறிக்கை முன்வைத்துள்ளது.

இவ்வறிக்கையிலுள்ள விடயங்கள் இறுதியான விடயமல்ல. எப்படிப்பட்டதொரு யாப்பு உருவாகப் போகின்றது என்பதற்கான பல முன்மொழிவுகள் இதில் உள்வாங்கப்பட்டுள்ளன. தற்பொழுது இது சிவில் சமூகத்தின் கலந்துரையாடலுக்கு விடப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கான முன்மொழிவாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இதில் பல முன்னேற்றகரமான விடயங்கள் காணப்படுகின்றன. அதே நேரம் சிறுபான்மை மக்களுடைய அனைத்து அபிலாஷைகளையும் உள்வாங்கக் கூடியதாக இதில் மேலதிகமான முன்மொழிவுகள் உள்வாங்கப்பட வேண்டும். எல்லோரதும் கருத்தொருமைப்பாட்டுடன் நல்லதொரு ஆவணமாக இது வடிவமைக்கப்பட வேண்டும். அரசியல் கட்சிகளும், சிவில் சமூகமும், புத்திஜீவிகளும், நாட்டின் மீது பற்றுள்ளவர்களும் இது தொடர்பில் கூடுதல் கரிசனை செலுத்த வேண்டும்.

தேசிய ஒருமைப்பாட்டை கட்டியெழுப்பக்கூடிய ஆவணமாக இதை தயாரித்தெடுப்பது அரசாங்கத்தின் பாரிய பொறுப்பாக உள்ளது. இதனை வெறுமனே ஒரு பக்கச் சார்பாக நின்று விமர்சிக்காமல் அதன் மீது ஒட்டுமொத்தமான பார்வையை செலுத்தி, அதில் என்னென்ன நல்லம்சம் உள்ளதென்பதை ஏற்றுக்கொண்டு இன்னும் சேர்க்கப்பட வேண்டிய விடயங்களை ஆரோக்கியமான ஆலோசனைகளாக முன்வைப்பதே தற்பொழுது புத்திஜீவிகளினதும், அரசியல் கட்சிகளினதும் பொறுப்பாக உள்ளது. இதனை நோக்கி மக்களை விழிப்பூட்டுகின்ற பல்வேறு நடவடிக்கைகளை நல்லாட்சிக்கான தேசிய முன்னணி மேற்கொண்டு வருகிறது.

## வடகிழக்கு இணைப்பு தொடர்பில் அங்கு வாழக் கூடிய மக்களே அதை தீர்மானிக்க வேண்டும்



**அசாத் சாலி,**

தலைவர்- தேசிய ஐக்கிய முன்னணி

இடைக்கால அறிக்கை குறித்து விரிவாக ஆராயப்பட வேண்டியுள்ளது. இடைக்கால அறிக்கையில் வடகிழக்கு இணைப்பு குறித்து சொல்லப்பட்டுள்ளது. வடகிழக்கு இணைப்பு தொடர்பில் முஸ்லிம்களிடம் எதிர்ப்பு உள்ளது. வடகிழக்கு இணைக்கப்பட வேண்டுமாக இருந்தால் அப்பகுதியில் வாழக் கூடிய மக்களே அதை தீர்மானிக்க வேண்டும். மக்களது அபிலாஷைகளை அறியாமல் அரசியல்வாதிகளுக்கு தீர்மானம் எடுக்க முடியாது.

தேர்தல் முறை மாற்றம் தொடர்பிலும் மக்கள் அபிப்பிராயங்கள் பெறப்படாமல் அரசியல் தலைவர்கள் அவரவர்களுடை சுய இலாபத்திற்கு விலை போனார்கள்.

இவ்விடயத்தில் சாதக பாதகங்கள் உள்ளதா என்கின்ற தீர்மானத்தை சிவில் சமூக மட்டத்தில் முன்னெடுத்திருக்க வேண்டும். அதன் பின்னரே அதற்கு ஆதரவு தெரிவிப்பதா? இல்லையா? என்பது தீர்மானிக்கப்பட்டிருக்க வேண்டும். 21 முஸ்லிம் பிரதிநிதிகள் உள்ள பாராளுமன்றத்தில் புதிய தேர்தல் முறைக்கூடாக 21 பேரும் மீளத் தெரிவு செய்யப்படுவார்களா என்கின்ற சந்தேகம் உள்ளது. அந்தந்த பகுதிகளை எப்படிப் பிரிக்க போகிறார்கள் என்பது தெரியாது. முன்னர் சிங்களவர்கள் முஸ்லிம்களுக்கு வாக்களித்தார்கள். இன்றைய நிலைமை அப்படியில்லை.

எல்லை நிர்ணயம் எப்படி நடைபெறப் போகிறது என்பதை நாம் முதலில் பார்க்க வேண்டும். எல்லை நிர்ணயத்திற்குள் எப்படிப் பிரதேசங்கள் பிரிக்கப்படுகின்றன? நாம் முதலில் அமைச்சர் பைஸர் முஸ்தபாவிடம் வர்த்தமானியைப் பெற வேண்டும். அதாவது, கொழும்புக்கு எத்தனை வேட்பாளர்கள் வருவார்கள்? அதுபோன்று ஏனைய பகுதிகளுக்கு எத்தனை பேர் வருவார்கள்? என்பதை பார்க்க வேண்டும். இந்தத் தகவல் பெறப்பட்டால் தான் ஒவ்வொரு பகுதியிலும் எத்தனை சிங்களவர்கள், எத்தனை தமிழர்கள் எத்தனை முஸ்லிம்கள் வருவார்கள் என்பதை பார்க்க முடியும்.

இதனடிப்படையில் ஒரு முடிவுக்கு வர முடியும். வழமையாக ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டால் அது தொடர்பில் பரவலாக கலந்துரையாடப்படும். கட்சி மட்டத்தில் கலந்துரையாடல்கள் இடம்பெறும். ஆனால் தற்பொழுது அப்படியில்லை. யாருக்கும் தெளிவில்லை. பெரும்பான்மை கட்சிகளில் உள்ள முஸ்லிம் பிரதிநிதிகள் சிறுபான்மை கட்சிகளிடம் தேர்தல் முறைக்கு வாக்களிக்குமாறு வற்புறுத்தியுள்ளனர். சிறுபான்மை கட்சிகளுக்கும் வாக்களிக்க வேண்டிய இக்கட்டில் தள்ளப்பட்டார்கள்.

## நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி முறை வேண்டும்



**அமீர் அலி,**

தவிசாளர்-
அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்

வடகிழக்கு இணைப்பை நாம் எதிர்க்கிறோம். ஜனாதிபதித் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படுகின்ற நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி முறை வேண்டும். கரையோர மாவட்டமாக ஒலுவில் பிரகடனப்படுத்தப்பட்டு, 26 ஆவது மாவட்டமாக அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இரண்டாவது சபையாக செனட் ஒன்று வந்தால் இன விகிதாசார அடிப்படையில் அங்கத்துவம் வேண்டும். 14 ஆவது திருத்தச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வலய முறைப்படியில் பொதுத் தேர்தல் நடைபெற வேண்டும்.

## மு.கா.வின் அடிப்படை நிலைப்பாடுகளில் ஒன்று கரையோர மாவட்ட கோரிக்கையாகும்



**நிசாம் காரியப்பர்,**

பொதுச் செயலாளர் -
ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்

இடைக்கால அறிக்கையில் அடிப்படையாக எமது கட்சியின் இரண்டு நிலைப்பாடுகள் சேர்க்கப்பட வேண்டியுள்ளன. ஒன்று, கரையோர மாவட்டம் சம்பந்தமான கோரிக்கை. மற்றையது பாராளுமன்றத் தேர்தல் முறை தொடர்பாக தனியானதொரு அறிக்கை.

அதாவது, தற்போதைய தேர்தல் முறையை வைத்துக் கொண்டு 198 தேர்தல் முறையை உருவாக்க வேண்டும் என்ற விடயத்தை எழுதிக் கொடுத்துள்ளோம். அவ்விரண்டையும் அவர்கள் இணைக்கவில்லை. தவறுதலாக இணைக்கவில்லை எனக் கூறினார்கள். இறுதி அறிக்கை தயாரிக்கப்பட முன்னர் அதையும் இணைத்தே கலந்துரையாடுவோம் என்று பிரதமர் வாக்குறுதியளித்துள்ளார். இதுவே எமது பிரதானமான கோரிக்கை.

இடைக்கால அறிக்கையில் ஒவ்வொருவரினதும் நிலைப்பாடுகளே எழுதப்பட்டுள்ளன. உதாரணமாக வடகிழக்கு தொடர்பாக 3 நிலைப்பாடுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழ் தேசிய கூட்டமைப்பு வடகிழக்கு இணைக்கப்பட வேண்டும் எனக் கூறுகின்றது. ஜாதிக ஹெல உறுமய எந்தவொரு மாகாண சபையும் இணைக்கப்படுவதற்கான தற்போதுள்ள கருத்துக்கள் நீக்கப்பட வேண்டும் எனக் கூறியுள்ளது. தற்போதுள்ள கருத்துப்படி மாகாணங்கள் இணைக்கப்படும் போது சர்வஜன வாக்கெடுப்புடன் இணைக்கப்பட வேண்டும் என்றும் மற்றொரு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கு இணைப்புக்கு ஆதரவாக முஸ்லிம் காங்கிரஸ் கைச்சாத்திட்டுக் கொடுத்துள்ளது என நிறைய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. ரிஷாதும், சம்பிக்கவும் கையொப்பமிட்டார்கள். அதனால் சம்பிக்க வடகிழக்கு இணைப்புக்கு ஆதரவென்றா அர்த்தம்?

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் இடைக்கால அறிக்கையில் தீர்வு காணப்படாத விடயங்களில் அதாவது எல்லோர் மத்தியிலும் ஏற்றுக்கொள்ளப்படாத விடயங்களில் இன்னும் இறுதி முடிவெடுக்கவில்லை. ஒன்று, ஜனாதிபதி முறையை வைத்துக்கொள்வதா? இல்லையா? என்பது தொடர்பில் இன்னும் இறுதி முடிவெடுக்கப்படவில்லை. ஐக்கிய இலங்கையா அல்லது ஒற்றை இலங்கையா என்கின்ற விடயத்தில் இன்னும் முடிவெடுக்கப்படவில்லை. வடகிழக்கு இணைப்பு தொடர்பான இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

## மதத் தலைவர்கள் இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படக் கூடாது என்கின்ற விடயத்தில் குறியாக உள்ளனர்

**எம்.எஸ். உதுமாலெப்பை,**

தேசிய அமைப்பாளர் - தேசிய காங்கிரஸ்

நீண்டகாலம் நிலவிய யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டாலும் இனப்பிரச்சினைக்கு இன்னும் நிரந்தரத் தீர்வு காணப்படவில்லை. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்நாட்டை வரலாற்று ரீதியாக அபிவிருத்தி செய்தார். அதிகாரத்தை பரவலாக்கம் செய்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக் கூடிய நடவடிக்கை எடுத்திருப்பார் என்றால் அவர் கடந்த தேர்தலில் தோல்வியடைந்திருக்க மாட்டார். நல்லாட்சி அரசு அதை ஒரு சிறந்த பாடமாகக் கொண்டு இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை அரசியலமைப்பில் முன்வைக்க வேண்டும்.

இடைக்கால அறிக்கை மகாநாயக்க தேரர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக அறிகிறேன். கடந்த காலத்தில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்பட்ட போது அதை இனவாதத் தலைவர்களே பிரச்சினைப்படுத்தியதை நாம் அறிவோம். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஒரு தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்தார். அப்போது அதை மர்ஹூம் அஷ்ரப் வாசித்துக் கொண்டிருந்தபோது ஐ.தே.க. அதனை பாராளுமன்றத்தில் கிழித்தெறிந்து இதுபோன்று தீர்வுத் திட்டங்களை முன்வைக்கக் கூடாதெனக் கூறினர்.

இடைக்கால அறிக்கையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளது. பெரும்பான்மை மதத் தலைவர்களின் அங்கீகாரத்துடன் தான் இவ்வரசியலமைப்புத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என நினைத்தால் அதை எதிர்பார்க்க முடியாது. இந்நாட்டிலுள்ள எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும். ஆனால் சில இனவாதிகள் நச்சுக் கருத்துக்களை முன்வைக்கிறார்கள்.



இனப்பிரச்சினைக்கான தீர்வை இனவாத முயற்சியாகவே அவர்கள் சோடிக்கிறார்கள். உதாரணமாக சம்பிக்க ரணவக, தமிழ் மக்களின் ஆயுத குழுக்களை அடக்கி விட்டோம். தற்பொழுது முஸ்லிம் மக்கள் மத்தியிலுள்ள ஆயுத குழுக்களை அடக்க பௌத்த மக்கள் முன்வர வேண்டும் எனக் கூறியுள்ளார். வடகிழக்கு மாகாண மக்களின் இனப்பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வு விடயத்தில் அவர் வேறுபட்ட கருத்துக்களை தெரிவித்து வருகின்றார். இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்கப்படக் கூடாது என்கின்ற விடயத்தில் அவர் குறியாக உள்ளார்.

வடகிழக்கு இணைப்பு என்கின்ற விடயம் இடைக்கால அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இ[illegible] திய ஒப்பந்தத்தில் வடகிழக்கு [illegible] இணைக்கப்பட்டது. இந்நடவடிக்கை அங்குள்ள மக்கள் மத்தியில் பகைமை உணர்வை ஏற்படுத்தியது. கிழக்கில் 42 சதவீதமாக வாழ்ந்த முஸ்லிம்களை இணைந்த வடகிழக்கில் 17 வீதமாக குறைத்து முஸ்லிம் அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாமல் வடகிழக்கை ஆட்சி செய்யும் முறை கொண்டு வரப்பட்டது. இன ஒற்றுமை கட்டியெழுப்பப்படவில்லை.

தமிழ் பேரினவாதம் தலைதூக்கியது. இவ்வடுக்கள் இன்னும் முஸ்லிம்களை விட்டும் ஆறவில்லை. இந்நிலையில் புதிதாக வடகிழக்கு இணைக்கப்பட வேண்டும் என அரசியலமைப்பில் முன்வைக்கப்படுகின்ற வாதங்களை நாம் மறுக்கின்றோம்.

வடகிழக்கு இணைப்பு தொடர்பாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் வெவ்வேறு கருத்துக்களை தெரிவித்து வருகின்றது. வடகிழக்கு இணைப்பில் தனியலகு வேண்டும் எனக் கூறுகிறார்கள். பிரதித் தலைவர் ஹரீஸ் முஸ்லிம் காங்கிரஸ் வடகிழக்கு இணைப்புக்கு ஒருபோதும் ஆதரவளிப்பதில்லை எனக் கூறுகிறார். கட்சியின் தலைவர் இது ஹரீஸின் தனிப்பட்ட கருத்து. கட்சியின் கருத்தல்ல எனக் கூறுகிறார்.

வடகிழக்கு மாகாண முஸ்லிம்களின் உணர்வுகளைப் புரியாத தலைவராக இருந்து கொண்டு தமிழ் மக்களின் போராட்டத்திற்கு குறுக்கால் முஸ்லிம் சமூகம் நிற்கக் கூடாதென்று தமிழ் மக்களுக்கு மத்தியில் கிழக்கு பிரிந்திருக்க வேண்டும் என்று கூறி காட்டிக் [illegible] ஒரு முடிவையும் தொலைக்காட்சியில் மற்றுமொரு முடிவையும் தெரிவித்து வருகின்றார்.

வடமாகாண முஸ்லிம்களும் இரு மாகாணங்களும் பிரிந்திருக்க வேண்டும் என்றே கூறுகின்றனர். வட மாகாண முதலமைச்சர் முல்லைத்தீவில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் சம்பந்தமாக நடைபெற்ற கூட்டத்திலிருந்து வெளியேறியுள்ளார். முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்திற்கே தடையாக உள்ள இவர்கள் வடகிழக்கு இணைக்கப்பட வேண்டும் எனக்கூறுவது நியாயமற்ற விடயமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

• அனஸ் அப்பாஸ்

# தேசிய கிரிக்கட் அணியை நோக்கி நகரும் வேகப்பந்து வீச்சாளர் ரஷாட்

சைனுல் ஆப்தீன் - நூருல் ஹுதா தம்பதிகளின் புதல்வர் ரஷாட். இவர் நீர்கொழும்பு- பலஹத் துறையைச் சேர்ந்தவர். ஓர் இளம் வேகப் பந்து வீச்சாளராக முன்னேறிவரும் ரஷாட் ஆப்தீன் குறித்து இங்கு பார்ப்போம்.

பாடசாலைக் காலம் முதல் பிரதேச கிரிக்கட் போட்டிகளில் சிறந்த வேகப்பந்து வீச்சாளராக ரஷாட் மிளிர்ந்து வந்தார். தரம் 9 வரை நீர்/அல்-பலாஹ் மகா வித்தியாலயத்தில் கற்று பின்னர், உயர்தரம் வரை நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியில் கற்றார். பாடசாலை வாழ்க்கை முடிந்ததும் தன்னை தொழில் வாழ்க்கைக்கு பழக்கப்படுத்தினாலும், கிரிக்கட் மீதான இவரது ஆர்வம் குறையவில்லை.

தொடர்ந்தும் கிரிக்கட்டிலும் கரிசனை காட்டினார். இதுவரை மென்பந்து கிரிக்கட்டில் மிளிர்ந்து வந்த ரஷாட், வன்பந்து (Hard Ball) கிரிக்கட்டில் தன்னை இவ்வருடம் ஈடுபடுத்திப் பார்த்தார். கொழும்பை மையமாகக் கொண்ட Harrow கிரிக்கட் அணியில் சேர்ந்தார். அகில இலங்கை ரீதியான Division 3 போட்டியில் இவ்வணி சார்பாக பங்கேற்றார். 2 ஆவது சுற்றில் வெளியேறியபோதும், இவ்வணிக்காக 7 போட்டிகளில் விளையாடி, தான் 25 விக்கட்டுக்களை கைப்பற்றிய மகிழ்ச்சி ரஷாடை தொடர்ந்தும் முன்னேறச் செய்தது.

தொடர் முயற்சிகளுக்கான அங்கீகாரம் அடுத்து அவரை நோக்கி வந்தது. கடந்த மாதம் இலங்கை கிரிக்கட் சபையில் இருந்து சர்வதேச போட்டியொன்றுக்கான தேர்வுக்கான அழைப்பு ரஷாடை வந்தடைந்தது. 20 பேர் நேர்முக தேர்வுக்கு வருகை



தந்திருந்தனர். அதில் 14 பேர் தெரிவாகினர். வேகப் பந்து வீச்சாளராக ரஷாட் இதில் தெரிவானார்.

செப்டெம்பர் 30 ஆம் திகதி இலங்கை கிரிக்கட் சபையின் அனுசரணையில் மலேசியா பயணமாகியது இந்தக் குழு. Colombo District Cricket Association எனும் பெயர் இவர்களது அணிக்கு வழங்கப்பட்டது. இந்தியாவில் இருந்து மும்பை அணியும், பங்களாதேஷில் இருந்து கலபகன் அணியும், மலேசியாவின் மலேசியன் மலாய்ஸ் அணிகளும் இப்போட்டியில் பங்குபற்றின.

இதில் இலங்கை அணி 5 போட்டிகளில் விளையாடி 3 போட்டிகளில் வெற்றியை சுவீகரித்தது. இலங்கை அணி சார்பாக அதிகூடிய விக்கெட்டுக்களான 13 விக்கெட்டுக்களை ரஷாட் கைப்பற்றினார். இதன்மூலம் பல புதிய அனுபவங்களைப் பெற முடிந்ததாகவும், சக அணி வீரர்களிடம் இருந்து நிறைய விடயங்களை தன்னால் கற்றுக்கொள்ள இது சிறந்த சந்தர்ப்பமாக அமைந்ததாகவும் கூறுகின்றார்.

தொழில் வாழ்க்கை அமைந்த பின்னர் விளையாட்டுத் துறையில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள சந்தர்ப்பம் இல்லையே என அங்கலாய்க்கும் பலரை இன்று நாம் காண்கின்றோம். ரஷாட் இவர்களுக்கான சிறந்த முன்மாதிரி என்றே கூறலாம். தற்சமயம் ஒரு கணக்காளராக Lanka Optic நிறுவனத்தில் பணிபுரியும் ரஷாட், தனது இலக்கில் மிகவும் தெளிவாக இருக்கின்றார்.

தனது வளர்ச்சியில் பெரும் பங்கை வகிக்கும் பெற்றோருக்கும், என்றும் தோள் கொடுக்கும் நண்பர்களுக்கும், முக்கியமாக தனக்கான களத்தை வழங்கிய Harrow கிரிக்கட் கழகத்திற்கும் நன்றிகளை தெரிவிக்கின்றார் ரஷாத்.

தனக்கான கதாநாயகனாக 2004 ஆம் ஆண்டு ஹராரேயில் நடந்த சிம்பாவே அணிக்கெதிரான போட்டியில் விளையாடியதனூடாக சர்வதேச ஒருநாள் துடுப்பாட்ட உலகில் அறிமுகமான இலங்கை துடுப்பாட்ட அணியின் சகல துறை ஆட்டக்காரர் ஏஞ்சலோ மெத்யூஸை குறிப்பிடுகின்றார் ரஷாட் ஆப்தீன்.



தொடர்ந்தும் சிறப்பாக விளையாடி, இலங்கை தேசிய கிரிக்கட் அணியில் இடம்பிடிக்க வேண்டும் என்பதே அவரது இலட்சியம். இலங்கை சார்பாக சர்வதேசப் போட்டிகளில் பங்கெடுப்பதன் ஊடாக தாய்நாட்டுக்கு சர்வதேசத்தில் கிடைக்கும் அங்கீகாரத்திற்கான பங்களிப்பை நல்க ரஷாட் ஆப்தீன் முனைகின்றார். அவரது முயற்சிகளுக்கும், எண்ணங்களுக்கும் சிறந்த பெறுபேறுகள் கிடைக்க பிரார்த்திப்போம்.

---



## கிழக்கில்... (03 ஆம் பக்கத் தொடர்)

**• ஒரு தனிநபரிடம் உள்ளது. ராஜபக்ஷ ஆட்சியின் போது சர்ச்சைகளை எதிர்கொண்ட ஆளுனர் எனும் வகையில் அவரின் கீழ் நியாயமான விடயங்கள் நடைபெறுமா?**

ஒரு மாகாணம் ஆளுனரின் கட்டுப்பாட்டின் கீழ் வருவதென்பது ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் விடயம். இதன் மூலம் மக்களுக்கும் கவர்னருக்குமிடையிலான தொடர்பு இல்லாமல் போகின்றது. மக்கள் தமது குறைபாடுகளை மக்கள் பிரதிநிதிகளிடம் முறையிடுவார்கள். அதை மாகாண சபை அமைச்சுக்கூடாக செய்து கொடுக்க வேண்டும் என்பது அவர்களுக்குரிய கடமையாகக் காணப்பட்டது. அதை அவர்கள் செய்தும் கொடுப்பார்கள்.

ஆனால் இன்று அதிகாரங்கள் அனைத்தும் அதிகாரிகளின் கைகளில் சுழல ஆரம்பித்திருப்பதனால் அதிகாரத் துஷ்பிரயோகங்கள் நடைபெறுவதற்கான சாத்தியங்கள் உள்ளன. அதேநேரம் மக்களது தேவைகள் உரிய இடத்திற்கு கொண்டு செல்லப்படாத விடயங்களும் அதிகரிக்கும். மாகாண சபை 100 வீதம் ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் வருவதின் மூலம் மக்கள் நேரடியாகப் பாதிக்கப்படுவார்கள். இந்த முறையை மாற்றுவதாக இருந்தால் அரசாங்கம் உடனடியாக மாகாண சபைத் தேர்தலை நடாத்த வேண்டும். சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள் கவனிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே மாகாண சபை முறை ஸ்தாபிக்கப்பட்டது.

ஆனால் இன்று சிறுபான்மை சமூகங்களுக்குத் தீர்வாக வழங்கப்பட்ட ஒரு மாகாண சபை கலைக்கப்பட்டு பெரும் பான்மை சமூகத்திடம் உள்ள ஒரு நிர்வாகியிடம் அதை வழங்கி மக்களை கஷ்டத்திற்குள்ளாக்கும் விடயத்தை அரசாங்கம் செய்துள்ளது. இது விடயத்தில் அரசாங்கம் உடனடியாக கவனம் செலுத்த வேண்டும்.





சூரிய சக்தியினால் இயங்கக்கூடிய தானியங்களின் விதையை விசிறும் இயந்திரத்தை முதலில் வெளிக்கொணர்ந்து 'Innova Minds - 2017' புத்தாக்குனர் போட்டியில் தேசிய ரீதியில் தெரிவாகி அண்மையில் கொரியா நாட்டுக்குச் சென்ற கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் தரம்-8 இல் பயிலும் அஜாத் பற்றி கடந்த இதழொன்றில் வாசித்தீர்கள்.

கொரியா நாட்டில் இடம்பெற்ற சர்வதேச போட்டியில் இலங்கை சார்பான குழுவில் இடம்பிடித்த இவர், வெண்கல பதக்கமொன்றை வென்றுள்ளார். அனர்த்த முகாமை தொடர்பான செயற்றிட்ட முன்மொழிவொன்றை சிறந்த முறையில் இவர்களின் குழு முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

## ரோஹிங்ய ... (03 ஆம் பக்கத் தொடர்)

தொகுத்து வழங்கி வந்தன. ஆனால் மியன்மார் பற்றியோ அங்கு இடம் பெறும் கொடுமைகள் பற்றியோ இந்த ஊடகங்களோ அல்லது அவர்களின் சகாக்களோ ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

சர்வதேச அரங்கில் ரோஹிங்யா முஸ்லிம்கள் மீதான கொடுமைக்கு எதிராக முதலில் குரல் கொடுத்த உலகத் தலைவர் பாப்பரசர் பிரான்ஸிஸ் மற்றும் நோபள் பரிசு வென்ற இந்தியரான அமர்தியா சென், ''மியன்மார் முஸ்லிம்கள் மீதான இந்தக் கொடுமைகள் சகிக்க முடியாத ஒரு காட்டுமிராண்டித் தனம்'' என வர்ணித்திருந்தனர். உலகப் புகழ் பெற்ற பல கல்விமான்களும் புத்திஜீவிகளும் இவ்வாறான கருத்துக்களையே முன்வைத்துள்ளனர்.

மியன்மாரின் ரெக்கைன் மாநிலத்தில் இடம்பெறும் இந்தக் கொடுமைகளை முடிவுக்கு கொண்டு வர ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தலையிட வேண்டும் என்ற கூட்டு வேண்டுகோள்களையும் அவர்கள் முன்வைத்துள்ளனர்.

பல நாடுகளும் அரசுகளும் மக்களும் மக்கள் அமைப்புக்களும் இந்த அட்டூழியங்களை மிகக் கடுமையான வார்த்தைப் பிரயோகங்களால் கண்டித்துள்ள போதிலும், இலங்கை அரசாங்கம் இந்த விடயத்தில் அலட்சியமாகவே உள்ளது. பிரதான பிரிவு ஊடகங்கள் கடமைக்காக ஒரு சில பந்திகளை பிரசுரித்து விட்டு மௌனம் காக்கின்றன.

முஸ்லிம் பெயர்களையுடைய நபர்கள் சம்பந்தப்பட்ட சம்பவங்களை இலங்கை ஊடகங்கள் தவறாமல் பதிவு செய்து வந்துள்ளமை இங்கு குறிப்பாக அவதானிக்கத் தக்கதாகும். ஆனால் முஸ்லிம்கள் மீது இழைக்கப்படும் அநீதிகளுக்கும் அட்டூழியங்களுக்கும் அந்தளவு முக்கியத்தவம் வழங்கப்படுவதில்லை.

பாப்பரசரின் கண்டனத்தை தொடர்ந்து 72 மணி நேரத்தில் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்டானியோ கட்டரஸ் றோஹிங்யா மக்களுக்கு உதவ மனிதாபிமான நிறுவனங்களுக்கு வழிவிடுமாறு மியன்மார் அரசிடம் வேண்டுகோள் விடுத்தார். இன ஒழிப்பு என்றால் என்ன என்று ஒரு பாடப்புத்தகத்தில் கூறப்படும் உதாரணம் போல் இந்தச் சம்பவங்கள் காணப்படுவதாக ஐ.நா மனித உரிமை ஆணையாளர் நாயகம் இதை வர்ணித்திருந்தார்.

ஐரோப்பாவில் செயற்படும் ரோஹிங்யா சபையின் பெண் பேச்சாளர் அனிடா ஸ்குக் 'இது மெதுவாக எரியும் இன ஒழிப்பு' என வர்ணித்துள்ளார். இந்த மரணங்களுக்குப் பின்னணியில் மியன்மார் இராணுவமே உள்ளது என அவர் நேரடியாகக் குற்றம் சாட்டியுள்ளார். இந்த சம்பவங்களை வன்மையாகக் கண்டித்துள்ள கௌரவத்துக்குரிய பௌத்த மதத் தலைவர் தலாய் லாமா மியன்மாரின் ஆட்சியாளர் ஆங் சாங் சூகிக்கு இவற்றை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு நேரடியாக கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

ஒரு பௌத்த நாடு என்ற ரீதியில் மியன்மாரில் முஸ்லிம்களுக்கு என்ன நடக்கின்றது என்று தன்னை நோக்கி எழுப்பப்படும் கேள்விகள் தன்னை பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளதாகவும் பலருக்கு என்ன நடக்கின்றது என்பதை புரிந்துகொள்ள முடியாமல் இருக்கின்றது என்ற ரீதியலும் தலாய் லாமாவின் கருத்துக்கள் அமைந்துள்ளன.

மியன்மார் மக்கள் மத்தியில் சிநேக பூர்வமான உறவுகளை ஏற்படுத்தி சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஸ்தாபிக்கும் வகையில் சமூகத்தில் சகல தரப்பினருடனும் உறவுகளை ஏற்படுத்துமாறு தலாய் லாமா ஆங் சாங் சூகியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

புத்த பிரான் இன்றைய காலகட்டத்தில் வாழ்ந்திருப்பாராயின் உயிரைக் காப்பாற்ற ஓடிக்கொண்டிருக்கும் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு ஆதரவாகத்தான் இருந்திருப்பார் என்று உலகில் மிகவும் கௌரவத்துக்குரிய பௌத்த மதத் தலைவரான தலாய் லாமா கவலையோடு தெரிவித்துள்ளார்.

அவர் அத்தோடு நிற்கவில்லை. சமாதானத்துக்கான நோபள் பரிசு வென்ற உலகின் கீர்த்திமிக்க பிரமுகர்கள் மற்றும் தென் ஆபிரிக்காவின் அதிமேற்றிறாணியார் டெஸ்மன்ட் டுடு ஆகியோருடன் இணைந்து ரோஹிங்யா முஸ்லிம்கள் விடயத்தில் தலையிட்டு அவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு ஆங் சாங் சூகிக்கு பகிரங்கக் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையிடம் விடுத்துள்ள வேண்டுகோளில் மியன்மார் ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை நிறுத்த கடுமையான அவசர நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். உண்மையான எண்ணத்துடன் தான் இந்த வேண்டுகோளை விடுத்தாரா என்பது ஒரு புறம் இருக் கட்டும்.

மியன்மார் முஸ்லிம்கள் வாழ்ந்த கிராமங்களை எரித்து அவர்களை அங்கிருந்து விரட்டியடிக்கும் நடவடிக்கையில் மியன்மார் இராணுவம் ஈடுபட்டுள்ளதாக அமெரிக்க உப ஜனாதிபதி மைக் பென்ஸ் நேரடியாகச் சாடியுள்ளார். வன்முறைகள் நடந்த இடத்தில் எடுக்கப்பட்டுள்ள படங்கள் மற்றும் மியன்மார் முஸ்லிம் அகதிகள் பற்றிய படங்கள் அமெரிக்க மக்களை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளதாக பாதுகாப்புச் சபையில் பேசும்போது அவர் தெரிவித்துள்ளார்.

அப்பாவி பொது மக்கள் மீது தாக் [illegible]

[illegible] மைகள் மீறப்படுகின்றன. இது கடைசியில் இந்த ஒட்டுமொத்த பிராந்தியத்தின் பாதுகாப்புக்கும் இறைமைக்கும் அச்சுறுத்தலாக அமைந்து விடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். தற்போது இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபை அமர்வுகளின் போதே மைக் பென்ஸ் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க வெளியுறுவுச் செயலாளர் ரெக்ஸ் டில்லர்ஸன் சூகியுடன் நேரடியாக தொலைபேசி வழியாகத் தொடர்பு கொண்டு மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறும் மனிதாபிமான உதவிகளுக்கு வழிவிடுமாறும் கேட்டுள்ளார். ஆகஸ்ட் 25 இல் மியன்மார் பிரச்சினை தொடங்கியது முதல் பாதுகாப்புச் சபை இரண்டு தடவைகள் இரகசியக் கூட்டங்களை நடத்தியுள்ளது. கடந்த வாரம் ஒரு அறிக்கையை வெளியிட்ட பாதுகாப்புச் சபை மியன்மார் சம்பவங்களை வன்மையாகக் கண்டித்துள்ளதோடு வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு மியன்மார் அதிகாரிகளையும் அது கேட்டுள்ளது.

செப்டம்பர் 20 ஆம் திகதி பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மெக்ரோன் அந்த நாட்டின் TMC தொலைக்காட்சி சேவைக்கு அளித்துள்ள பேட்டியில், 'இனச் சுத்திகரிப்பை வெளிப்படுத்தும் இன ஒழிப்பு நடவடிக்கைகளை கண்டிப்பதற்கு பாதுகாப்புச் சபையின் ஏனைய நாடுகளுடன் இணைந்து செயற்படுவேன்' என்று தெரிவித்துள்ளார். அவர் இன ஒழிப்பு என்ற வார்த்தையை பிரயோகித்திருப்பது மியன்மார் இராணுவத்தின் மீதான அவரின் பலத்த கண்டனத்தை வெளிப்படுத்துவதாகவே கருதப்படுகின்றது.

இந்தக் கட்டுரை எழுதப்படும் செப்டம்பர் 28 ஆம் திகதி வரை மியன்மாரிலிருந்து ஐந்து லட்சத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் வெளியேறியுள்ளனர். உயிரைப் பாதுகாக்க இவர்கள் அண்டை நாடான பங்களாதேஷில் தஞ்சம் புகுந்துள்ளனர். தற்போது இடம்பெற்று வரும் இனவாத சுத்திகரிப்புச் செயற்பாட்டை நாம் மிக வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்றும் பிரான்ஸ் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த விடயத்தில் மியன்மார் ஆட்சியாளர் சூகியின் நிலைப்பாடு மனித உரிமை குழுக்களை அதிர்ச்சி அடையச் செய்துள்ளது. மியன்மாரில் இராணுவ ஜுன்டாவால் 15 வருடங்களுக்கு மேல் அவர் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது அவருக்காக குரல் கொடுத்த அமைப்புக்கள்தான் இவை. இவர்கள் தான் சூகியின் சமாதானத்துக்கான நோபல் பரிசுக்காகவும் பிரசாரங்களை முன்னெடுத்தவர்கள்.

ரோஹிங்யா முஸ்லிம்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் துருக்கி ஜனாதிபதி அர்துகான் முன்னணியில் இருந்து செயற்படுகின்றார். இந்த மக்கள் இன ஒழிப்புக்கு ஆளாகியுள்ளனர் என்ற நிலைப்பாட்டையே அவரும் கொண்டுள்ளார். இந்தோனேஷியா தனது வெளிவிவகார அமைச்சரை மியன்மாருக்கு அனுப்பி முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்கு கொண்டு வருமாறு கேட்டுள்ளது.

ஆனால் மத்திய கிழக்கில் ஆட்சியில் இருக்கும் அமெரிக்க மற்றும் இஸ்ரேல் கூலிப் படைகளான சர்வாதிகார ஆட்சியாளர்கள் மட்டும் இந்த விடயத்தில் இன்னமும் மௌனம் சாதிக்கின்றனர். யெமனிலும் சிரியாவிலும் ஏனைய நாடுகளிலும் முஸ்லிம்களைக் கொல்வதற்காகவே சவூதி அரேபியா தனது எஜமானர்களிடம் இருந்து 120 பில்லியன் டொலர் பெறுமதியான ஆயுதங்களைக் கொள்வனவு செய்கின்றது. ஆனால் ரோஹிங்யாக்களுக்காக 15 மில்லியன் டொலர்களை மட்டுமே அது ஒதுக்கி உள்ளது. இது தான் இன்றைய முஸ்லிம் உலகின் மிகவும் வெட்கக்கேடான கேவலமான ஒரு நிலையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கள் வாகனமோட்ட அனுமதிப்பது அவர்களின் கண்ணியத்திற்கு களங்கம்?!



• முஹம்மத் பகீஹுத்தீன்

**பெண்மணிகள் நம் கண்மணிகள். அவர்களது மானம் மரியாதைகளுக்கு களங்கம் வராமல் காப்பது எமது பொறுப்பு. எனவே பெண்கள் வாகனமோட்ட அனுமதித்தால் மரியாதை கெட்டுப் போகும். இங்கு கண்ணியம் காப்பதுதான் முக்கியம். வாகனம் ஓட்டுவது ஒழுக்கமுள்ள இல்லத்தரசிகளின் கண்ணியத்திற்கு பங்கம் என்பதால் சவூதி பெரிய முப்திகள் சபை அன்று சவூதி பெண்கள் வாகனமோட்டுவது ஹராம் என பத்வா வெளியிட்டது.**



ஆம் இற்றைக்கு சுமார் 27 வருடங்களுக்கு முன்பு சவூதி உள்துறை அமைச்சு வெளியிட்ட அறிக்கையில் பெண்கள் வாகனம் ஓட்டுவது ஹராம் என பத்வா வழங்கப்பட்டிருந்தது. சவூதி பத்வாக் குழுக்கான தலைவர்கள், உயர் நீதிமன்ற உறுப்பினர்கள், பெரிய முப்திகள் நாட்டின் தலைசிறந்த அறிஞர்களின் ஒப்புதலுடன் இந்த பத்வாவை சவூதி அரசு வெளியிட்டிருந்தது.

பெண்களின் கண்ணியம் காப்பதும், அவர்களை மலினப்படுத்தும் அவல நிலையிலிருந்து பாதுகாப்பதும், பித்னாவிற்கு ஆளாகாமல் தடுப்பதும், தீங்குகள் ஏற்படாமல் பாதுகாப்பதும் ஷரீஆ வேண்டியுள்ள கடமைகளாகும். எனவே பெண்கள் மீதுள்ள பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் வாகனம் ஓட்டுவது ஹராம் என சவூதி அறிஞர்கள் பத்வா வெளியிட்டனர். இந்தச் சட்டத்தை மீறும் சவூதி பெண்மணிகள் மிகக் கடுமையான முறையில் தண்டிக்கப்படுவார்கள் எனவும் பத்வா அறிக்கை சுட்டியிருந்தது.

பெண்கள் வாகனம் ஓட்டுவது என்பது சவூதிப் பிரஜைகள் அனுபவிக்கும் கௌரவமான இஸ்லாமிய பெறுமானங்களுக்கு முரணாகவே உள்ளது. எனவே நாட்டின் கண்ணியம் காப்பது மேல் என்பதும் தடைக்கான மேலதிகக் காரணியாக முப்திகள் சபை தெரிவித்திருந்தது. பார்க்க: அல்ஜஸீரா பத்திரிகை, இதழ்: 6621 திகதி: 20.4.1411 (1990)

பெண்கள் வாகனம் ஓட்டுவது ஹராம் எனும் கடுமையான பத்வா வளைக்க முடியாத சட்டத் தீர்ப்பாகவே இதுவரை நிலவி வந்தது. கடந்த 2017 செப்டம்பரில் வலிமை மிக்க அந்தத் தீர்ப்பு சடுதியாக மாறுகிறது. அன்று வளைக்க முடியாத சட்டம் இன்று வளைந்தது. அது ஏன்? அந்த வளைவுக்கு மூலாதாரமாக அமைந்தது எது?

இது குறித்து மகாஸித் அறிஞர் கலாநிதி வஸ்பி ஆஷுர் அபூ ஸைத் அவர்கள் காத்திரமான சில கருத்துக்களை பகிர்ந்துள்ளார்கள். அவருடைய கருத்துக்களில் இருந்து சில முக்கியமான குறிப்புக்களை சுருக்கித் தருகின்றோம்.

முதலில் இந்த விடயத்தைப் பேசுவதற்கு வெட்கமாக உள்ளது. உலகம் பாரிய மாற்றங்களைக் கண்டு முன்னேறும்போது, சமூகங்கள் மிகப் பெரிய திருப்புமுனைகளைக் கடந்து பயணிக்கும் இவ்வேளையில் பெண்களுக்கு வண்டியோட்ட அனுமதியுண்டு என்ற செய்தியைப் பேசுவது உண்மையில் அவமானமான ஒரு விடயமே. 2017 ஆம் ஆண்டிலாவது சவூதிப் பெண்மணிகளுக்கு அந்த உரிமை கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைவதைத் தவிர வேறு வழி கிடையாது.

அரபுலகில் முதன் முதலில் வாகனம் ஓட்டும் அனுமதி பெற்ற பெண்மணி எகிப்து நாட்டின் திருமதி 'அப்பாஸியா அஹ்மத் பர்கலி' என்பவரே. அப்பாஸியா பர்கலி இற்றைக்கு 97 ஆண்டுகளுக்கு முன்னர் 1920 ஆம் ஆண்டு ஓட்டும் உரிமம் பெற்றார்.

1936 ஆம் ஆண்டு பக்தாத் நகரில் முதன் முதலாக வாகனம் ஓட்டிய பெருமை 'அமீனா அலி ஸாஇப்' எனும் பெண்மணிக்கே சொந்தம்.

சூடானைச் சேர்ந்த 'ஆமினா அதிய்யா' என்ற பெண் 1945 ஆம் ஆண்டு முதன் முதலில் சூடான் நகரில் வாகனம் ஓட்டிச் சென்ற பெருமைக்குரியவர்.

'ஷெய்கா பத்ரியா அல்-ஸபாஹ்' 1947 ஆம் ஆண்டு குவைத் நாட்டில் முதன் முதலில் வாகனம் ஓட்டும் அனுமதி பெற்ற பெண்மணியாகும்.

இத்தொடரில் மௌஸா எனும் அமீரகத்தின் பெண்மணி 1976 இல் முதலில் வாகனம் ஓட்டியதை வரலாறு பதிவு செய்துள்ளது.

வரலாறு இப்படி இருக்க, இன்று 2017 இல் பாரிய சாதனை படைக்கும் வரலாற்றுக் கண்டுபிடிப்பாக இந்த பத்வாவை வெளியிட்டுள்ளமை வேடிக்கையான விடயமாகும். புதிய பத்வாவின் மூலம் 2017 இல் சவூதிப் பெண்கள் வாகனம் ஓட்டும் அனுமதியைப் பெற்றுக் கொண்டது பாக்கியமே.

இரண்டாவதாக வஸ்பி ஆஷுர் சுட்டிக்காட்ட விரும்புவது சவூதி அறிஞர்களின் பத்வாக்களுக்கு சட்ட மூலாதாரமாக அமைவது யாது என்ற கேள்வியாகும். சவூதியில் மதிப்புக்குரிய பெரிய முப்தி உட்பட அறிஞர்களுக்கான உயர் சபை இருக்கிறது. ஏனைய சவூதி உலமா பெருந்தகைகள் அதிகமாக உள்ளனர். அவர்கள் அனைவரும் பெண்கள் வாகனம் செலுத்துவதற்கு எதிராகவே 2017 செப்டம்பர் வரை கருத்து வெளியிட்டு வந்துள்ளனர். பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு மிகக் கடுமையான எதிர்ப்பும் ஷரீஆ நியாயங்களும் அவர்களிடம் காணப்பட்டன. அந்தத் தீர்ப்புக்கு புறம்பாக யாரும் எதுவும் பேச முடியாத அளவிற்கு சிந்தனைப் பயங்கரவாதமும் நிலவியது.

கடந்த இரு வருடங்களுக்கு முன்பு மரியாதைக்குரிய சவூதி பெரிய முப்தி அவர்கள் பெண்களுக்கான தடையை உறுதிப்படுத்தி அது பல தீமைகளுக்கான வாயில்களை திறந்து விடுகின்றன எனவும் வரமுன் காக்கும் வகையில் அந்தத் தீமைகளுக்கான வாயில்கள் அனைத்தும் மூடப்பட வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கியிருந்தார்.

முப்திகள் சபையின் கடும் எதிர்ப்பு நெருப்பு வேலியாக இருந்த இந்தத் தருணத்தில் சடுதியாக சட்டம் தலைகீழ் வடிவம் எடுக்கிறது. கடந்த 26 செப் 2017 செவ்வாய் அன்று சவூதிப் பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு தடையில்லை என்று மன்னர் ஸல்மானின் அரச கட்டளை வந்தது. அதுவும் ஷரீஆவின் பாதுகாப்பும் உத்தரவாதமும் இருக்கும் போது பெண்கள் வாகனம் செலுத்துவதை தடைசெய்யத் தேவையில்லை என மன்னரின் கட்டளை கூறியது. இந்தக் கட்டளை பெரிய முப்தி உட்பட பத்வா சபையின் பூரண ஒப்புதலுடன் தான் வெளியாகியது.

சுமார் இரு வருடங்களுக்கு முன்பு கலாநதி யூஸுப் அல் கர்ளாவி அவர்கள் மன்னர் அப்துல்லாஹ் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் பெண்ணொருத்தி வாகனம் ஓட்டுவதில் ஷரீஆவின் பார்வையில் எந்தத் தடையும் கிடையாது. அதில் தப்பும் இல்லை. ஷரீஆவின் சட்ட விதிகளுக்கு ஏற்ப அவள் கார் ஓட்டுவதற்கு அனுமதி உண்டு எனவும் தெளிவுபடுத்தியிருந்தார்.

இந்தக் கடிதத்திற்கு மறுப்பு தெரிவித்த சவூதி அறிஞர் அஷ்ஷெய்க் பௌஸான் அவர்கள், சவூதி ராஜ்யத்தின் விவகாரத்தில் பிறர் தலையிடுவதை நாம் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். ஒரு முஸ்லிமின் சிறந்த இஸ்லாமிய பண்பு தனக்கு தேவையற்ற விடயத்தில் தலையிடாமல் விட்டுவிடுவதாகும்.

மேலும் அறிஞர் பௌஸான் அவர்கள்: இது சவூதியின் தனிப்பட்ட விவகாரம். குறித்த அந்த விவகாரத்தை பார்ப்பதற்கு சவூதியில் அறிஞர்கள் தாராளமாக உள்ளனர். மேலும் பெண் வாகனம் ஓட்டுவதென்பது அத்தியவசிய தேவையுமல்ல. அது இல்லாமல் வாழ்க்கை ஓட்ட முடியாதா என்ன?! இறையுதவியதால் சவூதி ராஜ்யத்தில் ஆண்டாண்டு காலமாக பெண்கள் வாகனம் ஓட்ட வேண்டிய எந்தத் தேவையும் இல்லாமல் நாடு நன்றாகவே ஓடுகிறது.

அவ்வாறே பெண்கள் வாகனம் ஓட்டுவதில் எந்த நலனும் கிடையாது. அதில் அபாயமும் கஷ்டமும் துன்பங்களுமே அதிகம். அதனைக் கையாள்வதற்கு பெண் திராணியற்றவள் என்று அறிஞர் பௌஸான் அவர்கள் கர்ளாவிக்கு மறுப்புத் தெரிவித்திருந்தார்.

இப்படிப் பேசிய அறிஞர் அஷ்ஷெய்க் பௌஸான் அவர்கள் இப்போது எங்கே? வலிமையான சட்ட வேலி போட்ட அந்த அறிஞர் எங்கே என வஸ்பி ஆஷுர் இன்று அழைப்பு விடுத்துள்ளார்.

இரட்டை நிலைப்பாடுகள் கொண்ட அறிஞர்களின் பத்வாக்கள் குறித்து பலத்த சந்தேசம் எழுகின்றது. சவூதி அறிஞர்களின் இப்படியான தீர்ப்புகளுக்கு அடிப்படை மூலாதாரம் யாது? அது எங்கிருந்து பெறப்படுகிறது? உண்மையில் குர்ஆனும் ஸுன்னாவும் தானா அவர்களின் மூலாதாரம் அல்லது மன்னர்களின் கட்டளைப் பத்திரங்களா? என கலாநிதி வஸ்பி அவர்கள் கேள்வி எழுப்புகிறார்.

ஒரு விடயம் ஷரீஆ சட்டங்களுக்கு முரண்படுகிறது அல்லது ஒத்து வருகிறது என்பதை கவனியாமல் மன்னர்களின் ஆணைகளுக்கு உடன்படுவதை மாத்திரம் கவனிக்கும் நிலைதான் உங்களிடம் இருக்குமாயின் அது துர்ப்பாக்கிய நிலையாகும். அல்லாஹ் பாதுகாக்க வேண்டும் என அவர் மேலும் கவலை தெரிவித்துள்ளார்.

ஆனால் இந்த நிகழ்வு நல்லதுக்குத்தான் நடைபெற்றுள்ளது. இதில் சமூகத்திற்கு நன்மை இருக்கிறது. நிகழ்வுகள் மூலம் சமூகம் புடம்போடப்படுகிறது. சமூகத்தில் உள்ள நல்லவர்கள் யார் கயவர்கள் யார் என்பதை பிரித்துக் காட்டும் சோதனைச் சாவடிகளாகவே இந்நிகழ்வுகளை நான் (வஸ்பி) பார்க்கின்றேன்.

சரி எது பிழை எது என்பதை நிகழ்வுகள் சமூகத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றது. அதிகார வர்க்கத்திற்கு உடந்தையாக உள்ள அறிஞர்கள் யார் சத்தியத்தின் பாதுகாவலராக உள்ள அறிஞர்கள் யார் என்பதை தோலுரித்துக் காட்டும் நிகழ்வாகவே இதனைக் காண்கின்றேன். தறி கெட்ட அறிஞர்கள் யார் குர்ஆனிய மனிதர்கள் யார் என்பதை பிரித்துக் காட்டவே இந்த நிகழ்வுகள். எனவே இது எல்லா வகையிலும் நன்மை பயக்கும் நிகழ்வாகவே நான் காண்கின்றேன்.

நிச்சயமாக அல்லாஹ் முஃமின்களை, நீங்கள் நல்லவர்களாகவும் கெட்டவர்களாகவும் கலந்து வாழும் இந்த நிலையிலேயே விட்டுவிட மாட்டான். நல்ல முஃமின்கள் யார் கெட்ட முனாபிகுகள் யார் என்பதை அல்லாஹ் வேறுபடுத்தியே தீருவான். (ஆலஇம்ரான்: 179)

## எல்லை நிர்ணயம்... (01 ஆம் பக்கத் தொடர்)

இதற்கான முன்னெடுப்புகள் இன்னும் ஆரம்பிக்கப்பட வில்லை என்பது கவலைக்கிடமானது. இது விடயத்தில் சிவில் சமூக அமைப்புகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

சிவில் சமூகத்திலுள்ள புத்திஜீவிகள், சமூக செயற்பாட்டு அமைப்புக்கள் என சகலரும் ஒன்றிணைந்து தொகுதி நிர்ணய விடயத்தில் கரிசனை செலுத்தி தீர்மானங்களை தெளிவாக அறிக்கைப்படுத்தி குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் குறிப்பிட்ட ஆணைக்குழுவிடம் கையளிக்க வேண்டும். இவ்வாறு இடம்பெறாத பட்சத்தில் அரசியல் சுயலாபத்திற்காக நிர்ணயித்த தொகுதிகளையே ஏற்றுக் கொள்ள வேண்டி வரும் என்பதில் சந்தேகம் இருக்காது.

தொகுதிகளை நிர்ணயம் செய்யும் போது சனத்தொகை, புவியியல் அமைப்புகள் மற்றும் பொதுத் தேர்தல் தொகுதிகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட வேண்டும். முஸ்லிம்களது இனப்பரம்பலின் படி, எல்லா இடங்களிலும் எமக்கான பிரதிநிதிகளை பெற முடியாவிட்டாலும் கூட தீர்மானிக்கும் சக்தியாக (Deciding Factor) இருக்கலாம் என்பதையும் நினைவில் இருத்திக்கொள்ள வேண்டும்.

இதன்மூலமம் சிங்களவர்களுடன் சிறுபான்மையாக வாழும் பகுதிகளில் சிங்கள அங்கத்தவரொருவர் சிறுபான்மை சார்பாக பேசுகின்ற நிலை உருவாகும். நாட்டில் இனவாதம் மேலெழுப்பட்டு வரும் இத்தருணத்தில் பெரும்பான்மை மக்களுடன் ஐக்கியப்படுவதற்கான வழிகளும் திறக்கப்படும் என்பதும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியுள்ளது.

மாகாண சபை தேர்தல் தொகுதிகளை நிர்ணயிப்பதற்கான எல்லை நிர்ணய ஆணைக்குழு கடந்த 27ஆம் திகதி ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டதாகவும் முதலில் சப்ரகமுவா, வடமத்திய, கிழக்கு மாகாணங்களுக்கான எல்லை நிர்ணய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் சுமார் 3 மாத காலத்தில் தொகுதி நிர்ணய இறுதி அறிக்கையை சமர்ப்பிக்கப்படும் என்றும் எல்லை நிர்ணய ஆணைக்குழு உறுப்பினர் ஒருவர் மீள்பார்வைக்கு தெரிவித்தார்.

## 4.7 வீத... (01 ஆம் பக்கத் தொடர்)

இவற்றுடன் ஒப்பிடும்போது இலங்கை பின்தங்கி இருப்பதாகவும் வேர்ல்ட் எகொனொமிக் ஔட்லுக் சுட்டிக் காட்டியுள்ளது.

பணவீக்கத்திலும் இலங்கை சரிசரியை விட மேலாக உள்ளது. செப்டம்பர் மாதத்துக்கான பணவீக்கம் 7.1 வீதத்தைக் காட்டியுள்ளது.

இலங்கை போன்ற கடன்சுமை மிகைத்த நாடுகள் இப்போதே நிதிப் பங்குடைமையில் ஈடுபாடு காட்ட வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் ஆய்வுப் பணிப்பாளர் மொரிஸ் ஒஸ்பீல்ட் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## படையினருக்கு... (01 ஆம் பக்கத் தொடர்)

பங்களாதேஷ், புரூணை, இந்தோனேஷியா, மலேஷியா, சிங்கப்பூர், பிலிப்பைன், தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் முதல் முறையாக இலங்கையும் இந்தப் பயிற்சியில் இணைந்து கொண்டுள்ளது. இந்தோ-ஆசிய-பசுபிக் பிராந்தியத்தில் இருதரப்பு மற்றும் பலதரப்பு பாதுகாப்பு நடவடிக்கைளில் இலங்கையும் இணைந்து கொண்டது மகிழ்ச்சி தருகிறது என கமாண்டர் ரொபர்ட் போமன் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சியில் படகு நடவடிக்கைகள், ஆதாரங்கள் திரட்டுதல், நீச்சல் செயற்பாடுகள், பயங்கரவாதத்துக்கு எதிரான பாதுகாப்பு போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. இலங்கைப் பாதுகாப்புப் படையுடனான இராணுவ நடவடிக்கைகளில் இந்த CARAT நிகழ்ச்சித் திட்டம் புதுவரவாகும்.

இதேவேளை, இந்தியா இலங்கை இராணுவத்தினருக்கிடையிலான கூட்டு இராணுவ பயிற்சியில் கலந்துகொள்வதற்காக இலங்கை சிங்க படைப்பிரிவுக்கு உட்பட்ட 10 அதிகாரிகளும் 110 வீரர்களும் இந்தியா சென்றுள்ளார்கள்.

'Mithra Shakthi - 2017' Joint Military Exercise என்ற இந்த பயிற்சி இம்மாதம் 27 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது

## குடும்ப ஆதிக்கம்... (04 ஆம் பக்கத் தொடர்)

இவ்விடத்திலேயே ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன பழமைவாத அரசியல்வாதி என்கின்ற கட்டத்திலிருந்து சிறப்பானதொரு இராஜதந்திரியாக பரிணாமம் பெற வேண்டும். தன்னுடையதும் தனது கட்சியினுடையதும் எதிர்காலம் பற்றி சிந்திப்பதற்குப் பதிலாக நாட்டின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்து பார்க்க வேண்டிய சந்தர்ப்பமே இது.

அமெரிக்காவில் அவர் கூறியது போன்று, தன்னை பற்றிச் சிந்திக்காமல் அதிகாரத்தில் ஒரு பகுதியை சுயமாகவே கைவிடுவதற்கு அவர் எடுத்த முடிவானது நாட்டு மக்களின் பாராட்டுதலுக்கு உட்பட்டது. அதுபோன்று "தன்னுடையதல்லாத தன்னுடைய கட்சி" தொடர்பில் சிந்திப்பதை விட நாடு தொடர்பில் சிந்திக்கும் சக்தி அவருக்கு இருந்தால் சுதந்திரத்தின் பின்னர் இலங்கை உருவாக்கிய முதலாவதும் ஒரேயொரு அரசியல் மேதையாகவும் அவர் இருப்பார் என்

## வரலாற்று... (05 ஆம் பக்கத் தொடர்)

சிறுபான்மை பிரச்சினைகள் தொடர்பில் அரசு உண்மையான கவனம் செலுத்த வேண்டும். வடக்கு கிழக்கு இணைப்பு, காணிப் பிரச்சினை, தேர்தல் முறைமை மாற்றம் உள்ளிட்ட சிறுபான்மை இனத்தவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும். அதேவேளை அரசியல் தீர்வை எதிர்பார்க்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் சக சிறுபான்மை மக்களின் பிரச்சினை குறித்தும் இதய சுத்தியுடன் அணுக வெண்டும்.

முதலமைச்சரை முஸ்லிம்களுக்குத் தருகின்றோம். வடக்கு கிழக்கு இணைப்புக்கு ஆதரவளியுங்கள் எனக் கோருவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சுத்த ஏமாற்று வித்தையாகும். முஸ்லிம்கள் சமஷ்டி கோரவில்லை. கரையோர மாவட்டைத்தையும் கோரவில்லை. அது தாருஸ் ஸலாத்திலிருந்து ரவூப் ஹக்கீம் முழங்கும் கோரிக்கை.

கிழக்கு முஸ்லிம்களைப் பொறுத்த வரை வடக்கு வடக்காகவும் கிழக்கு கிழக்காகவும் இருந்தால் போதுமானது. அதுவே இருக்கக் கடவது. இதை மீறுகின்ற எந்த அரசியல் கட்சியும் முஸ்லிம் சமூகத்திற்கு இழைப்பது பட்டவர்த்தனமான வரலாற்றுத் துரோகமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்லாந்தின் கல்வி முறை உலகக் கவனத்தை ஈர்க்கின்றது

உலக கல்வி முறைத் தரத்தில் 2017 ஆம் ஆண்டின் கணிப்பீட்டின்படி பின்லாந்து 3 ஆவது இடத்தில் உள்ளது. முதலிடம் சுவிட்சர்லாந்துக்கும் இரண்டாம் இடம் சிங்கப்பூருக்கும் கிடைத்துள்ளது. 2006 இல் மேற்கொள்ளப்பட்ட தரப்படுத்தலில் பின்லாந்து முதலிடம் பெற்றது. உலகிலேயே குழந்தைகள் மகிழ்ச்சியாக இருக்கும் நாடுகளின் பட்டியலில் பின்லாந்து முன்னணியில் இருக்கின்றது. 100 வீதம் குழந்தைகள் பாடசாலை செல்லும் நாடாக பின்லாந்து விளங்குகின்றது. பல்கலைக்கழகப் பட்டத்தை ஏறத்தாழ எல்லோரும் பெறும் நாடாகவும் அதுவே விளங்குகின்றது.

பின்லாந்து வட ஐரோப்பிய நாடுகளுள் ஒன்றாகும். சுவீடனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் அமைந்துள்ள இந்நாட்டின் மேற்குப் புறமாக நோர்வேயும் கிழக்கில் எஸ்டோனியாவும் அமைந்துள்ளது. 338,145 சதுர கி.மீ. பரப்பைக் கொண்ட இந்நாட்டில் சுமார் 6 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். பினிஷ், சுவிடிஷ் ஆகியன தேசிய மொழிகள். தலைநகரம் ஹெல்சிங்கி மக்கள் செறிவாக வாழும் நகராக உள்ளது.

பொருளாதாரத்திலும் சமூக அபிவிருத்தியிலும் முன்னணியில் இருக்கும் இந்நாட்டின் கல்வி முறை, குறிப்பாக பாடசாலைக் கல்வி கடந்த பத்தாண்டில் உலகளாவிய கவனத்தைப் பெற்று வருகின்றது. நொகியா கையடக்கத் தொலைபேசி உற்பத்தியினூடாக பெருமளவு வருமானம் ஈட்டி வந்த இந்நாடு தற்போது பெருமளவு கல்விச் சுற்றுலா வருமானத்தையும் ஈட்டி வருகின்றது.

பின்லாந்தின் வகுப்பறைக் கல்வியைப் பார்வையிடுவதற்காகவும் கற்றுக் கொள்வதற்காகவும் வருடந் தோறும் நேரடியாக அங்கு விஜயம் செய்யும் கல்வியியலாளர்கள் கூட்டம் அதிகரித்து வருகின்றது. வருடாந்தம் 15,000 வெளிநாட்டுக் கல்வியியலாளர்கள் பின்லாந்துப் பள்ளிக்கூட கல்வி முறையை அறிந்து வர அங்கு விஜயம் மேற்கொள்கின்றனர். 56 நாடுகளிலிருந்து ஆண்டுதோறும் இவ்வாறு பின்லாந்துக்குக் கல்விச் சுற்றுலா மேற்கொள்ளும் கல்வித் துறை சார்ந்தோர் தொகை வருடாந்தம் அதிகரித்து வருகின்றது. இதன் மூலம் 27 சதவீத வருமானத்தை அந்நாடு பெற்று வருகின்றது.

ஒரு காலத்தில் ரஷ்யாவின் கொலனியாக இருந்த இந்நாடு, தற்போது பாடசாலைக் கல்வி முறையில் உலகக் கவனத்தை ஈர்த்தது எப்படி என்ற கேள்வி பலரையும் குடைந்து கொண்டிருக்கிறது. ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலேயே தலைசிறந்த பாடசாலைக் கல்வி முறையைப் பின்பற்றும் முதற் தர நாடு பின்லாந்து ஆகும்.



பின்லாந்தின் கல்வித் துறையின் சிறப்பம்சங்களாக பின்வருனவற்றை அடையாளப்படுத்தலாம்.

**01. கல்வியில் தனியார்த் துறைக்கு இடமில்லை.**

பின்லாந்தின் பாடசாலைக் கல்வி 100 வீதம் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது. ஒரு தனியார் பாடசாலையும் இல்லாத ஒரே நாடு பின்லாந்து ஆகும். மேலதிக தனியார் டியூஷன் வகுப்புகளும் அங்கு இடம்பெறுவதில்லை. கல்வி 100 வீதம் இலவசமானது என்பதோடு, வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்கு பெருந்தொகை நிதி ஒதுக்கப்படுகின்றது.

**02. பரீட்சைகள் இல்லை**

பின்லாந்து பாடசாலைகளில் பரீட்சை முறை இல்லை. தேர்வில் முதலிடம் பெறுபவர்கள், எந்த மாணவர் எந்த இடம் பெற்றார் என்பது அறிவிக்கப்படுவதில்லை. பரீட்சை மையக் கல்வி அங்கு இல்லை என்பதே இதன் அர்த்தமாகும். பரீட்சைகள் இல்லை என்பது மொத்தமாகவே அது நடைபெறுவதில்லை என்பதல்ல. மாறாக, மாணவர்களை பரீட்சையினூடாக தரம் பிரிக்கும் வழக்கம் அங்கு இல்லை.

எல்லா வகை திறமையான குழந்தைகளும் ஒரே வகுப்பறையிலேயே கற்கின்றனர். ஐக்கிய அமெரிக்கா போன்று மீத் திறன் கூடியவர்களுக்கு தனிப்பாடசாலை, கற்றல் இடர்பாடு கொண்டோருக்கு தனிப் பாடசாலை என்ற பாடசாலை வேறுபாடுகளோ, வகுப்பறை வேறுபாடுகளோ அங்கு இல்லை. 13 வயதுக்குப் பின்னரே மாணவர்கள் தரம் பிரிக்கப்படுகின்றனர்.

**03. பாடசாலை செல்லும் வயது 7 ஆகும்.**

பின்லாந்தில் ஒரு பிள்ளை பாடசாலைக்குச் செல்லும் வயது 7 ஆக வரையறுக்கப்பட்டுள்ளது. ஒரு பிள்ளையின் முறைசார் கல்வி 7 வயதிலிருந்தே துவங்குகிறது. பாடசாலையில் சேர்வதற்கு முன்பாக நமது நாட்டில் இருப்பது போல முன்பள்ளி முறைமை அல்லது மொன்டசூரி முறைமை அந்நாட்டில் மொத்தமாகவே இல்லை. அதற்கான அரச அங்கீகாரமும் இல்லை.

7 வயதில் பாடசாலை சேரும் பிள்ளை முதல் 3 ஆண்டுகளும் சிறிது நேரமே நேரடியான கற்றலில் ஈடுபடும். ஏனைய நேரங்கள் விளையாட்டுக்கள், ஜிம் போன்றவற்றிலேயே கழிக்கும். 13 வயது வரை எந்தத் தேர்வையும் எதிர்கொள்ளாத பின்லாந்துப் பிள்ளைகள் உலகளவில் நடைபெறும் தேர்வுகளில் பங்குகொண்டு முதலாவது இடத்தைத் தக்கவைக்கின்றனர்.

**04. சிறப்பான பாடசாலை முறை**

பின்லாந்தில் ஒரு பாடசாலையில் கற்கும் மாணவர் தொகை 600 ஐ விடத் தாண்ட முடியாது. அதிகபட்சம் 600 பேரே ஒரு பாடசாலையில் கற்கலாம். வகுப்பறையொன்றில் அதிகபட்ச மாணவர் தொகை 26 ஆகும். ஆயினும், பெரும்பாலான பாடசாலைகளின் வகுப்பறைகளில் சாராசரி மாணவர் தொகை 20 ஆகும். நமது நாட்டில் முதற் தர பாடசாலை எனக் கருதப்படும் ரோயல் கல்லோரியில் சுமார் 8000 மாணவர்கள் பயில்கின்றனர் என்பதையும் வகுப்பறையில் சராசரி மாணவர் தொகை 40 என்பதையும் இதனுடனும் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

வகுப்பறையின் விஷேட அம்சங்களுள் இன்னொன்று வகுப்பறைக்குச் செல்லும் மாணவர்கள் பாதணிகள் அணிந்து வருவதில்லை. வெறுங் கால்களுடனே வருகின்றனர். தமது சொந்த வீட்டில் உற்றார் உறவினர்களோடு இருப்பது போன்ற உணர்வுடன் மாணவர்கள் இருக்க வேண்டும் என்பதற்காகவே இந்த ஏற்பாடு.

அதேபோன்று ஆசிரியர்கள் எவரும் பிரத்தியேக வீட்டுப் பாடம் (Home Work) தருவதில்லை. மாணவர் ஒருவர் வீட்டு வேலையாக எதைச் செய்கிறாரோ அதுவே வீட்டு வேலையாகக் கருதப்படும். ஒவ்வொரு குழந்தையினதும் மருத்துவ ஆலோசனைக்காகவும் ஆரோக்கியத்தைப் பேணவும் பாடசாலை தோறும் மருத்துவ ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**05. சிறப்பான ஆசிரியர் குழாம்.**

பின்லாந்தில் ஆசிரியர்களை நம்பி அரசாங்காம் பாதீட்டில் பெருந்தொகை நிதியை ஒதுக்குகின்றது. ஒரு ஆசிரியருக்கு சராசரி மாணவர்கள் 20. பாடசாலை நாளொன்றில் அரைப் பகுதியே அவர்கள் கற்பித்தலில் ஈடுபடுவார்கள். ஏனைய நேரம் அவர்கள் ஆசிரியர் பயிற்சிக்குச் செல்ல வேண்டும்.


பின்லாந்தில் ஆசிரியர் பணி மருத்துவர், சட்டத்தரணி ஆகிய பணிகளுக்குச் சமமானது. அதாவது தொழின்மை ரீதியில் கூடுதல் அந்தஸ்து கொண்டது. வைத்தியருக்கு நிகரான அதே அளவு ஊதியம் ஆசிரியருக்கும் வழங்கப்படுகின்றது. வரவு-செலவுத் திட்டம் தயாரிப்பில் ஆசிரியர்களும் பங்குகொள்ளும் ஒரே நாடு பின்லாந்து ஆகும்.

எனினும், அந்நாட்டில் ஆசிரியராவது இலகுவானதல்ல. ஆசிரியர்கள் பல்வேறு தேர்வுகளுக்கு முகம்கொடுப்பதோடு, கற்பித்தல் பயிற்சிக்கு வெளியில் தலைமைத்துவ, இராணுவ பயிற்சிகளையும் பெற வேண்டும். 6 மாத இராணுவப் பயிற்சி, ஒரு வருட வகுப்பறை திறனாக்கற் பயிற்சி, ஏதேனும் ஒரு பாடத்தில் செயல்திட்டம், குழந்தை உரிமைகள் பயிலரங்கம், நாட்டின் சட்ட திட்டங்கள் குறித்து தேசிய நிறுவனங்களிடமிருந்து பங்கேற்புச் சான்றிதழ், தீயணைப்பு தற்காப்புப் பயிற்சி, முதலுதவி மருத்துவத் துறைச்சான்று என எக்கச் சக்கமான பயிற்சிகளையும் சான்றிதழ்களையும் அவர் பெற வேண்டும்.

வகுப்பறைகளில் கற்கும் 3 மாணவர்களில் ஒருவர் ஆசிரியராவதை தன் வாழ்வில் இலட்சியமாக் கொண்டுள்ளார் என்பது கருத்துக் கணிப்பீட்டில் மூலம் தெரிய வந்தது. தேசிய ரீதியான பயிற்சியை முடித்துக் கொண்டு ஐந்து வருட வதிவிட பயிற்சியையும் நிறைவு செய்பவரே ஆசிரியராகலாம்.

எவ்வாறாயினும், சமீபகாலமாக இப்பள்ளி முறையில் மாற்றம் வேண்டும் என்று பின்லாந்து மக்கள் கோரி வருகின்றனர். வீட்டுப் பாடம், தேர்வு முறை என்பவற்றில் மாற்றங்கள் வேண்டும் என்று கோரி வருகின்றனர். ஆனால், கியூபா, சுவீடன் போன்ற நாடுகள் பின்லாந்தின் கல்வி முறையைத் தழுவி வெற்றியடைந்து வருவதாகக் கூறப்படுகின்றது.

---




உளநலம் என்பதன் வரையறைகள் குறித்து முன்னைய பத்தியில் நோக்கினோம். அது தொடர்பான சில வரைவிலக்கணங்களை இங்கு விரிவாக நோக்குவோம். அதன் மூலம் உளநலம் என்பதன் விரிவான அர்த்தங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம்.

உளநலம் அல்லது மனநலம் என்பது உளவியல் நன்னிலையின் ஒரு மட்டமாகும். அதாவது உளநோய் அற்ற நிலை என வேறு வகையில் குறிப்பிடலாம். நடத்தை மற்றும் மனவெழுச்சி சீராக்கத்தின் திருப்திகரமான உளநிலையே இது. அதாவது, மனநலம் கொண்டவர், நன்னடத்தை உள்ளவராகவும் மன எழுச்சி சமநிலை உள்ளவராகவும் விளங்குவார். (Psychological state of some one who is functioning at a satisfactory level of emotional and behaviour adjustment.)

நேர்க்கணிய உளவியலின்படி பின்வருவனவற்றை உளநலம் உள்ளடக்கியுள்ளது. வாழ்வதற்கான தனிநபர் ஆற்றல், வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு மத்தியில் சமாளிக்கும் திறன், உள அமைதியை ஈட்டுவதற்கான முயற்சிகள், மன அழுத்தம் மற்றும் மனச்சோர்வை முகாமை செய்யும் திறன் என்பன உளநலத்தில் அடங்குகின்றன.

பன்னாட்டு சுகாதார அமையம் மனநலத்தை ஓர் உள்ளார்ந்த நன்னிலை என்கிறது. சுயாட்சி, சிந்திக்கும் திறன், ஏனையோர் மத்தியில் மனஎழுச்சிகளை முகாமை செய்தல், தன்னைப் பற்றிய சுய அறிவு, தனது உள்ளார்ந்த ஆற்றல்கள், திறமைகளைப் புரிந்துகொள்ளல் என்பன உளநலத்தின் பாற்பட்டவை என அந்நிறுவனம் கூறுகின்றது.

தனது சுய ஆற்றல்களைப் புரிந்துகொள்வதும் வாழ்வு எதிர்கொள்ளும் அழுத்தங்களை சமாளிக்கத் தெரிவதுமே உண்மையான உளநலம் கொண்டோரின் பண்பாகும். அத்தகையோர் செயற்திறன் மிக்க தொழில்பாடுகளில் ஈடுபடுவதோடு, சமூகத்துக்குப் பங்களிப்புச் செய்யக் கூடியவராகவும் விளங்குவார் என பன்னாட்டு சுகாதார அமையம் தனது வுரைவிலக்கணத்தில் விளக்கியுள்ளது.

உலகப் புகழ்பெற்ற உளவியலாளர் சிக்மன் ஃப்ரொய், ''செயல்படுவதற்கும் அன்பு காட்டுவதற்கும் உள்ள ஆற்றலே உளநலம்'' (Capacity to work and to love) என்கிறார்.

மேலே சொன்ன வரைவிலக்கணங்களின் படி ஒருவரது உளச் செயற்பாட்டின் வெற்றிகரமான விளைவே மனநலம் ஆகும். ஏனைய மனிதர்களுடன் ஆரோக்கியமான உறவுகளைப் பேணி, பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு, சிறந்த தொடர்பாடல்களைப் பேணி, தன்னம்பிக் கையுடன் ஒருவர் செயலாற்றுவது உளநலத்தின் குறிகாட்டிகளாகும்.

சிந்தனை (Thought), புலக்காட்சி (Perception), மனொநிலை (Mood), நடத்தை (Behaviour) ஆகிய நான்கும் சீராக இருப்பது மனநலம் எனளாம். இவற்றில் ஏதேனும் அழுத்தம் ஏற்பட்டு சீர்குலையும் போது அதனை அசாதாரண நிலை என்கின்றோம்.

இவ் அசாதாரண நிலை உளநலத்திற்கு எதிரானதாகும். மனஅழுத்தம், தனிமை, மனச் சோர்வு, பதகளிப்பு, தொடர்பாடல் பிரச்சினை, மிக அன்புக்குரியவரின் இழப்பு, தற்கொலைச் சிந்தனை, கழிவிரக்கம், ஏதேனும் ஒன்றுக்கு அடிமைப்படல், அசாதாரண நினைவிழப்பு என்பன உள நோய்கள் ஏற்படுவதற்கான ஆரம்ப நிலைகளாகும். உள நோய்களிலிருந்து விடுபடுவதே உள ஆரோக்கியம் என்பதை முன்னர் விளக்கினோம்.

ஹார்ட் பீல்ட் என்பவர் முழுமையான இசைந்த செயற்பாடுகளின் முழுத் தொகுப்பே உளநலம் என்கிறார். மோர்கன், கிங் ஆகிய உளவியலாளர்கள் ஒருவர் நடத்தைப் பிறழ்ச்சிகள் (Behaviour Disorder) எதுவுமின்றி பிறரோடு இணைந்து போகும் தன்னடக்கமே மனநலம் என்கிறார்.

நல்ல உளஆரோக்கியம் உள்ள ஒருவர் வாழ்க்கையை முழுமையாகவும் மகிழ்ச்சியாகவும் அமைதியானதாகவும் பயனுள்ளதாகவும் அமைத்துக் கொண்டு வாழ முடியும். எனினும், இன்றைய சமூக, கலாசார மாற்றத்தின் வேகத்தோடு மனிதர்கள் இசைந்து போவது பெரும் சவாலாக உள்ளது. வாழ்க்கை மிகுந்த போட்டித் தன்மையுள்ளதாக மாறியுள்ளதோடு, பெரும்பாலான மனிதர்கள் தமது மன நிம்மதியையும் அமைதியையும் இழந்து தவிக்கின்றனர். வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றமே இதற்கான காரணமாகும்.

ஒவ்வொருவரும் தமது சொந்தப் பெறுமானங்களை விலக்கி வைத்து விட்டு பிறரது பெறுமானங்களுக்கு ஏற்ப வாழ முற்படுகின்றனர். இதனால் மனஅழுத்தமும் இறுக்கமும் ஏற்பட்டு பெரும்பாலான மனிதர்களின் உளநலம் குலைகின்றது. இதனால் இன்று உளவள ஆலோசனை எனும் ஒரு உளவியல் கலை குறித்து விரிவாக விவாதிக்கப்படுகின்றது.

உள மருத்துவத்துறை (Psychiatry) இன்று பாரிய வளர்ச்சி கண்டுள்ளது. உடல் நோய்களுக்கான மருந்து கண்டுபிடிப்பை விட உள நோய்களுக்கான மருத்துவ ஆராய்ச்சிகளில் ஏற்பட்ட முன்னேற்றம் மனித குலத்தையே வியக்க வைக்கின்றது. மகிழ்ச்சியாக இருப்பதற்கு மாத்திரைகள் வந்துள்ளன: அசாதாரண தைரியத்தோடும் துணிச்சலோடும் இருப்பதற்கு இன்று பாமசிகளில் மருந்துகள் கிடைக்கின்றன. இவ்வளவு தூரம் உள மருத்துவத் துறையில் மருத்துவ ஆராய்ச்சிகளும் மருந்துக் கண்டுபிடிப்புகளும் முன்னேற்றமடைந்துள்ளன.

மனநலத்துடன் வாழ்வதற்கு ஒருவருக்கு உதவும் அறிவியல் மனநனவியல் என்ற தனித் துறையாக வளர்ந்துள்ளது. உள்ளத்திற்கு ஏற்படக் கூடிய நோய்களை, அதாவது உளப் பாதிப்புக்களைத் தடுக்கவும், அவற்றிலிருந்து ஒருவரை விடுவிக்கவும் உளநலவியல் வகை செய்கின்றது. அமெரிக்க உள மருத்துவக் கழகம் உளநலக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கையை தகுந்த முன்தலையீட்டின் மூலமும் பாதிக்கப்பட்ட உடனேயே ஆரம்ப சிகிச்சையின் மூலமும் குணப்படுத்தி, அவர்களை உளநலமுள்ளவர்களாக மாற்ற முடியும் என்கிறது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம்கள்... (03 ஆம் பக்கத் தொடர்)

மெதகொட அபயதிஸ்ஸ ஹிமி, அக்மீமன தயாரதன ஹிமி, டான் பிரியசாத், ஜனித நிரோஷன எனப் பலரை இந்த வீடியோக்களில் அடையாளம் காண முடிந்தாலும், இதுவரை 06 பேர் மாத்திரமே கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சம்பவத்தில் ஈடுபட்ட ஸ்ரீ ஜயவர்தனபுர பல் கலைக்கழகத்தின் பேராசிரியர் மெதகொட அபயதிஸ்ஸ ஹிமிக்கு இவர்கள் ஐ.நா.வின் பாதுகாப்பிலுள்ள அகதிகள் என்பதை தெரியாமலிருக்க நியாயம் இல்லை.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசகர்களில் ஒருவரான இவர் இதுவரை கைதுசெய்யப்படவில்லை. இவருடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கெஸ்பேவ பிரதேச சாசன பாதுகாப்பு சபையின் பதிவாளரான கொம்பத்தல தமித ஹிமி உள்ளிட்ட இன்னும் பலரும் இன்றுவரை சுதந்திரமாக நடமாட விடப்பட்டுள்ளனர்.

ரோஹிங்ய அகதிகள் தாக்குதலின் முக்கிய சூத்திரதாரி டான் பிரியசாத், ஏற்கனவே இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டதற்காக, இனிமேல் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டால் கைதுசெய்யப்படுவர் என்ற நீதிமன்ற எச்சரிக்கையின் பேரில் பிணையில் விடுவிக்கப்பட்டவர். பீ 3720 என்ற இலக்க வழக்கில் 2016 நவம்பர் 07 ஆம் திகதி அவர் இந்த நிபந்தனையுடன் பிணையில் விடுவிக்கப்பட்டாலும் கல்கிஸ்ஸ சம்பவத்துக்கு முன்னரும் பிணை நிபந்தனையை மீறும் வகையில் அவர் செயற்பட்ட பல சம்பவங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அரசாங்கம் நினைத்திருந்தால் இவற்றுக்கெதிராக அவர் மீது நடவடிக்கை எடுத்து, இந்தச் சம்பவம் நிகழாமல் பாதுகாத்திருக்க முடியும். நீதிமன்ற எச்சரிக்கையை மீறி இவர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதற்கான தெளிவான சாட்சிகள் இருந்தும் அரசாங்கம் இவரைக் கைதுசெய்யாமல் ஒதுங்கியது. சம்பவம் நடந்து நான்கு நாட்களின் பின்னரே அவர் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டமை, அரசாங்கம் இதனை ஒரு பார தூரமான குற்றமாகக் கருதவில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஆகஸ்ட் 09 ஆம் திகதி முஸ்லிம் வீடொன்றுக்குள் பலாத்காரமாக நுழைந்து அட்டகாசம் செய்த குற்றத்தினூடாகவும் டான் பிரியசாத் நீதிமன்ற உத்தரவை மீறியிருந்தார். அதன் பின்னர் இந்த முஸ்லிம் குடும்பத்தினர் நீதிமன்றத்துக்கு வந்தபோது, குறித்த பெண்ணின் மைத்துனரை மரக்கல உங்களை நஞ்சூட்டி கழுத்தை வெட்டித்தான் கொல்வேன் என்று மிரட்டிய சம்பவமும் அவருடைய பீ 3720 வழக்கின்போது அவருக்கு வழங்கப்பட்ட நீதிமன்ற உத்தரவை மீறுவதாகவே அமைந்திருந்தது.

ஆகஸ்ட் 12 ஆம் திகதி பள்ளிவாசலொன்றுக்கு எதிராக கருத்துத் தெரிவித்த போது, இந்த பௌத்த நாட்டில் பிரித்தைத் தவிர வேறு எதுவும் கேட்கக் கூடாது என்று குமுறியது தொடர்பில் ஆகஸ்ட் 14 ஆம் திகதி முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த முறைப்பாடுகள் அனைத்திலும் பீ 3720 வழக்கின் நீதிமன்றத்தின் பிணை நிபந்தனைகள் குறிப்பிடப்பட்டிருந்தன.

ரோஹிங்யர்களுக்கு இழைக்கும் கொடுமைகளுக்காக மியன்மார் அரசை வாழ்த்தி அவருடைய முகநூலில் செப்டம்பர் 09 ஆம் திகதி பதிவிடப்பட்டிருந்தது. செப்டம்பர் 17 ஆம் திகதி மியன்மார் அரசுக்கு ஆதரவாக லிப்டன் சுற்றுவட்டத்தில் இவரினால் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தின் போது பஸ் பிரயாணிகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டன. இத்தனைக்கும் பிறகு இது போன்ற நடவடிக்கைகளை தான் தொடரப் போவதாகவும் அவரால் முகநூலில் பதிவிடப்பட்டும் இருந்தது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் எல்லாம் பிணை நிபந்தனைகளுக்கமைய செயற்படுமாறு நீதிமன்றம் பல தடவைகள் உபதேசித்த போதும் இதனைக் கண்டு கொள்ளாமல் பொலிஸார் பிரியசாதுக்கு விசேட அனுசரணை வழங்கி வந்ததன் தொடர்ச்சியாகவே கல்கிஸ்ஸ தாக்குதல் நடந்தது.

ரோஹிங்ய அகதிகளின் கல்கிஸ்ஸ வீட்டுத் தாக்குதலுக்கு காரணமாக இருந்த கற்பழிப்புச் சம்பவத்திலும் பொலிசாரின் நடவடிக்கைகள் நம்பகரமானதாக இருக்கவில்லை. மிரிஹான முகாமிலிருந்து களுபோவில வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த இந்த 20 வயது ரோஹிங்யப் பெண்மணி, 03 நாள் சிகிச்சை முடிந்த பின்னர் மீண்டும் முகாமுக்குத் திரும்புவதற்காக முகாமைத் தொடர்பு கொண்டபோது குறித்த பொலிஸ் அதிகாரி இவரை அழைத்துச் செல்ல தனியாகவே வந்திருக்கிறார். இவருடன் அனுப்புவதை வைத்தியசாலையில் இருந்தவர்களோ குறித்த பெண்மணியோ விரும்பாமையினால் குறித்த பெண், முகாமிலுள்ள பெண் அதிகாரி ஒருவரிடம் நிலைமையை விபரித்த பொழுது, பரவாயில்லை, அந்த அதிகாரியுடனேயே செல்லுங்கள் என அங்கிருந்த பெண் அதிகாரி சொல்லியிருக்கிறார்.

தனியாக வந்த இந்தப் பெண்மணியை ஹோட்டல் போன்றதொரு இடத்துக்கு அழைத்துச் சென்று, மதுபானம் அருந்தச் சொல்லி வற்புறுத்தியிருக்கிறார். ஹோட்டல் அறையில் இன்னும் இருவர் இருந்ததாகவும் அந்தப் பெண்மணியின் வாக்குமூலம் தெரிவிக்கிறது. அறையில் அவர் நான்கு தடவைகளுக்கு மேல் கற்பழிக்கப்பட்டதாகவும், இடையில் இயற்கைக் கடனை நிறைவேற்றுவதற்குக் கூட அவகாசம் வழங்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

மனித உரிமைகள் மற்றும் ஆய்வுக்கான நிலையத்தின் (CHR) நிறைவேற்றுப் பணிப்பாளர் ராஜித் கீர்த்தி தென்னகோன் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தச் சம்பவத்தில் தொடர்புபட்ட பொலிஸ் அதிகாரியின் உறவினர்களும் ஆதரவாளர்களும் கல்கிஸ்ஸ தாக்குதல் சம்பவத்தின் போது உடனிருந்தார்கள் என்று தெரிவித்துள்ளார். இப்படி இந்தச் சம்பவத்தில் பலர் சம்பந்தப்பட்ட போதும் குறித்த பொலிஸ் அதிகாரியைத் தவிர இவர்களில் எவரையும் பொலிஸார் கைதுசெய்யவில்லை.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது ஸ்தலத்துக்கு வந்த பொலிஸார் அன்றுதான் அங்கு அகதிகள் குடியிருப்பதைக் கண்டது போல நடந்து கொண்டுள்ளனர். மிரிஹான முகாமில் இந்த அகதிகளுக்குப் பாதுகாப்பில்லை என்று தான் இவர்கள் கல்கிஸ்ஸைக்கு மாற்றப்பட்டனர். கல்கிஸ்ஸையில் பாதுகாப்பு இல்லை என்று சிறைக் கைதிகள் வசிக்கும் பூசா முகாமுக்கு மாற்றப்பட்டனர். இந்த பூசா முகாமில் இந்த அகதிகள் படுகின்ற கஷ்டங்களை அல் ஜஸீரா போன்ற சர்வதேச ஊடகங்களும் படம் பிடித்துக் காட்டியுள்ளன.

இந்த இடத்துக்கு இவர்கள் மாற்றப்படுவதற்குக் காரணம் இனவாதிகளின் அழுத்தம் தான், அதாவது இனவாதிகளின் அழுத்தத்துக்கு முன்னால் அவர்களுக்கு அடிபணிவதே அன்றி அரசாங்கம் நீதி நியாயங்களை எல்லாம் நிலைநாட்டப் போவதில்லை என்பதனையே இந்தச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

முஸ்லிம்கள் தொடர்பான இலங்கை அரசாங்கத்தின் அண்மைக் கால செல்நெறிகள் இதனை நோக்கியே பயணிக்கின்றன என்பதனை, இந்த நிகழ்வுகளுக்கு முன்னால் ஆங்சாங் சூகி போல மௌனம் காக்கின்ற நல்லாட்சித் தலைமைகள் சொல்லாமல் சொல்லுகின்றன. இந்த நிலையில் நாட்டு மக்களையும், குறிப்பாக முஸ்லிம் சமூகத்தையும் இந்த விடயங்களில் அறிவூட்டிச் செயற்பட வைப்பது தான் பூகம்பத்தை எதிர்கொள்வதற்கான சிறந்த உத்தியாகவிருக்கும்.

## மீண்டுமொரு... (06 ஆம் பக்கத் தொடர்)

வீழ்ச்சியடைவதற்கு இது காரணமாக இருந்திருக்க முடியும். வர்த்தகப் போட்டியில் ஈடுபடுபவர்கள் வேறு எதைப் பற்றியும் சிந்திப்பதில்லை என்பதை இதனூடாகப் புரிந்துகொள்ள முடியும்.

ரல்ப் பீரிஸின் கருத்தின்படி, சிங்களவர்கள் வர்த்தகத்தை அலட்சியப்படுத்திய ஓர் இனம். வியாபாரத்தை மட்டுமன்றி உற்பத்தி, உற்பத்தியாளர்களையும் இவர்கள் அலட்சியம் செய்தார்கள். இதனால் அனுராதபுர யுகத்தில் இருந்து போர்த்துக்கேயர் காலம் வரை உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகம் முஸ்லிம்களின் ஏகபோக உரிமையாகவிருந்தது. முஸ்லிம்கள் வர்த்தக சமூகமாகவே அறியப்பட்டார்கள். போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் வர்த்தகத்தில் காட்டிய ஆர்வம் காரணமாக அவர்கள் முஸ்லிம்களை அழித்தொழிக்கும் வேலையில் இறங்கினார்கள். சிலபோது முஸ்லிம்கள் மலையக இராஜ்ஜியத்துக்கு இடம் பெயர வேண்டியும் வந்தது.

பின்னர் ஆங்கிலேயருடைய காலத்தில்தான் முஸ்லிம்கள் சுமுகமாக தமது வியாபாரத்தில் ஈடுபட முடிந்தது. இந்தக் காலப்பிரிவில் தான் சிங்களவர்களும் முதற் தடவையாக வியாபாரத்தில் நுழைந்தார்கள். அவர்கள் வியாபாரத்தில் கைதேர்ந்தவர்களாக இல்லாததனாலும், முஸ்லிம்கள் ஆயிரம் வருடங்களுக்கு மேலாக வியாபாரம் செய்து பழகியவர்கள் என்பதனாலும், வியாபாரத் துறையில் சிங்களவர்கள் பின் தங்கி முஸ்லிம்கள் முன்னேறினார்கள்.

குமாரி ஜயவர்தன எழுதியிருப்பதன்படி, 1863 இல் கொழும்பில் உள்நாட்டு வர்த்தகர்களாக முஸ்லிம்கள் மட்டுமே இருந்திருக்கிறார்கள். ஐரோப்பியரல்லாத வெளிநாட்டவர்களில் இந்தியாவில் இருந்து வந்த செட்டியார்களுக்கு நல்ல இடம் கிடைத்திருக்கிறது. 1880 ஆகும் போது கொழும்பில் ஐரோப்பியரல்லாத சில்லறை வர்த்தகர்களின் ஆதிக்கம் 86 செட்டியார்களின் கையிலும், 64 முஸ்லிம் வியாபாரிகளின் கையிலும் இருந்திருக்கிறது.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் சர்வதேச ஏற்றுமதி வியாபாரத்தில் பெரும் பங்கினை போரா, மேமன், பாரசீக சமூகத்தினர் வகித்தார்கள். புதிதாக வர்த்தகத்தில் இணைந்து கொண்ட சிங்களவர்களின் பிரபல்யமான வியாபாரமாக சாராய விற்பனை இருந்தது. சாராய விற்பனை சிங்கள வியாபாரிகளின் ஏகபோக வர்த்தகமாக இருந்தது. மதக் காரணங்களுக்காக முஸ்லிம்கள் இந்த வியாபாரத்தில் தலையிடாமல் இருந்தது இதற்குக் காரணமாக அமைந்தது.

இலங்கை நவீனத்துக்குள் நுழையும் போது அதன் முதற் கட்டத்தைக் கட்டியெழுப்பிய சிங்களத் தலைவர்களில் பெரும்பாலானவர்கள் சாராய விற்பனையால் செல்வந்தரானவர்களாகவே இருந்தார்கள். சாராய விற்பனை நல்ல இலாபம் தரும் வியாபாரமாக இருந்தாலும் கூட நல்ல வியாபார அறிவைத் தரக் கூடியதல்ல.

20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தத்தில் முஸ்லிம்கள் பெற்றிருந்த வர்த்தக அடைவுகள் சிங்களவர் மத்தியில் பொறாமையை ஏற்படுத்தியது. நிகழ் காலத்தில் போலவே, முஸ்லிம்களின் வர்த்தகத்தை அழிப்பதற்காக சிங்களவர்களுக்கு மத்தியில் முஸ்லிம் விரோத மனப்பான்மையை சிங்கள வர்த்தகர்கள் அப்போது வளர்த்தார்கள். வர்த்தகத்தில் முஸ்லிம்கள் பெற்றிருந்த சாதகமான நிலையை சிங்கள வர்த்தகர்கள் மட்டுமன்றி பௌத்த மறுமலர்ச்சியின் நாயகர்களும் சிங்கள பௌத்தர்களின் உரிமையை வேற்று இனத்தவர் பறித்தெடுத்ததாகவே காட்ட முனைந்தனர். அந்த நேரத்தில் சில சிங்களத் தீவிரவாதிகளுக்கு முஸ்லிம் விரோத பிரச்சார வேலைத் திட்டமொன்று இருந்தது. இதன் முன்னணித் தலைவராக அநகாரிக தர்மபால செயற்பட்டார்.

''பிரித்தானியர்களுக்கு ஜேர்மனியர்களைப் போலவே சிங்களவர்களுக்கு முஹம்மதியர்கள். அவர்கள் மதத்தினாலும், இனத்தினாலும், மொழியினாலும் பரதேசிகளே'' என்ற முஸ்லிம்கள் தொடர்பான அவரது கூற்று முக்கியமானது. குமாரி ஜயவர்தன குறிப்பிடுவது போன்று, அக்காலத்தில் முஸ்லிம்களுக்கு எதிராக வளர்ந்து வந்த வைராக்கியம், மதவாத இனவாத எழுச்சியின் விளைவாகும். பௌத்த எழுச்சியாலும், சிங்களப் பத்திரிகைகளாலும், அநகாரிக தர்மபாலவின் போதனைகளாலும் முஸ்லிம் எதிர்ப்பு விழிப்புணர்வுகள் உரமூட்டப்பட்டன.

குமாரி ஜயவர்தன மேலும் சுட்டிக் காட்டுவதன்படி, சிங்கள இனத்தினதும் பௌத்தத்தினதும் பின்னடைவுக்கு ஆங்கிலேயர்கள் மட்டுமன்றி, இலங்கையின் சிறுபான்மைச் சமூகங்களும் குற்றஞ் சாட்டப்படுகின்றன. தர்மபால மேலும் கூறுவதாவது, ''வெளிநாட்டு வெள்ளையன் இந்த நாட்டில் காலடி வைத்தது முதல் சிங்களவரின் கைத்தொழில், பண்பாடு, பழக்க வழக்கங்கள் யாவும் வீழ்ச்சியடையத் தொடங்கியது. இனி சிங்களவர் மரக்கலயாவினதும் தமிழனதும் காலில் விழ வேண்டியதுதான்.''

தர்மபாலவின் முன்னணி ஆதரவாளரும், சிங்ஹல ஜாதிய பத்திரிகையின் ஆசிரியருமான பியதாச சிரிசேன, மரக்கலயாவுடனும், கொச்சின் மற்றும் வெளிநாட்டவருடனும் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதில் இருந்து சிங்களவர் தவிர்ந்து கொள்ள வேண்டும் என எழுதியிருந்தார்.

இவ்வாறான முஸ்லிம் விரோத செயற்பாடுகளின் வெடிப்பாகத்தான் 1915 சிங்கள முஸ்லிம் கலவரம் நடந்து முடிந்தது. நவீன உலகில் இலங்கை பிரவேசித்ததன் பின்னரான முதல் இனக் கலவரமாக அது அமைந்தது. அதனுடைய சேத விபரங்களில் உத்தியோக பூர்வமான தகவல்களின் படி, 86 பள்ளிவாசல்கள் தாக்குதலுக்குள்ளாகின, 17 பள்ளிவாசல்கள் முற்றாக எரிக்கப்பட்டன, 4075 முஸ்லிம் கட்டடங்கள் கொள்ளையிடப்பட்டன, 35 முஸ்லிம்கள் கொல்லப்பட்டார்கள், 189 பேர் காயமடைந்தனர், 4 பெண்கள் கற்பழிக்கப்பட்டனர். மீண்டும் இந்த 1915 கலவரங்களை நோக்கி நாடு செல்கிறதா?

1983 கறுப்பு ஜூலையும் மக்களது மனங்களில் இருந்து மறைந்து வருவது போலத் தெரிகிறது. இந்தக் கலவரமும் 1950 இலிருந்து முன்னேறி வந்த தமிழ்ச் சமூகத்தின் வளர்ச்சிக்கு எதிராக முடுக்கி விடப்பட்ட வெறுப்புணர்வுகளின் விளைவாகவே வெடித்தது. கடைசித் தமிழனின் தோலை உரித்து செருப்பு மாட்டும் வரைக்கும் தனக்குத் தூக்கம் வராது என 56 பண்டாரநாயக்க அரசாங்கத்தின் பிரதி அமைச்சர் கே.எம்.பி. ரத்நாயக்க சூளுரைத்தார். பின்னாட்களில் இந்த தமிழர் விரோத செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்பவராக சிறில் மத்திவ் விளங்கினார்.

இனங்களுக்கிடையில் ஒப்பிட்டுப் பார்க்கையில், ஆங்கிலேயரின் திறந்த பொருளாதாரக் கொள்கையினால் அதிக பயன் பெற்றது சிங்களவர்கள்தான். ஆங்கிலேயரின் பெருந்தோட்டப் பயிரை அண்டிய வர்த்தகம் சோபித்தது தமிழர்கள் வாழ்ந்த வடக்கு கிழக்கில் அல்ல. இந்த வகையில் தமிழர்கள் தமது முன்னேற்றத்துக்கான வழியாக கல்வியைத் தேர்ந்தெடுத்தார்கள். இதனால் கல்வியில் தமிழர் சிங்களவரை விட முன்னிலையில் இருந்தார்கள். அரச சேவைகளின் உயர்பதவிகளில் தமிழரின் பங்களிப்பு அதிகமாகவிருந்தது. இதுவே சிங்களவரின் பொறாமைக்கும் எதிர்ப்புக்கும் காரணமாக அமைந்தது.

இந்த மனப்பதிவுகள்தான் தமிழருக்கு எதிராக சில சிங்களவர்களால் முன்னெடுக்கப்பட்ட தமிழர் விரோதச் செயற்பாடுகளுக்கு சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொடுத்தது. இந்த வகையில் நீண்ட காலமாக சிங்கள மக்கள் மத்தியில் விதைக்கப்பட்ட தமிழர் எதிர்ப்புணர்வுதான் 83 கலவரத்தை வெடிக்கச் செய்தது. தமிழர்கள் மிகவும் குரூரத் தாக்குதலுக்கு உள்ளானார்கள். இதன்போது மதிப்பிடப்பட்ட சேதவிபரம் உத்தியோகபூர்வத் தகவல்களை விட அதிகமானாலும், உத்தியோகபூர்வத் தகவல்களின்படி 471 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர், 3769 பேர் காயமடைந்துள்ளனர், 8017 தீவைப்புச் சம்பவங்களும், 3835 கொள்ளையடிப்புக்களும் பதிவாகியுள்ளன.

முதலாவது கட்டமாக முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பும் வைராக்கியமும் விதைக்கப்பட்டது. பின்னர் தனிநபர் மீதும் உடைமைகள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டன. அடுத்த கட்டமாக முஸ்லிம்களை விட்டு தமிழருக்கு எதிராக வெறுப்பும் குரோதமும் வளர்க்கப்பட்டன. தொடர்ந்து மூன்று தடவைகள் சிங்கள-தமிழர் குழப்பம் விளைந்தது. இதன் பாரிய வடிவம் 83 ஜூலையில் நடந்தேறியது. அந்த வன்முறையில் கடூரமான மூர்க்கத்தனம் வெளிப்படுத்தப்பட்டது. அதுவரையில் தமிழர்கள் சகித்துக் கொண்டார்களேயன்றி எதிர்த் தாக்குதல் நடத்தும் நிலைக்குச் செல்லவில்லை.

83 கலவரத்துக்குப் பின்னர் அவர்கள் திருப்பித் தாக்கவும் யுத்தம் செய்யவும் தலைப்பட்டார்கள். நீண்ட கால உள்நாட்டு யுத்தம் இதனாலேயே ஆரம்பித்தது. மூர்க்கமான குழுக்களுக்கிடையில் நடந்த கொடூரமான யுத்தமாக அது அமைந்தது. இறுதியில் வெறித்தனமாக ஒரு குழு தோற்கடிக்கப்பட்டது.

இந்த யுத்தம் நாட்டுக்கு ஏற்படுத்திய பாதிப்பு கொஞ்ச நஞ்சமல்ல. இதனால் கொல்லப்பட்டவர்கள் ஏராளம். அதனை விட காயமடைந்தவர்கள் ஏராளம். இழக்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பு 1000 க்கு மேற்பட்ட பில்லியன்களைத் தாண்டியிருக்கலாம்.

இந்த துரதிர்ஷ்டவசமான நிகழ்வுகளில் இருந்து இலங்கை பாடம் எதுவும் கற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. தமிழருக்கு பாடம் புகட்டியது போல முஸ்லிம்களுக்கும் பாடம் புகட்ட வேண்டிய தருணம் வந்துவிட்டதாகவே சில தீவிரவாதிகள் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் நினைப்பது போல நடந்துவிட்டால் இலங்கை நரகமாக மாறுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

குழியில் விழுந்தாலும் மூளைக்கு நன்மைதான் என மாஓசேதுங் கூறியிருக்கிறார். மூளையே இல்லாதவர்கள் குழியில் விழுந்தால் எந்த நன்மையும் விளையப் போவதில்லை. இலங்கைக்கு இது தானே நடந்திருக்கிறது?

இதுவரை இலங்கையில் நடந்த வன்முறைகளுக்கு இன, குல, மத பேதங்களே காரணமாக அமைந்திருக்கின்றன. நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான தேசிய உணர்வைக் கட்டியெழுப்புவதில் இன்றுவரை விட்ட தவறுதான் இந்தப் பேதங்கள் இன்றும் தலைதூக்குவதற்குக் காரணமாக உள்ளன. இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்ய முடியாவிட்டால் இரத்தம் சிந்துதலும் வன்முறையும் மேலும் அதிகரிக்கவே செய்யும். அதுவரை நாடு பண்பாடற்றதாகவே இருக்கப் போகிறது.

அரசியலமைப்பினால் நவீன தேசியமொன்றைக் கட்டியெழுப்ப முடியாது. கொள்கைப் புரட்சியினால் கட்டியெழுப்பப்படும் தேசத்துக்கு சட்ட ரீதியான அடிப்படையொன்றை வழங்குவதற்குத் தான் அரசியலமைப்பினால் முடியும்.

இலங்கை அராஜகத்தை நோக்கியே பயணித்துக் கொண்டிருக்கிறது. உள்நாட்டு யுத்தம் ஓய்ந்து 8 வருடங்களுக்குள்ளேயே இனங்களுக்கிடையிலான உறவு முறுகலடைந்திருக்கிறது. மொத்த சமூகமும் நோய்வாய்ப்பட்டிருக்கிறது. அரசும் அதன் நிறுவனங்களும் ஊழல் மோசடி நிறைந்த கையாலாகாத நிலைக்கு மாறியிருக்கிறது. நோய்வாய்ப்பட்டிருக்கின்ற சமூகத்தை குணப்படுத்தி, கையறு நிலையிலுள்ள அரச இயந்திரத்தை செயற்பட வைத்து, நாட்டைக் கட்டியெழுப்புவதனூடாகத்தான் இந்த அவலட்சணமான, துரதிர்ஷ்ட நிலையிலிருந்து நாம் மீள முடியும். மறுமலர்ச்சி இயக்கம் அதற்கெனத் தான் தோற்றுவிக்கப்பட்டது.

இன, குல, மத பேதங்களுக்கும், பிற்போக்கான சிந்தனைகளுக்கும் எதிராக அறிவுபூர்வமான புரட்சியொன்றின் மூலமே இலங்கைச் சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியும். இந்த சிந்தனைப் புரட்சியையே மறுமலர்ச்சி இயக்கம் தற்போது முன்னெடுத்துச் செல்கிறது.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0772 581 661 People's Bank A/c 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுத் தகவல்கள்

1. பூச்சி இனங்களில் அறிவு மிக்கது எறும்பு.
2. உலகில் அதிக அளவில் கப்பல் போக்குவரத்து நடைபெறும் இடம் பனாமா கால்வாய்.
3. விஞ்ஞானி ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் பிறந்த நாடு ஜெர்மனி.
4. திரவத் தங்கம் என்றழைக்கப்படுவது 'பெற்றோலியம்.'
5. தபால் தலையை (ஸ்டாம்ப்) வட்ட வடிவமாக வெளியிட்ட நாடு மலேசியா.
6. உடலில் இரத்தம் பாயாத பகுதி கருவிழி.
7. உலகின் மிகப்பெரிய பூங்கா கனடாவில் உள்ள 'உட் பபெல்லோ நேஷனல் பார்க்.'
8. உலகின் மிகப்பெரிய உயிரியல் பூங்கா அமெரிக்காவில் உள்ள 'டொராண்டோ உயிரியல் பூங்கா'.
9. ஆண்டுக்கு 365 நாட்கள் என்ற காலண்டர் முறையை முதலில் பயன்படுத்தியவர்கள் எகிப்தியர்.
10. பயங்கரவாத எதிர்ப்புத் தினமாக அனுசரிக்கப்படும் நாள் - மே 21.
11. நோபல் பரிசை ஏற்படுத்தியவர் ஆல்பிரட் நோபல்.
12. திராட்சை மலரை தேசிய மலராகக் கொண்டுள்ள நாடு சீனா.
13. ஒரு எரிபொருள் எரியத் தேவைப்படும் குறைந்தபட்ச வெப்பநிலையே - எரிவெப்பநிலை
14. எரிசோடா எனப்படுவது - சோடியம் ஹைட்ராக்சைடு
15. ரொக்கெட் எரிபொருளாகப் பயன்படுவது - நீர்ம ஹைட்ரஜன்

# நல்ல வழியில் சம்பாதியுங்கள்; நல்ல வழியில் செலவழியுங்கள்!



ஒவ்வொரு மனிதனும் மரணத்திற்குப் பிறகு அல்லாஹ்வின் முன்னிலையில் நிறுத்தப்படுவான். அப்போது அவனிடம் ஐந்து கேள்விகள் கேட்கப்படும். இந்த ஐந்து கேள்விகளுக்கும் உரிய விடையை அவன் வாழும் போதே செய்திருக்க வேண்டும். அந்த கேள்விகள் என்னென்ன தெரியுமா?

1. உன் வாழ்க்கை காலத்தை எந்தெந்தப் பணிகளில் செலவிட்டாய்?
2. மார்க்கக் கல்வி பெற்றிருந்தால், அதன்படி நடந்து கொண்டாயா?
3. பணத்தை என்னென்ன வழிகளில் சம்பாதித்தாய்?
4. எந்தெந்த வழியில் அதைச் செலவிட்டாய்?
5. உன் உடல் உழைப்பை என்னென்ன பணிகளுக்காகக் கொடுத்தாய்?

முதல் கேள்விக்கு, ''நான் அரசு ஊழியன், நான் வங்கி ஊழியன்,'' என்ற பதிலெல்லாம் சொல்ல முடியாது. நீ என்னென்ன நல்ல செயல்களைச் செய்தாய் என்பது பற்றியே அங்கு பேச முடியும்.

மார்க்கக் கல்வி குறித்த அடுத்த கேள்விக்கு, மத நூல்கள் சொல்லும் நல்ல கருத்தைப் படித்தால் மட்டும் போதாது. அதைக் கடைபிடித்திருக்க வேண்டும். அவற்றை மீறி நடந்திருந்தால், தண்டனையிலிருந்து தப்ப முடியாது.


பணத்தை நல்ல வழியில் சம்பாதித்து, நல்ல வழியில் செலவழித்திருந்தால் பிழைத்தோம்.

இல்லாவிட்டால், நரகத்தில் துன்பப்பட வேண்டியதுதான். இறைவனால் தரப்பட்ட இந்த உடலைக் கொண்டு நல்ல செயல்கள் எத்தனை செய்தோம் என்பதற்கும் கணக்கு வேண்டும்.

இந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் வகையில், நாம் ஒழுக்கமான வாழ்வை மேற்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால், நரகத்தில் உழல வேண்டியது தான்!

தொகுப்பு: அஸாருதீன்

- ''அரிய செயல்கள் அனைத்தும் விடாமுயற்சியாலேயே அடையப் பெற்றிருக்கின்றன; வெறும் வலிமையால் மட்டும் அல்ல.'' - சாமுவேன் ஜோன்ஸன்
- ''பொதுவாக, வெற்றி என்பது, மற்றவர்கள் கைவிட்டு விட்ட பின்பும் அயராமல் தொடர்வதாலேயே கிட்டுவதாகும்.'' - வில்லியன் பெதர்
- ''நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர, வேறு யாராலும் தடுக்க முடியாது.'' - ப்ரெமர்
- ''ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை. முயற்சியில்லாத ஆசையால் பயனில்லை.''
- ''உன்னிடம் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிக்கொணரும் வழி விடா முயற்சியும், தொடர்ந்த உழைப்புமே ஆகும்; வலிமையோ, புத்திசாலித்தனமோ அல்ல.'' - சேர். வின்ஸ்டன் சேர்ச்சில்
- ''நான் மெதுவாக நடப்பவன்தான்; ஆனால், ஒருபோதும் பின்வாங்குவதில்லை.'' - ஆபிரஹாம் லிங்கன்




# முடிவெடுக்கும் திறன்

100 முறை சிந்தனை செய்யுங்கள். ஒரே ஒரு முறை மட்டுமே முடிவெடுங்கள். மிக எளிமையான பயிற்சிகளின் மூலம் யார் வேண்டுமானாலும் முடிவெடுக்கும் திறமையை வளர்த்துக் கொள்ள முடியும்.

முடிவெடுக்கும் திறன் படைத்தவர்கள் வாழ்வின் எல்லா தடைக் கற்களையும் எளிதாகக் கடந்து செல்வது நிதர்சன உண்மை.

உலகில் சாதனையாளர்களின் எண்ணிக்கை குறைவாகவும், சாமானியர்களின் எண்ணிக்கை அதிகமாகவும் இருப்பது ஏன்? சாதனையாளர்கள் எல்லோரும் வானத்திலிருந்து குதித்தா வந்தார்கள்? ஏன் நம்மாலும் சாதிக்க முடியாது? அதே இரண்டு கைகள், இரண்டு கால்கள், இரண்டு கண்கள், காதுகள், ஒரு வாய், ஒரு மூக்கு, ஒரு மூளைதானே?

ஒரு நாளைக்கு 24 மணிநேரம் என்பதும் அனைவருக்கும் பொதுவானது தானே? அப்புறம் எப்படி ஒரு சிலரால் மட்டும் மிகப்பெரிய அளவில் பிரகாசிக்க முடிகிறது? பெரும்பாலானவர்களால் முடிவதில்லை? காரணம் இதுதான்.

சாதனையாளர்கள் சரியாக முடிவெடுப்பவர்களாக இருக்கிறார்கள். எந்தப் பிரச்சினைக்கு, எப்போது, என்ன மாதிரியான தீர்வுகள் சரி என்று துல்லியமாகக் கணிக்கிறார்கள்.

மிக எளிமையான பயிற்சிகளின் மூலம் யார் வேண்டுமானாலும் முடிவெடுக்கும் திறமையை வளர்த்துக் கொள்ள முடியும்.

ஒரு விஷயத்தில் மட்டும் தெளிவாக இருங்கள்! உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நல்லது கெட்டதுக்கும் நீங்கள், நீங்கள் மட்டுமே காரணமாக இருக்கிறீர்கள். ஆகவே, உங்களின் சிறப்பான, மிகப்பெரிய வெற்றிகளையும் (இறைவனின் துணை கொண்டு) நீங்களேதான் தீர்மானிக்கிறீர்கள்.

அந்த வெற்றிகளை உங்களுக்குக் கொண்டுவந்து சேர்ப்பது, உங்களுடைய முடிவெடுக்கும் திறன்தான்.

அணு சக்தியை விட ஆற்றல் வாய்ந்தது முடிவெடுக்கும் திறமை! சரியான நேரத்தில், மிகச் சரியாக எடுக்கப்படும் முடிவுகள்தான் வெற்றியாளர்களின் இரகசியம் எனச் சொல்லலாம். ஒரு மாணவன், தான் எந்தத் துறையில் செல்ல வேண்டும் என்று முடிவு எடுக்கிறானோ அந்தத் துறையில் கால் பதித்தால் அவனால் முத்திரை பதிக்க முடியும்.

உலகிடம் இருந்து பாடம் கற்றுக் கொண்டவர்கள், கற்றுக் கொள்கின்றவர்கள் சராசரி மனிதர்கள். எந்த மனிதரிடமிருந்து உலகம் பாடங்களைக் கற்றுக் கொள்கின்றதோ அவர் சாதனை மனிதர். நம்முடைய எதிர்பார்ப்புகள் வேண்டுமானால் நமக்கு ஏமாற்றங்களைத் தரலாம். ஆனால் காத்திருப்புகள் எந்தக் காலத்திலும் கவலை தருவதில்லை. 'காத்திருக்கப் போகிறேன்' என்ற முடிவும் கூட சரி என்றுதான் சொல்ல வேண்டும்.

நம்மிடம் இருக்கின்ற சில வேண்டாதவற்றை விட்டுவிட்டால் போதும், வெற்றி நம்மைத் தேடி வரும். நம்மிடம் இருக்கும் தாழ்வு மனப்பான்மை என்கிற இன்பீரியாரிட்டி காம்ப்ளக்ஸ், தான் என்கின்ற ஆணவம் சேர்ந்த சுப்பீரியாரிடி காம்ப்ளக்ஸ் விட்டு விட்டாலே போதும். அசையா சொத்தாக ஒரு மல்ட்டி டிரேடிங் காம்ப்ளக்ஸ் கட்டிவிடலாம். பலருக்கு பிரச்னையே 'நம்ம பாவம்' என்கின்ற ஒரு எண்ணம். நம் மீது நாம் கொள்கின்ற சுயபச்சாதாபம் விட்டொழிக்கின்ற நாளே நமக்குத் திருநாளாகும்.

தான் சார்ந்த தொழிலில் திறமையுடையவனாக இருப்பது என்பது வெற்றிக்கான அடிப்படைத் தகுதி ஆகும். எந்தச் செயலில் நம் திறமை வெளிப்படுகிறதோ அந்தச் செயல்தான் நமக்குத் தொழிலாக மாறிவிடுகிறது. ஒரு கோட்டைக்குத் தலைவனாக இருப்பதைக் காட்டிலும் சிறந்தது, செயல், தொழில் இரண்டிலும் திறமையாக இருப்பது. நம் உழைப்பும் நேர்மையும் வெற்றியைத் தருகின்றது என்று சொன்னால், அந்த வெற்றி நிலைத்திருப்பது நம்முடைய தீர்க்கமான முடிவுகள் எனலாம்.

வெற்றி என்பது நமது வாடிக்கைகளாக இருந்தால் முயற்சிகளும் பயிற்சிகளும் நமக்கு வேடிக்கைகளாகவும், பழக்கங்களாகவும் மாறிவிடும்.

100 முறை சிந்தனை செய்யுங்கள். ஒரே ஒரு முறை மட்டுமே முடிவெடுங்கள்.

## நூல் அறிமுகம் விக்டர் ஐவனின்

# “மறுமலர்ச்சிக்கான பாதை”

## இலங்கை நெருக்கடிக்கான தீர்வு என்ன?

இந்நூல் சிங்கள மொழியில் விக்டர் ஐவன் அவர்களால் எழுதப்பட்டு தமிழ் மொழிக்கு 'மறுமலர்ச்சிக்கான பாதை' என்ற தலைப்பில் மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஏறத்தாள முப்பது வருடங்களாக நிலவிய யுத்தத்தின் காரணமாகவும், வன்முறை மோதல்களின் விளைவாகவும் இலங்கையில் வாழும் சகல இனக் குழுமங்களைப் போலவே இலங்கையின் அரச இயந்திரமும் பாரிய அளவில் சீரழிந்து உருக்குலைந்து போயுள்ளது.

கடந்த காலங்களில் மனிதப் படுகொலைகள், உருக்குலைந்த உடல்களை காட்சிப்படுத்தல், மரண பயம் என்பன சாதாரண விடயங்களாக மாறி இருந்தன. சிங்கள தெற்கிலும் தமிழ் வடக்கிலும் நடந்து முடிந்த வன்முறை மோதல்களின் விளைவாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் மரணத்தை தழுவியுள்ளனர்.

பாதுகாப்புக் கருதி நாட்டை விட்டு வெளியேறியவர்களின் எண்ணிக்கையும் இலட்சக் கணக்காகும். மரணமடைந்த அனைவரும் (ஜே.வி.பி, எல்.ரீ.ரீ.ஈ, இராணுவம்) இந்நாட்டின் புதல்வர்களும் புதல்விகளுமே என்ற உண்மையை விளங்கிக் கொள்ளக் கூடிய ஞானம் நாட்டின் தலைவர்களுக்கு இருக்கவில்லை.

இப்பயங்கரமான பின்னணியின் காரணமாக சட்டம், நீதி உள்ளிட்ட அரசின் அனைத்து நிறுவன அமைப்புக்களும் ஊழல் நிறைந்த, மக்களை நெருக்கீட்டுக்கு உட்படுத்தக்கூடிய, அழுகி துர்நாற்றம் வீசும் நிறுவனங்களாக மாறின.

எமது நாட்டில் இத்தகைய பயங்கரமான யுத்தமொன்று ஏன் ஏற்பட்டது என்பதைப் பற்றியும் ஓர் சொட்டு இரத்தம் சிந்தாது பெற்ற சுதந்திரத்தின் பின்னர் ஏறத்தாள 30 ஆண்டுகள் இடைவிடாது இரத்தம் சிந்தக் கூடிய நிலைமை ஏன் உருவாகியது என்பதைப் பற்றியும் தேடி ஆராய்ந்து பார்க்க வேண்டிய கடமைப்பாடு ஆட்சியாளர்களுக்கு இருந்த போதிலும் அதற்குத் தேவையான விவேகமோ ஞானமோ அவர்களிடம் காணப்படவில்லை.

எமது நாட்டின் நெருக்கடிகளை கீழ் வருமாறு சுருக்கமாக இப்புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு அவற்றை மீள் புனர்நிர்மாணம் செய்வதற்குப் பொருத்தமான தீர்வு மாதிரியொன்றையும் விக்டர் ஐவன் அவர்கள் முன்மொழிந்துள்ளார்.




நூல்: ''மறுமலர்ச்சிக்கான பாதை'' (பாகம் - 01 )

மொழிபெயர்ப்பு: எம்.ஆர்.எம். நளீம்

விலை: 290

- ஏறத்தாள 30 ஆண்டுகள் தொடர்ந்தேர்ச்சியான யுத்தம் ஒன்று ஏற்படக் காரணமென்ன?
- எமது நாட்டிலுள்ள இனக் குழமங்கள் (சிங்களவர்- தமிழர்- முஸ்லிம்கள்) மத்தியில் இனபேதம், மதபேதம், வர்க்கபேதம் தோன்றியமைக்கான காரணம் யாது?
- நிறுவன முறைமைகளில் ஏற்பட்டுள்ள ஊழல் மற்றும் சீரழிவு நிலைக்கான காரணங்கள்.
- எமது நாட்டை ஆட்சி செய்த, ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற தலைவர்களின், அரசியல் கட்சிகளின் சிந்தனை வறுமையும் குறுகிய நோக்கங்களும்.
- இலங்கையர் என்ற தேசிய அடையாளம் ஒன்றை கட்டியெழுப்புவதன் தேவையும் தடைகளும்.
- மேற்படி நெருக்கடிகளையும் சிக்கல்களையும் வெற்றிகொண்டு இந்நாட்டில் மறுமலர்ச்சியை மலரச் செய்வதற்கு சாத்தியமிக்க வழிமுறை, தீர்வு யாது?

இந்நூலின் உள்ளடக்கமாக இவையே காணப்படுகின்றன. விக்டர் ஐவன் அவர்கள் இலங்கையின் ஊடகவியல் துறையில் ஏறத்தாள 40 ஆண்டுகளாக இலங்கையின் நெருக்கடிகள் குறித்து எழுதி, பேசி, போராடி அழியா முத்திரை பதித்த ஓர் ஆளுமையாகும்.

சிங்கள மக்களினது மட்டுமன்றி தமிழர், முஸ்லிம் மக்களினதும் உள்ளங்களை வென்ற ஓர் மனிதராவார். அவரின் 40 ஆண்டு கால அரசியல், சமூக ரீதியான போராட்டத்தின் அறுவடையே இந்நூல்.

**கிடைக்கும் இடம்:**

01. M.J.M. பிர்தௌஸ்
Eazy Cash No - 077 9685124

02. இஸ்லாமிய புத்தக நிலையம்,
77, தெமடகொட வீதி, மருதான.
011- 2686030

03. ராவய புத்தக நிலையம்
83, பிலியந்தல வீதி, மஹரகம.
011- 2851673

- எம்.ஜே.எம். பிர்தௌஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒக். 15 இல் ஆரம்பிக்கிறது ஸாஹிரா சுபர் 16 கால்பந்தாட்ட தொடர்



போட்டியில் பங்குபற்றும் 16 அணிகளும் 4 குழுக்களாகப் பிரிக்கப்படுவதுடன் ஒவ்வொரு குழுவிலும் முதலிடத்தைப் பிடிக்கும் அணிகள் கிண்ணத்திற்கான அரையிறுதிக்குத் தெரிவாகும். ஒவ்வொரு குழுவிலும் இரண்டாவது இடங்களை பிடிக்கும் அணிகள் பிளேட் கிண்ணத்திற்கான அரையிறுதிக்கு தகுதி பெறவுள்ளன. அந்தந்த குழுக்களில் 3 ஆவது மற்றும் 4 ஆவது இடங்களை பிடிக்கும் அணிகள் போவ்ல் (Bowl) மற்றும் கேடயத்திற்கான அரையிறுதிகளுக்கு தகுதிபெறவுள்ளன.

குழுநிலை போட்டிகள் ஒரு பாதி, 25 நிமிடங்களை கொண்டதாக இடம் பெறவிருப்பதோடு பிளேட், போவ்ல் மற்றும் கேடய போட்டிகள் ஒரு பாதி, 20 நிமிடத்தைக் கொண்டதாக நடத்த ஏற்பாடாகியுள்ளது. கிண்ணத்திற்கான அரையிறுதி ஒரு பாதி, 30 நிமிடத்தை கொண்டதாகவும் இறுதிப் போட்டி ஒரு பாதி, 35 நிமிடத்தை கொண்டதாகவும் நடைபெறும்.

கடந்த வருடத்தைப் போன்று போட்டியில் பங்கேற்கும் 16 அணிகளுக்கும் 16 வெவ்வேறு அனுசரணையாளர்கள் பங்கேற்கின்றனர்.

| A | B | C | D |
|---|---|---|---|
| வெஸ்லி கல்லூரி | திரித்துவக் கல்லூரி | புனித ஜோசப் | ஸாஹிரா கல்லூரி |
| ஹமீட் அல் ஹுஸைனி | இந்துக் கல்லூரி | புனித பெனடிக்ட் | மாரிஸ் ஸ்டெல்லா |
| இசிபதன | புனித பேதுரு கல்லூரி | ரோயல் கல்லூரி | டி மெசனொட் |
| நாலந்த | புனித ஹென்ரியரசர் | லைசியம் | கேட்வே கல்லூரி |

கால்பந்து வரலாற்றில் கொழும்பு ஸாஹிரா கல்லூரி 100 ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதை முன்னிட்டு 13 ஆவது ஸாஹிரா சுப்பர் 16 கால்பந்து சம்பியன் ஷிப் போட்டித் தொடரை கோலாகலமாக நடாத்தவுள்ளது.

இதன் அங்குரார்பண நிகழ்வாக பிரபலங்களின் கால்பந்தாட்ட போட்டித் தொடரொன்று கடந்த 07 ஆம் திகதி மாலை ஸாஹிராக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஸாஹிரா சுப்பர் 16 கால்பந்தாட்ட தொடர் ஒக்டோபர் 15 முதல் 22 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது. கடந்த 12 ஆண்டுகளாக இந்த தொடர், அணிக்கு எழுவர் கொண்ட கால்பந்து தொடராக ஏற்பாடு செய்யப்பட்டது. அதனை இம்முறை அணிக்கு 11 பேர் கொண்ட தொடராக நடாத்துவதற்கு ஸாஹிரா கல்லூரி பழைய மாணவர் சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த ஆண்டு தொடரில் ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரி, கேட்வே சர்வதேச பாடசாலை, லைசியம் சர்வதேச பாடசாலை மற்றும் யாழ்ப்பாணம் புனித ஹென்ரியரசர் கல்லூரி ஆகிய நான்கு பாடசாலைகள் புதிதாக இணைக்கப் பட்டுள்ளன.

## பிரான்ஸ், போர்த்துகல் உலகக் கிண்ணத்துக்கு தகுதி




அடுத்த வருடம் ரஷ்யாவில் நடைபெறவுள்ள பிபா உலகக் கிண்ணத்துக்கான, ஐரோப்பிய நாடுகளைத் தெரிவு செய்யும் தகுதிகாண் போட்டித் தொடரின் B குழுவுக்கான போட்டியில் வெற்றி பெற்றதனூடாக போர்த்துகல் அணி உலகக் கிண்ணத்துக்கான வாய்ப்பை தக்கவைத்துள்ளது.

இதேவேளை A குழுவில் பெலாரஸ் அணியை எதிர்கொண்ட பிரான்ஸ் 2-1 கோல் கணக்கில் வெற்றிபெற்று, உலகக் கிண்ணத்துக்கு தகுதிபெற்றதுடன், நெதர்லாந்து அணி, சுவீடன் அணியை வெற்றி கொண்டும் உலகக் கிண்ண வாய்ப்பை இழந்துள்ளது. நெதர்லாந்து அணியால் A குழுவில் 3 ஆவது இடத்தையே பிடிக்க முடிந்தது. 2014 ஆம் ஆண்டு உலக்கிண்ணத்தின் 3 ஆவது இடத்தை பிடித்திருந்த நெதர்லாந்து அணி, இம்முறை தகுதிபெறத் தவறியுள்ளமை அந்நாட்டு ரசிகர்களுக்கு ஏமாற்றமளித்துள்ளது.




தினகரன் பத்திரிகையின் இணையாசிரியர் மர்லின் மரிக்கார் ஊடகத்துறைக்கு ஆற்றிய சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மதுரங்குளி, மல்லம்பிட்டி ட்ரீம் சென்டர் மண்டபத்தில் நடைபெற்றது.

அங்கவீனர்களுக்கான விளையாட்டு போட்டி:

## சாதனை செய்யக் காத்திருக்கும் முஹம்மத் ஷெரீப் மொஹமட் இர்ஷாத்

இந்திய Jeypoor Foot Programe திட்டம் இலங்கையில் பல வருடங்களாக அங்கவீனர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளை நடாத்தி வருகின்றது. இந்நிறுவனம் நடாத்தும் 2017 ஆம் ஆண்டிற்கான போட்டிகள் எதிர்வரும் 15 ஆம் திகதி வெலிக்கடை சிறைச்சாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இம்முறை இடம்பெறவுள்ள போட்டியில் கஹடோவிட்ட பிரதேசத்தைப் பிறப்பிடமாக கொண்ட முஹம்மத் ஷெரீப் முஹம்மத் இர்ஷாத் பங்குபற்றவுள்ளார். ஏறாவூரில் நடந்த ரயில் விபத்தில் இரு பாதங்களையும் பறிகொடுத்த இவர், 1996 ஆம் ஆண்டு முதல் ஜெய்பூர் திட்டம் நடத்திவரும் போட்டிகளில் பங்குபற்றி வருகிறார்.

இந்நிறுவனம் 2002 முதல் 2015 வரையில் நடத்திய சைக்கிளோட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்றுள்ள இர்ஷாத், கடந்த வருடம் நடைபெற்ற சைக்கிளோட்டப் போட்டியில் 2 ஆம் இடத்தைப் பெற்றிருந்தார். இவ்வருடத்திற்கான போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ளது.



அகில இலங்கை ரீதியாக நடைபெறும் இப்போட்டிகளில் குண்டு எரிதல், பறிதி வீசுதல், 100 மீற்றர் ஓட்டப் போட்டி, சைக்கிளோட்டப் போட்டி என 4 போட்டிகளில் இவர் கலந்துகொள்ளவுள்ளார். 100 மீற்றரில் கடந்த இரண்டு வருடங்களாக முதலிடம் பெற்றுள்ளார். குண்டு வீசுதலில் மாவட்ட மட்டத்தில் பல இடங்களை பெற்றுள்ள இவர், அத்தனகல்ல அஞ்சல் நிலையத்தின் உதவி அஞ்சல் நிலைய அதிகாரியாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ‘நிறவெறியினால் ஒதுக்கப்பட்டேன்.’



ஆஸி வீரர் உஸ்மான் கவாஜா

அவுஸ்திரேலிய டெஸ்ட் கிரிக்கெட் அணியில் இடம்பிடித்து ஒரு சில போட்டிகளில் விளையாடி வருகின்ற பாகிஸ்தான் வம்சாவளி வீரரான உஸ்மான் கவாஜா நிற பேதம் மற்றும் இனவெறி விமர்சனங்கள் காரணமாக தான் சிறு வயது முதல் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிட்டதாக முதற் தடவையாக தெரிவித்துள்ளமை விளையாட்டு உலகில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் 3 ஆம் இலக்க துடுப்பாட்ட வீரரான உஸ்மான் கவாஜா, 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆஷஸ் தொடரில் 419 ஆவது டெஸ்ட் வீரராக அறிமுகம் ஆனார். இதன்படி, ஆஸி அணிக்காக டெஸ்ட் வரம் பெற்ற முதல் முஸ்லிம் வீரராகவும், 7 ஆவது வெளிநாட்டு வீரராகவும் இடம்பிடித்தார்.

இதனையடுத்து 2013 ஆம் ஆண்டு இந்திய அணியுடனான டெஸ்ட் தொடரின் போது சக வீரர்களான ஷேன் வொட்சன் மற்றும் மிட்செல் ஜொன்சன் ஆகியோருடன் ஏற்பட்ட தகராறினால் போட்டித் தடைக்குள்ளான உஸ்மான் கவாஜா, சுமார் 2 வருடங்களுக்குப் பிறகு நியூசிலாந்து அணியுடனான டெஸ்ட் தொடரில் மீண்டும் விளையாடி முதலாவது டெஸ்ட் சதத்தையும் பெற்றுக் கொண்டார்.

எனினும், இதுவரை 24 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 45.47 என்ற சராசரியுடன் 1728 ஓட்டங்களைக் குவித்துள்ள உஸ்மான் கவாஜா, அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள இங்கிலாந்து அணியுடன் நடைபெறவுள்ள 5 போட்டிகளைக் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரிற்கான குழாமில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.






கடந்த 30.09.2017 அன்று திஹாரியில் இயங்கும் அத்தர்பிய்யா அல் இஸ்லாமிய்யா நிறுவனம் ‘பெற்றார் பிள்ளை உறவு என்ற தலைப்பில் செயலமர்வு ஒன்றையும் முதியோர் இல்லம் ஒன்றை தரிசிக்கும் நிகழ்வு ஒன்றையும் நடாத்தியது. இந்நிகழ்வின் அங்குரார்ப்பண வைபவத்தில் அத்தர்பிய்யா அல் இஸ்லாமிய்யா நிறுவனத்தின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் மிஹ்ழார் எம். ரஷீத் (நளீமி) உரையாற்றுவதையும் செயலமர்வில் வளவாளர் ஹூஸ்னி [illegible] பெற்றார் மாணவர்களையும் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.